மாநகர சபை, யாழ்ப்பாணம்.

ஜுலை. 27 - ஓகஸ்ட் 02, 2008 July 27 - Aug. 02, 2008 பக்கங்கள் - 28 35.00



REGISTERED AS A NEWS PAPER IN SRILANKA

சுடர் ஒளி

THE SUDAROLI

வார மலர்

# பே(ா)ரவலம்



## எட்டு ஆண்டுகளின் பின் திரும்பவும் ஒரு தலைப்பட்ச யுத்தநிறுத்தம்!

## கொழும்பின் போக்கு இந்தியா கொதிப்பு!

# இனிமேல்தான் மரணப்போராட்டம்!

'பயங்கரவாதத்துக்கு எதிரான போர்' என்ற தொனிப்பொருளில் படையினர் ஆரம்பித்த 'மனிதாபிமான நடவடிக்கை' இரண்டு ஆண்டுகளைப் பூர்த்திசெய்யும் இந் நேரத்தில் -

வடக்கை முழுமையான கட்டுப்பாட்டில் விரைவில் கொண்டுவருவோம் என அரச தரப்பில் இருந்து சூளுரைகள் வெளியிடப் பட்டுள்ளன.

வடக்கில் கிளிநொச்சியும் முல்லைத் தீவும் வவுனியாவில் ஒரு பகுதியுமே விடுதலைப் புலிகளின் கைகளில் இருக்கின்றன. அவையும் விரைவில் பிடுங்கிஎடுக்கப்பட்டு விடும் என்று அரசின் பாதுகாப்பு விவகாரங்களுக்கான பேச்சாளரும் அமைச்சருமான கெஹலிய ரம்புக்வெல மார்தட்டி அறிவிப்பு விடுக்கின்றார்.

கிளிநொச்சி, முல்லைத்தீவு, வவுனியா வடக்கு ஆகிய பிரதேசங்கள் அரசுப் படைகளிடம் விழுமா? அல்லது அந்தப் பிரதேசங்களுடன் வடக்கின் முழுப்பகுதியும் விடுதலைப் புலிகளின் கைகளில் விழுமா? என்பதே இன்று எழுந்துள்ள கேள்வியாகும்.

மன்னாரில் ஆரம்பித்த நடவடிக்கை மூலம் விடத்தல்தீவு, இலுப்பக்கடவை போன்றவற்றை மீட்ட வெற்றியுடன், வடக்கை விரைவில் மீட்போம் என்று மார்தட்டிக் கொண்டு அரசுத் தரப்பில் இருந்து தகவல்கள் வெளியாகலாம்.

மறுபுறத்தில் அசாத்திய மௌனம் காத்துவரும் விடுதலைப் புலிகள் 'நிசப்தம்' கலைந்து எடுக்கப் போகும் - முன்னெடுக்க போகும் -வியூகம்தான் வடக்கு யார்

## வன்னியில் போக்கிடமின்றி பேரவலத்தில் பொதுமக்கள்

கையில என்பதை தீர்மானிக்கப் போகின்றது.

கிழக்கில் இருந்து தமது படைகளை, வளங்களை தந்திரோபாயமாக வடக்கே நகர்த்தியது போன்று வடக்கில இருந்து படைகளை, வளங்களை விடுதலைப் புலிகள் வேறு ஓரிடத்துக்கு நகர்த்தப் போவதில்லை.

என்ன விலைகொடுத்தும் தமது கேந்திர முக்கியத்துவம் வாய்ந்தமையப் பிரதேசத்தை பாதுகாக்கவே அவர்கள் முனைவார்கள். அப்போதுதான் பெரும்போர் வெடிக்கப் போகின்றது.

'ஜெயசிக்குறு' நடவடிக்கை மூலம் வவுனியாவில் இருந்து மாங்குளம் ஊடாக ஒட்டிசுட்டான் வரை முன்னேறி நிலை கொண்டிருந்த படையினரை சமராடி ஒரு வாரத்தில் துவசம்செய்த வரலாற்றைக் கொண்டவை விடுதலைப்புலிகளின் படையணிகள் எனப் புலிகளின் வடபோர் முனைத் தளபதியான கேணல் தீபன் அறிவித்திருக்கிறார்.

எமது பிரதேசங்களுக்குள் முழுமையாக வந்த பின்னர் நாம் கொடுக்கப்போகும் பதிலடிதான் ஸ்ரீலங்காப் படைகளின் முதுகை முறிக்கும் என்று மற்றொரு தளபதியான லெப்டினன்ட் கேணல் அமுதாப் சூளுரைத்துள்ளார்.

வன்னியில் படையினர் அகலக்கால் வைக்கும் போதுதான் சமர் வெடிக்கப் போகின்றது. அப்போதுதான் யாருக்கு வெற்றி தோல்வி என்பதை தீர்மானிக்க முடியும்.

இலங்கை அரசுக்கும்-விடுதலைப் புலிகளுக்கும் இடையிலான போர் நிறுத்த உடன்படிக்கை முறிந்து, 2006ஆம் ஆண்டு ஒகஸ்ட் மாதம் 11ஆம் திகதி வடபோர் முனையில் வெடித்தபோர் இரண்டாம் ஆண்டை பூர்த்திசெய்து மூன்றாம் ஆண்டில் காலடி எடுத்துவைக்கும் சமயம் இது.



கிழக்கில் 2006ஆம் ஆண்டு மாவிலாறில் ஆரம்பித்த அரசின் 'மனிதாபிமானநடவடிக்கை' என்ற பெயரிலான போர், விடுதலைப் புலிகளின் கடும் எதிர்ப்பு இன்றி கிழக்கில் அரங்கேறியது.

ஏதோ புலிகளை அழித்துவிட்டோம், அவர்களின் வளங்களை மீட்டுவிட்டோம் என்ற பெரும் பிரசாரத்துடன் அரசுப் படைகள் பெரும் போராடி கிழக்கை மீட்டதாக அரசுத்தரப்பில் குதூகலம் கொண்டாடப் பட்டது.

விடுதலைப் புலிகள் தந்திரோபாய நடவடிக்கையாகத் தமது படையணிகள், வளங்களை வடக்குக்கும் அம்பாறைக்கும் பத்திரமாக மாற்றிய பின்னர், வெறுமையாகக் கிடந்த கிழக்கை படைகள் மீட்டுவிட்டு, பெரும்நடவடிக்கை மூலம் - பெரும் தாக்குதல் மூலம் - கிழக்கை மீட்டோம் எனப் பெருமிதம் கொண்டாடின.

அதேபாணியில் இப்போது மன்னாரில் இலுப்பைக்கடவை, விடத்தல்தீவை பெரும் தாக்குதல்மூலம் மீட்டுவிட்டதாகப் பெருமிதம் கொள்கிறது படைத்தரப்பு.

புலிகள் ஓடிவிட்டார்கள், அவர்களின் வளங்களை மீட்டுவிட்டோம். அவர்களின் 40, 50 பேரைக் கொன்று விட்டோம் என்று பெரும் பிரசாரங்கள் செய்து வெற்றியைக் கொண்டாடுகிறார்கள்.

இனித்தான் 'கண்டம்' தாண்ட வேண்டும் என்ற உள்விடயம் தெரியாமல், வடக்கை விரைவில் முழுக் கட்டுப் பாட்டில் கொண்டு வந்து விடுவோமென பாதுகாப்பு விவகாரத் துக்கான பேச்சாளர் கொக்கரிக்கிறார்.

ஓரளவு யதார்த்த நிலை - களநிலை- புரிந்த இராணுவத்தளபதி மட்டும் உண்மையை உணர்ந்தவராக இரு வருடங்களில் விடுதலைப் புலிகளை ஒழித்துவிடுவோம் என்று இப்போதும் - மீண்டும் - கால அவகாசத்தைத் தள்ளிப்போடுகின்றார்.

வன்னியில் அகலக்கால் வைக்கும் படையினர் இனித்தான் முக்கிய கேந்திர

**யாழவன்**

நிலைகளுக்குள் புகப்போகிறார்கள். அப்போது வெடிக்கப்போகும் போர்தான் வடக்கு யாரின் கையில் விழப்போகின்றது என்பதை தீர்மானிக்கப்போகின்றது.

சாவா? வாழ்வா? - என்ற மரணப் போராட்டம் இனித்தான் ஆரம்பிக்கப் போகின்றது. அந்தப் போராட்டம்தான் இந்த அரசின் தலைவிதியை நிர்ணயிக்கப் போகின்றது என எதிர்பார்க்கலாம்.

விடுதலைப் புலிகள் மௌனம் கலைந்து முன்னெடுக்கப் போகும் போர், வன்னிக் களமுனையை அதிர வைக்கப் போகின்றது என்பது திண்ணம்.

மணலாறு, மன்னார், முகமாலை என மும்முனைகளிலும் வெடிக்கப்போகும் போர் - இரு நாட்டுப் படைகள் மோதும் போராக நடக்கப் போகின்றது.

அந்தப் போரின் வெற்றி - தோல்வி யாருக்கு? அதுகுறித்து இப்போது எதிர்வு கூற முடியாது என்கின்றனர் இராணுவ விமர்சகர்கள்.

ஒன்றுமட்டும் உண்மை, வெற்றி கொள்ள முடியாத போர் என வர்ணிக்கப்படும் போர் தொடர்ந்து கொண்டுதான் இருக்கப் போகின்றது.

***

# படைத் தலைமையிடமிருந்தும் பேரினவாதத் திமிர்க் கூச்சல்!

இலங்கை சுதந்திரம் அடைந்த காலம் முதல் அரசியல்வாதிகள் பக்கத்தில் இருந்தே போரினவாதக் கூச்சல் வந்து கொண்டிருக் கின்றது.

1956 ஆம் ஆண்டு எஸ்.டபிள்யூ. ஆர்.டி. பண்டாரநாயக்க ஆரம்பித்து வைத்த பேரினவாத கூச்சல், சிறிமாவோ, ஜே.ஆர். கே.எம்.பி. இராஜரத்தின, சிறில்மத்தியூ, லலித் அத்துலத்முதலி, காமினி திஸநாயக்க, எஸ்.டி பண்டாரநாயக்க, பிலிப்குணவர்த்தன என தொடர்ந்தது.

இன்று மஹிந்த ராஜபக்ஷ, ஜே.வி.பியின் விமல் வீரவன்ஸ, சோமவன்ச அமரசிங்க, ஹெலஉறுமயவின் சம்பிக்க ரணவக்க ஆகியோர் மூலம் பேரினவாதக் கூச்சல் தொடர்ந்து கொண்டிருக்கின்றது.

பிந்திய தகவலின்படி, படைகளின் உச்சநிலையில் நாட்டின் பாதுகாப்புக்கு பொறுப்பாக இருக்கும் இராணுவத்தளபதி லெப்டினன்ட் ஜெனரல் சரத்பொன்சேகா விடம் இருந்து பேரினவாதக் கூச்சல் வந்திருக்கிறது.

''சிறுபான்மையினரை பெரும்பான்மையினர் ஒரு நாட்டில் ஆழ்வார்களாயின் அது பெரும் ஆபத்துக்கு உரியதாகும். அது பெரும் பிரச்சினையாக அமையும். அது நடைபெறமுடியாத ஒன்றாகும்.''

''இந்த நாடு எப்போதும் 74 சதவீதத்தினரான சிங்கள இனத்தவராலேயே ஆளப்படும்.''

''இந்த நாட்டை பாதுகாக்க வேண்டுமெனில் - நாம் உயிர் வாழவேண்டுமானால் - நாம் தியாகம் செய்தேயாக வேண்டும்.''

இப்படி படை உயர்நிலையில் உள்ள தளபதி கூறியிருக்கிறார்.

அரசியல்வாதிகள் தமது வாக்கு வங்கியைத் தக்க வைப்பதற்காக போரினவாத போக்கைக் கடைப்பிடிக்கலாம். உயர் படை அதிகாரி இப்படி போரினவாதக் கூச்சல் போடுவது அவர் அரசியலில் பிரவேசிக்க அடித்தளம் போடுகிறாரா என்ற சந்தேகத்தை எழுப்பியுள்ளது.

நாட்டின் அரசியல்வாதிகள் மக்களை சமமாக நடத்தாமல் தமது அரசியல் பந்தயத்துக்காக பேரினவாத கோஷத்தை எழுப்பலாம். ஆனால், நாட்டின் சகல மக்களையும் இன, மொழி, சமய வேறுபாடின்றி சமமாக நடத்தவேண்டிய படைத் தலைமையிடம் இருந்து போரினவாதக் கோஷம் வரலாமா என்று கேட்கிறார்கள் மக்கள்.

(27ஆம் பக்கம் பார்க்க)



# காங்கிரஸ் அரசு பிழைத்தது!


அத்வானி


சோனியாகாந்தி

இந்தியாவின் காங்கிரஸ் அரசு கவிழும் ஆபத்திலிருந்து தப்பிவிட்டது. கடந்த செவ்வாயன்று இந்திய நாடாளுமன்றில் நடந்த நம்பிக்கை வாக்கெடுப்பில் அரசுக்கு 275 வாக்குகளும் எதிராக 256 வாக்குகளும் கிடைத்தன. இதனால் இரண்டு வாரங்களாக டில்லியில் இருந்து வந்த அரசியல் பரபரப்பு தற்காலிகமாக அடங்கியது.

இந்த வாக்கெடுப்பு மன்மோகன் அரசின் பெரும்பான்மையை நிரூபிப்பதுடன் மட்டுமன்றி அமெரிக்காவுடனான இந்தியாவின் உத்தேச அணுசக்தி ஒப்பந்தம் மீதான வாக்கெடுப்பாகவும் அமைந்ததே முக்கிய விடயமாகும்.

அணுவிஞ்ஞானியும் முன்னாள் ஜனாதிபதியுமான அப்துல் கலாம் உள்ளிட்ட - கல்விகற்ற - இந்தியர்கள் பெரும்பான்மையினரின் ஆதரவை இந்த ஒப்பந்தம் பெற்றிருந்ததாக கணிப்புகளில் தெரிந்தது. எனினும் இந்த ஒப்பந்தம் தொடர்பான கம்யூனிஸ்ட்களின் - இடதுசாரிகளின் - கண்மூடித்தனமான அமெரிக்க எதிர்ப்பாலேயே அரசுக்கு பெரும்பான்மை இழப்பு ஏற்பட்டு நம்பிக்கை வாக்குவரை செல்ல வேண்டியதாயிற்று.

இந்தியா மட்டுமன்றி அகில உலகும் இந்த வாக்கெடுப்பை பரபரப்புடன் கவனித்துக் கொண்டிருந்தது. இதுகாறும் இந்திய பிரதமர்கள் பலர் நம்பிக்கை வாக்கெடுப்பை அல்லது நம்பிக்கையில்லாப் பிரேரணைகளை எதிர்கொண்டு வெற்றி அல்லது தோல்வியைக் கண்டுள்ளனர்.

ஆனால் இந்த அரசின் மீதான நம்பிக்கை தீர்மானம் போன்று முழு உலகின் கவனத்தையும் ஈர்த்த நம்பிக்கை வாக்கெடுப்பு ஒன்று இந்திய அரசியல் வரலாற்றில் நடந்ததே இல்லை.

உலக முக்கியத்துவம் வாய்ந்த இந்த வாக்கெடுப்பில் அரசைக் கவிழ்க்கும் வாய்ப்பை எதிரணியினர் கோட்டை விட்டனர். வாஜ்பாய் போன்ற பழுத்த அரசியல்வாதி ஒருவர் இல்லாத குறையை பிரதான எதிர்க்கட்சியான பாரதீய ஜனதாக் கட்சியில் தெளிவாக இந்த வாக்கெடுப்பின் போது உணரமுடிந்தது.

அடுத்த பிரதமராக பாரதீய ஜனதாவில் முன்கூட்டியே 'அபிஷேகம்' செய்யப்பட்டு அடையாளம் காட்டப்பட்ட அத்வானியின் சாமர்த்தியமின்மை பலருக்கும் அதிர்ச்சியைத் தந்தது.

இவரை நம்பி அடுத்த தேர்தலில் எப்படி இறங்குவது என பாரதீய ஜனதாக் கூட்டணி இப்போது முழியைப் பிதுக்கிக் கொள்ளும் திகைப்பில் ஆழ்ந்துள்ளது.

வழமையாக அரசொன்று நம்பிக்கை கோரும் அல்லது நம்பிக்கையில்லாப் பிரேரணை ஒன்றுக்கு முகம் கொடுக்கும் போது நாடாளுமன்ற எதிர்க்கட்சித் தலைவரின் மீதுதான் சகலரதும் கண்களும் இருக்கும்.

வாஜ்பாய் அரசின் பதவிக் காலத்தின் இறுதிக் கட்டத்தில் இவ்வாறான ஒரு வாக்கெடுப்பு விவாதம் நடந்தது பலருக்கு மறந்திருக்கலாம். அதில் எதிர்கட்சித் தலைவர் சோனியா காந்தி அனல் பறக்க - அதுவும் சுத்தமான ஹிந்தியில் - வெளுத்து வாங்கினார். அவரது எதிரிகள் கூட இவர் பிரதமர் ஆகும் தகுதியை அடைந்துவிட்டார் என்று அன்றைய தினம் ஒப்புக்கொண்டனர். வாஜ்பாயின் கண்களில் கூட ஆச்சரியம் தெரிந்தது. இவ்வாறான ஒரு வாத விவாதத் திறமையே அத்வானியிடம் எதிர்பார்க்கப்பட்டது. ஆனால் அவர் உப்புச்சப்பற்ற உரையொன்றை ஆற்றிச் சுத்தமாக சொதப்பிவிட்டார். அதுமட்டுமன்றி அவரது உரையில் வரலாற்று விவரங்களை கூட தவறாகக் கூறினார். ஒரு கட்டத்தில் ''நேரு கூட அணுபரவல் ஒப்பந்தத்தை (Nuclear Non - Proliferation Treaty) எதிர்த்தவர்தான்'' என அத்வானி கூறினார். உடனே குறுக்கிட்ட வெளியுறவு அமைச்சர் பிரணாப் முகர்ஜி ''நேரு 1964இல் இறந்தார். ஆனால் இந்த NNPT ஒப்பந்தம் 1970இல் தான் உருவானது. அப்படியிருக்க NNPT பற்றி இறந்துபோன நேரு எப்படிக் கருத்து வெளியிட்டிருக்க முடியும்?'' என அத்வானியை மடக்கினார் அவர்

மீண்டும், பிரதமர் தனது நம்பிக்கைப் பிரேரணை மீது தானே வாக்களிக்கமுடியாத இயலாமையில் உள்ளார் என மன்மோகனைக் குத்திக் காட்டினார் அத்வானி. அதாவது மன்மோகன் நாடாளுமன்றத் தேர்தலில் வென்று எம்.பியாகாமல், ராஜ்யசபாவிற்கு - மாநிலங்கள் அவைக்கு - மாநில சட்டமன்றம் ஒன்றின் உறுப்பினர்களினால் தேர்ந்தெடுக்கப் பட்டு - எம்.பியானார். அதன்மூலமே அவர் பிரதமரானவர் என்பதையே அத்வானி அப்படிக் கூறினார். நாடாளுமன்றத்தில் நடக்கும் அரசின் மீதான நம்பிக்கை வாக்கெடுப்பில் நாடாளுமன்ற உறுப்பினர்களின் எம்.பிக்கள் மட்டுமே வாக்களிக்கலாம். மன்மோகன் நாடாளுமன்ற எம்.பி. அல்லர் என்பதால் அவரால் வாக்களிக்கமுடியாது என்பதையே இப்படிச் சுட்டிக் காட்டினார் அத்வானி. அதற்கும்

**பக்கத்து வீடு**

பிரணாப் முகர்ஜி பதிலடி தந்தார்.

''இதற்கு முன் தேவகவுடா, குஜ்ரால் ஆகிய பிரதமர்களும் தாம் கொண்டு வந்த நம்பிக்கைப் பிரேரணைகள் மீது வாக்களிக்க முடியாத பிரதமர்களாகவே இருந்தார்கள்'' - என்றும சுட்டிக்காட்டினார் பிரணாப். அவர்களும் கூட நாடாளுமன்ற (மக்கள் அவை) எம்.பிக்களாக அல்லாமல் - ராஜ்யசபை (மாநிலங்கள் அவை) உறுப்பினர்களாக இருந்தபடியே பிரதமர் பதவியை வகித்திருந்தனர்.

இப்படி இந்த விவாதம் முழுவதும் அத்வானி உட்பட எதிரணியினருக்கு சரமாரியாகப் பதிலடி தந்த காங்கிரஸின் மூத்த தலைவரும் அவை முதல்வரும் வெளியுறவு அமைச்சருமான முகர்ஜி மீதே அனைவரின் பார்வையும் பதிந்திருந்தது. மன்மோகனுக்கு முன்பே பிரதமர் ஆகியிருக்கவேண்டிய முகர்ஜி அதைப்பற்றி கவலைப்படாமல் முழுமூச்சாகத் தாம் சார்ந்த அரசை ஆதரித்து வாதிட்டார். விவாதத்தின் நாயகனாகவும் அவரே விளங்கினார்.

அவர் அத்வானியை மடக்கிய போதெல்லாம் அவரது தலைவி சோனியா கைகளைத் தலைக்கு மேலே உயர்த்தி கரகோஷம் செய்ததை கண்கொள்ளாக் காட்சியாக இருந்தது.

விவாதத்தில் சோனியாகாந்தி பங்கேற்காது அமைதியாகவே இருந்தார். அவர் அரசியலில் ஓய்வுபெறத் தயார் என்பதை இது பறைசாற்றியது. ராகுல்காந்தியின் உரையும் ஓரளவு பாராட்டும்படியாக இருந்தது.

ராகுல்காந்தி முன்னரே சுட்டிக்காட்டியமை போல பல இளம் எம்.பிக்கள், காங்கிரஸ் கட்சி தம்மைப் பொறுத்தவரை எதிரணி என்பதையும் பொருட்படுத்தாமல் அரசை ஆதரித்து வாக்களித்தனர்.

உதாரணமாக கஷ்மீர் தேசிய மாநாட்டுக் கட்சித் தலைவரும் கஷ்மீர் சிங்கம் ஷேக் அப்துல்லாவின் பேரனுமான இளம் தலைவர் ஓமர் அப்துல்லா அரசை ஆதரித்தும் அணுசக்தி ஒப்பந்தத்தைப் போற்றியும் உரையாற்றினார். இத்தனைக்கும் இவர் காங்கிரஸின் பரம வைரியாவார்.

மற்றொரு சோனியா எதிரியான முன்னாள் சபாநாயகர் சங்மாவின் புதல்வியான 26வயதான அகதா சங்மாவும் அரசை ஆதரித்தார்.

இளம் சந்ததி எம்.பிக்கள் பலரும் ஒப்பந்தத்தை ஆதரித்து ஆக்ரோஷமாக உரை நிகழ்த்தினர்.

நாட்டின் மின் சக்தித் தேவையை அணுமின்துறை மூலம் நிறைவுசெய்யும் நாட்டம் பரவலான அங்கீகாரத்தை பெற்றமை பிரதமருக்கு மனநிறைவைத் தந்திருக்கும்.

எனினும், இவ்வாறான உயரிய நோக்கை அடைய சில இழிவான வழிமுறைகளும் பயன்பட்டனவோ என்ற ஐயமும் எழவே செய்கிறது.

பாரதீய ஜனதாவின் எம்.பி. ஒருவர் தனக்கு அரச தரப்பு தந்த இலஞ்சம் எனக்கூறி ரூபாய் நோட்டுக் கற்றைகளை சபை செயலரிடம் பகிரங்கமாக ஒப்படைத்தமை அதிர்ச்சி தருவதாக இருந்தது.

நேரடி ஒளிபரப்பு மூலம் முழு உலகுக்கும் இந்த நம்பிக்கை வாக்கெடுப்பு மீதான விவாதம் அஞ்சல் செய்யப்பட்டுக் கொண்டிருந்தவேளை இவ்வாறு விடயம் அம்பலமானது, இந்திய ஜனநாயகத்தின் மீதான கரும்புள்ளியே.

எனினும் நம்பிக்கை வாக்கெடுப்பில் தோற்போம் என பாரதீய ஜனதாக் கட்சி முற்கூட்டியே தெரிந்துகொண்டதால் அக்கட்சி ஆடிய நாடகமே இதுவென காங்கிரஸ் கூறியுள்ளது.

எம்.பிக்களை விலைக்கு வாங்கும் இந்த இழிவான உத்தியை பாரதீய ஜனதாவும் தான் பதவியிலிருந்தபோது கையாண்டுள்ளது என்பதும் நினைவுகூரத்தக்கதே.

ஆட்சி கவிழும்; அதன்பின் மூன்றாவது அணி மூலம் மாயாவதியைப் பிரதமராக்குவோம் என மார்தட்டிய இடதுசாரிகளும் மண் கௌவியுள்ளனர்.

தனது பிரதான எதிரியான மூலாயமை ஒடுக்குவதற்காக மாயாவதி முழுமூச்சாக டில்லியில் அரசியல் சதுரங்கத்தில் ஈடுபட்டிருந்தார். இவ்விடயத்தை ஒட்டி மூலாயமின் கட்சியை உடைப்பதில் பெருவெற்றியும் அவருக்குக் கிடைத்தது. ஆத்திரமடைந்த மூலாயம் கட்சி இந்த அரசைக் காப்பதில் தன் முழுப்பலத்தையும் பிரயோகித்தது. வர்த்தகரும் மூலாயமின் வலதுகையுமான அமர்சிங் தனது சொந்தப் பணத்தில் பல எம்.பிக்களை விலைக்கு வாங்கினார் என்று கூட முறைப்பாடு எழுந்துள்ளது. மொத்தத்தில் இந்த வாக்கெடுப்பு பாரதீய ஜனதாக்கட்சி - காங்கிரஸ் இடையேயான மோதலாக அன்றி மூலாயம் - மாயாவதிக்கு இடையிலான பெரும்போராட்டமாகக் கடைசியில் உருவெடுத்ததையும் அவதானிக்க முடிந்தது.


மாயாவதி


மூலாயம்

தனது அரசை உருவாக்கிய மும்மூர்த்திகள் எனப் பிரதமர் மன்மோகன் மூவரைப் பெயர் குறிப்பிட்டு இவ்விவாதத்தில் பாராட்டிப் பேசினார்.

அவர்கள் இடதுசாரி தலைவர்களான ஜோதிபாசு, ஹர்கிஷன்சிங் சுர்ஜித் மற்றும் தி.மு.க. தலைவர் கருணாநிதி ஆகியோரே.

கலைஞருக்கு இப்படி ஒரு மரியாதையைப் பிரதமர் தந்தமை குறித்து தி.மு.க. வட்டாரம் அகமகிழ்ந்து போயுள்ளது. வாக்கெடுப்பு வெற்றியடைந்ததும் கலைஞர் தம் கோபாலபுரம் வீட்டின்முன் தன்கையால் வெடி கொளுத்தி இரவுவேளையில் கொண்டாடியமை பொருத்தமானதாகவே இருக்கக்கூடும்.

வெற்றியின் பின் நிருபர்களிடம் பேசிய மத்திய அமைச்சர் மணிசங்கர் ஐயர் ''விவாதத்தில் எதிர்க்கட்சிகள் சொதப்பியமை எங்களுக்குப் புதுப்பலம் தந்துள்ளது. அடுத்த தேர்தலில் வெல்வோமோ என்ற ஐயம் இதுவரை இருந்தது. இவர்கள் சொதப்புவதை பார்த்ததும் நாமே வெல்வோம் என்ற உறுதி ஏற்படுகிறது'' என்றரார்.

விவாதத்தில் சுட்டிக்காட்டுமளவுக்கு விடயக்கனதியான அம்சம் எதையும் பாரதீய ஜனதாக் கட்சி முன்வைக்கவில்லை என்பது உண்மையே. உள்ளூற பாரதீய ஜனதாக் கட்சி அமெரிக்காவுடனான அணுவாயுத ஒப்பந்தத்தை ஆதரிப்பது சகலருக்கும்

எஸ்.சுரேந்திரஜித்

தெரியும். அரசைக் கவிழ்க்கும் நோக்கமாகவே ஒப்பந்தத்தை எதிர்ப்பதாக அது தற்போதைக்கு நாடகமாடுகிறது என்பதும் தெரிந்ததே.

இவ்வாறே உலகத் தொழில் ஸ்தாபனத்துடன் முன்னைய நரசிம்மராவ் அரசு 1990களில் ஒப்பந்தம் செய்தபோது அதனை எதிர்த்த பாரதீய ஜனதாக் கட்சி பின்னர் தான் பதவி ஏற்றதும் முற்றுமுழுதாக அந்த உலக அமைப்பிடம் சரணாகதி அடைந்தது. இதையும் முகர்ஜி விட்டுவைக்காமல் விவாதத்தில் புட்டுப்புட்டு வைத்தார்.

மொத்தத்தில் பாரதீய ஜனதா முன்னெடுப்பதற்கு அரசியல் சுலோகம் ஒன்று இல்லாத வங்குரோத்து நிலையில் இருப்பதை இவ்விவாதம் வெளிச்சமிட்டுக் காட்டியது.

பாபர்மசூதியை இடித்துத் தள்ளியமை மட்டும் அத்வானிக்குப் பிரதமராவதற்கான தகுதியைத் தந்துவிடாது என்பதையும் இவ்விவாதம் காட்டியது. வாஜ்பாயை போன்ற அரசியல் சாணக்கியர் இனிமேல் பிறந்துதான் வரவேண்டும் என்பதும் புலனானது.

இந்த வாக்கெடுப்பை ஒட்டிய மற்றொரு சர்ச்சையாக சபாநாயகர் சோம்நாத் சட்டர்ஜி பதவி விலகவேண்டும் என்ற விடயம்

(24ஆம் பக்கம் பார்க்க)


# சிக்கினார் ரடோவன்!

ஆயிரக்கணக்கான அப்பாவிப் பொஸ்னியர்களையும் சேர்பியர்களையும் இனப்படுகொலை செய்தவர் எனக் குற்றஞ் சுமத்தப்பட்டு ஐ.நாவின் சர்வதேச நீதிமன்றத்தினால் கடந்த 13 வருடங்களாகத் தேடப்பட்டு வந்த ரடோவன் கடைசியாக சேர்பியாவில் - பெல்கிரேட்டில் - கைவிலங்கிடப்பட்டிருக்கின்றார்.

உலகில் அதிகளவு தேடப்பட்டு வந்த நபரென மேற்குலக ஊடகங்கள் அவரை வர்ணிக்கின்றன. முன்னர் பொஸ்னிய - சேர்பிய படைகளின் உயர் தலைமைத் தளபதியாக இருந்தவர் ரடோவன்.

பதின்மூன்று வருடங்கள் தலைமறைவு வாழ்க்கை வாழ்ந்த பின்னரே ரடோவன் கராஜிக் கைது செய்யப்பட்டுள்ளார். இக்காலப் பகுதியில் அவரைத் தங்களிடம் ஒப்படைக்குமாறு சர்வதேச சமூகம் சேர்பியாவிற்கு கடும் அழுத்தத்தைக் கொடுத்து வந்துள்ளது.

ஆயிரக்கணக்கான அப்பாவி பொஸ்னியர்களையும் சேர்பியர்களையும் இனப்படுகொலை செய்தார் என குற்றஞ்சாட்டப்பட்டவர் ரடோவன். ஐக்கிய நாடுகளின் யுத்தக் குற்றங்களுக்கான நீதிமன்றம் இருதடவைகள் இவரிற்கு எதிராகத் தீர்ப்பு வழங்கியுள்ளது.


ரடோவன்

ரடோவனின் படைகள் 1995 ஜூலை மாதம் சேர்பனிக்காவில் ஏழாயிரத்து ஐந்நூற்றுக்கும் மேற்பட்ட முஸ்லிம் களைக் கொலை செய்தன என்பது ஐக்கிய நாடுகளின் முக்கியமான குற்றச்சாட்டுகளில் ஒன்று.

பொஸ்னிய முஸ்லிம்களையும் பொஸ்னிய குரோசியர்களையும் பீதிக்குள்ளாக்கி அவர்களது மனோதைரியத்தை உடைப்பதற்காகவே இப்படுகொலைகள் இடம் பெற்றன.

சரஜீவோ நகரம் மீது கண் மூடித்தனமாக ஷெல் தாக்குதல்கள் மேற்கொள்ளப்படக் கட்டளையிட்டவர் என்றும் இவர் மீது குற்றச் சாட்டு சுமத்தப்பட்டுள்ளது. மேலும் 1995 மே, ஜூன் மாதங்களில் ஐக்கிய நாடுகளின் அமைதிப்படையினரை பணயக்கைதியாகப் பிடித்து வைத்திருந்தமை உட்பட பல குற்றச்சாட்டுகள் இவருக்கு எதிராக ஹேக்கில் உள்ள சர்வதேச நீதி மன்றத்தில் நிலுவையில் உள்ளன.

பொஸ்னிய யுத்தத்தை முடிவிற்கு கொண்டு வந்த டெய்ரன் ஒப்பந்தத்திற்கு பின்னர் தலைமறைவான ரடோவன் தற்போது கைது செய்யப் பட்டுள்ளார்.

சேர்பியாவின் தென்கிழக்கு பகுதியில் உள்ள மலைப்பகுதியில் ஆயுதக் குழுக்களின் உதவியுடன் இவர் 13 வருடங்கள் தலை மறைவாக வாழ்ந்து வந்துள்ளார் எனத் தெரிவிக்கப் படுகின்றது.

சேர்பனிக் காவில் பணயக் கைதிகளாக பிடிக்கப் பட்டவர்களை பொஸ்னிய - சேர்பிய இராணுவத்தினர் சுட்டுக்கொலை செய்யும் வீடியோ நாடா 2005 இல் வெளியான பின் னரே ரடோவன் கைது செய்யப்பட வேண்டு மென்ற அழுத்தங்கள் அதிகரித்தன.

### பெல்கிரேட்டில் மருத்துவராக தலைமறைவு வாழ்க்கை

ரடோவன் கடந்த 13 வருடங்களாக தன்னை ஒரு மருத்துவராக சித்திரித்துக் கொண்டு பெல்கிரேட்டில் தலைமறைவு வாழ்க்கை வாழ்ந்துள்ளார்.

வெள்ளைத் தாடியுடன் காணப்பட்ட இவர் மாற்று மருத்துவம் குறித்து விரிவுரைகளையும் ஆற்றிவந்தார் எனக் கூறப்படுகின்றது

ரடோவன் சஞ்சிகைகளுக்கு கட்டுரைகளையும் எழுதிவந்துள்ளார்.

ரடோவனின் தந்தை நாஜிகளுக்கும் டிட்டோவின் கம்யூனிஸ்ட்களுக்கும் எதிராக போராடிய சேர்பிய தேசியவாத கெரில்லா அமைப்பின் உறுப்பினர். பெருமளவு காலத்தைச் சிறையிலேயே கழித்தவர்.

எனினும், ரடோவன் கராஜிக்கை அதிகம் ஈர்த்தவர் சேர்பிய தேசியவாத எழுத்தாளர் டொப்பிரிக்கா கொசிக் என தெரிவிக்கப்படுகின்றது. இவரே ரடோவனை அரசியலைத் தேர்ந்தெடுக்குமாறு வற்புறுத்தினார்.

சேர்பியாவின் பச்சைக் கட்சியின் உறுப்பினராக சிறிதுகாலம் பணியாற்றிய பின்னர் 1990களில் ரடோவன் சேர்பிய ஜனநாயகக் கட்சியை உருவாக்கினார்.

பொஸ்னியாவில் தேசியவாத, குரோஷிய சக்திகளின் எழுச்சியை எதிர்கொள்ளும் நோக்கத்துடன் உருவாக்கப்பட்ட இக்கட்சி பாரிய சேர்பியாவே தனது இறுதி இலக்கென பிரகடனம் செய்திருந்தது.

இதற்கு இரண்டு வருடங்களுக்கு பின்னர் பொஸ்னியா - ஹெட்ஸிகோவினா சுதந்திர நாடாக மலர்ந்தபோது, ரடோவன் பொஸ்னியா, ஹெர்ஸிகோவினாவின் சுதந்திரத்தைப் பிரகடனம் செய்தார்.

### நவீன ஐரோப்பியாவில் இனப்படுகொலைகள்

சேர்பியத் தலைவர் ஸ்லோபடான் மிலோசேவிச்சின் உதவியுடன் பொஸ்னியாவிலுள்ள பொஸ்னியர்கள் மற்றும் குரோஷியர்களுக்கு எதிராக வன்முறைத் தாக்குதல்களை இவரே முன்னின்று மேற்கொண்டார் எனக் கூறப்படுகின்றது.

இந்த யுத்தத்தின்போது சரஜீவோ 43 மாதங்களாக சேர்பியர்களின் முற்றுகைக்குள் சிக்குண்டிருந்தது.

சர்வதேச சமூகத்திடமுள்ளன.

இதுதவிர, பொஸ்னிய சேர்பிய தடுப்பு முகாம்களில் ஆயிரக் கணக்கானவர்கள் சித்திரவதை செய்யப்பட்டமையை நேரடியாகக் கண்ணுற்ற சாட்சிகளும் உள்ளனர்.

1995 ஆம் ஆண்டு இவருக்கு எதிராக முதன்முதலாக யுத்த குற்றச்சாட்டு சுமத்தப்பட்டது. 1996 இல் பொஸ்னியா ஹெட்ஸிகோவினாவின் சேர்பிய குடியரசுக்கு எதிராக தடைகளை விதிக்கப் போவதாக மேற்குலகம் அச்சுறுத்திய வேளை ரடோவன் தலைமறைவானார்.

ரடோவன் தனது தலைமறைவு வாழ்க்கையின் போது சில புத்தகங்களையும் வெளியிட்டுள்ளார்.

ரடோவன் கைது செய்யப்பட்ட பின்னர்


மனிதப் புதைகுழி ஒன்று

உலகின் கவனம் ஹேக்கின் சர்வதேச நீதி மன்றத்தை நோக்கி திரும்பியுள்ளமையும் குறிப்பிடத்தக்கது.

பால்க்கன் யுத்தத்தின் தீவிரமான நாட்களில் சர்வதேச யுத்த குற்ற நீதிமன்றம் ஏற்படுத்தப்பட்ட போது அமெரிக்க வெளிவிவகார அமைச்சு அதிகாரிகள் இவ்வளவு முக்கிய நபர்கள் கைதுசெய்யப்படுவார்கள் என நினைத்துக் கூடப்பார்க்கவில்லை.

விடயத்தைக் கையாள்வதற்காகவே சர்வதேச குற்றவியல் நீதிமன்றம் ஏற்படுத்தப்பட்டது. அதன் பின்னர் அது பல வெற்றிகளையும் கசப்பான அனுபவங்களையும் சந்தித்துள்ளது.

இக்காலப் பகுதியில் சர்வதேச சட்டங்களுக்கு இந்த நீதிமன்றங்கள் புதிய அர்த்தங்களையும் வழங்கியுள்ளன.

மனித குலத்துக்கு எதிரான குற்றங்களை இழைக்கும் நாடுகளின் தலைவர்களுக்கு இனி மேல் நீதியின் பிடியிலிருந்து விசேட சலுகை வழங்கப்படமாட்டாது, பொதுமன்னிப்பு என்பது ஏற்றுக்கொள்ளப்பட முடியாதது, சிறுவர்களை யுத்தத்திற்கு பயன்படுத்துவது தடை செய்யப்பட்டுள்ளது, பாலியல் வல்லுறவு - இனப்படுகொலையின் ஒரு பகுதியாக கருதப்படும், மனித குலத்துக்கு எதிரான குற்றங்கள் சகித்துக்கொள்ளப்பட மாட்டாது.- என்ற செய்திகள் உரத்த தொனியில் இப்போது தெரிவிக்கப்பட்டுள்ளன.

இந்த சர்வதேச நீதிமன்றங்கள் நிறுவப்பட்டின் மூலம் அடுத்த 100 வருடத்திற்கு நிலைக்கக்கூடிய சட்ட நீதிக்கான அடித்தள மிடப்பட்டுள்ளது என்கின்றனர் ஆய்வாளர்கள்.

மேலும் ஆட்சியில் உள்ளவர்கள் தமது பதவிக்காலத்தில் இழைக்கும் தவறுகளுக்காக சர்வதேச நீதிமன்றத்தினால் விசாரிக்கப்படலாம், தண்டிக்கப்படலாம் என்ற அச்சமும் மனித குலத்திற்கு எதிராகக் கொடூரங்களைக் கட்டுப்படுத்தும் என்பது அவர்களது நம்பிக்கை.

யூகோஸ்லாவியா விடயங்கள் ஒட்டி சர்வதேச நீதிமன்றம் அமைக்கப்பட்ட வேளை அமெரிக்க வெளி விவகார அமைச்சில் பணியாற்றிய மைக்கல் ஸ்கார்வ் தான் அவ்வேளை இது வெறுமனே ஒரு குறியீடு என்று மட்டுமே கருதியதாக குறிப்பிடுகின்றார்.

எனினும், நிலைமை மாறிவிட்டது. எதிர் காலத்தில் மனித குலத்திற்கு எதிரான குற்றச் செயல்களைத் தடுப்பதற்கு இவை பயனுள்ளவை என்ற கருத்து உருவாகி வருகின்றது என்கிறார் அவர்.

ரடோவன் போன்று உயர்மட்ட குற்றவாளிகள் பலர் நீதிமன்றத்தின் முன்னால் உள்ளமையை அவர் சுட்டிக் காட்டுகின்றார்.

சூடான், ஈராக், கொங்கோ உட்பட பல நாடுகளில் இனப்படு கொலைகள் தொடர்கின்றன.

எனினும், கென்யாவில் அரசியல் தீர்விற்கு வழிவகுத்ததும் சிம்பாப்வே ஜனாதிபதி தனது அரசியல் எதிரிகளுக்கு எதிரான வன்முறையை முடிவிற்கு கொண்டுவருவதற்கு காரணமாக அமைந்ததும் சர்வதேச நீதிமன்றம் குறித்த அச்சமே என்கிறார் ஸ்கார்வ்.

முகாபே தான் பின் தொடரப்படுவதை உணர்ந்துள்ளார் என்றும் அவர் தெரிவிக்கின்றார்.

எனினும், இந்த நீதிமன்றங்களில் பலவீனங்களும் காணப்படுகின்றன என்பதையும் ஒப்புக் கொள்ளத்தான் வேண்டும்.

முன்னாள் ஜனாதிபதி மிலோசிவிச் நீதிமன்ற நடைமுறையில் காணப்படும் தாமதங்களைத் தனக்குச் சாதகமாகப் பயன்படுத்தினார். தண்டனை பெறாமல் சிறையிலேயே மரணித்தார்.

கொங்கோவின் முன்னாள் ஆயுதக்குழு தலைவரின் விசாரணையும் நெருக்கடிகளை எதிர்கொண்டது.

நீதிமன்றங்களுக்கான பிரச்சினைகள் அதிகளவிற்கு வெளியிலிருந்தே வருகின்றன.

ரடோவனும் அவரது இராணுவத் தளபதியும் கைதுசெய்யப்படுவதற்கு பல வருடங்கள் பிடித்தமைக்கு சேர்பிய அரசே காரணம்.

எனினும், தற்போது ஐரோப்பிய ஒன்றியத்தில் இணையவிரும்பும் மேற்குலகு சார்பு புதிய சேர்பிய அரசே தற்போது அவரை ஹேக்கிடம் ஒப்படைத்துள்ளது என்பதும் கவனிக்கத்தக்கது.

# நவீன ஐரோப்பாவின் இனப்படுகொலை சூத்திரதாரி கைது!

ரஜீவன்

கடுமையான ஷெல் விமான தாக்குதல்களால் ஆயிரக்கணக்கான பொது மக்கள் கொல்லப்பட்டனர். பெருமளவானவர்கள் வேண்டுமென்றே இலக்கு வைக்கப்பட்டனர்.

ஐரோப்பாவின் நவீனகால இனச்சுத்திகரிப்புப் படுகொலைகள் இக்காலப் பகுதியிலேயே நடைபெற்றது. ஆயுதக்குழுக்களின் உதவியுடன் பொஸ்னிய சேர்பிய படைகள் இவற்றை மேற்கொண்டன.


அதிகாரவேளையில் ரடோவன்

ரடோவனின் படைகளால் மேற்கொள்ளப்பட்ட அநேக உரிமைமீறல்கள் குறித்த பதிவுகள்

தற்போது லைபீரியாவின் முன்னாள் ஜனாதிபதி நீதிமன்றத் தின் விசாரணையில் உள்ளார். இதேபோன்று கொங்கோவின் உதவி ஜனாதி பதியும் நீதிமன்றத்தின் முன்னால் உள்ளார்.

இது தவிர சூடானின் தற்போதைய ஜனாதிபதி ஓமர் அல்பஷீர் சந்தேக நபராக சர்வதேச நீதிமன்றினால் அறிவிக்கப்பட்டுள்ளார்.

கம்போடியாவின் முன்னாள் தலைவர்களும் இத்தகைய குற்றச்சாட்டுகளுக்காக கைது செய்யப்படலாம் எனக் கூறப்படுகின்றது.

இதைவிட முக்கியமாக யூகோஸ்லாவியா வின் முன்னைய ஜனாதிபதியான மிலோசிவிக் சர்வதேச நீதிமன்றச் சிறையிலேயே மரணித்தார்.

15வருடங் களுக்கு முன்னர் இத்தகைய நடவடிக்கைகள் எவையும் சாத்திய மானவையாகத் தெரிய வில்லை.

பொஸ்னியாவின் நான்கு வருட கொடூரயுத்தம் மற்றும் நவீன ஐரோப்பாவின் முதலாவது இனப்படு கொலையின் சூத்திரதாரி என வர்ணிக் கப்படும் ரடோவன் கராஜிக் கடந்த திங்கட்கிழமை கைது செய்யப்பட்டுள்ளமை மிகுந்த முக்கியத்துவம் வாய்ந்த விவகாரமாக மாறியுள்ளது.

1993இல் முன்னாள் யூகோஸ்லாவியா


## வீடு விற்பனைக்கு

தெஹிவளை, குவாறி றோட்டில் 13.75 பேர்சர்ஸ் காணியிலுள்ள வீடு விற்பனைக்குண்டு. காலி வீதியிலிருந்து 100 யார் தூரத்திலும் பாடசாலை, வைத்தியசாலை, கோயில், பள்ளிவாசல், வியாபார ஸ்தாபனங்கள் அமைந்துள்ள சுற்றாடலிலும் உள்ளது. உடன் தொடர்புகொள்ளவும்.

Colombo Trading Centre,
No.66, Galle Road,
Dehiwala North, Dehiwala.

# ஏதற்கால் நிராகரிக்கப்படும் புலிகளின் யுத்தநிறுத்தம்!




கொழும்பில் 'சார்க்' மாநாடு நடைபெறுவதை ஒட்டி, தமிழீழ விடுதலைப் புலிகள் ஒரு தலைப்பட்சமாக அறிவித்த யுத்த நிறுத்தத்தை எள்ளி நகையாடி நிராகரித்து விட்டது கொழும்பு அரசு.

''இராணுவ ரீதியில் வலுவிழந்த நிலையில் - தங்களை மீளப் பலப்படுத்திக் கொள்வதற்கான கால அவகாசத்தைத் தேடும் நோக்குடன் - புலிகள் மேற்கொள்ளும் கபடத் தந்திரோபாயக் காய் நகர்த்தலே இது!'' - என்று இந்த அறிவிப்பை கொழும்பு நையாண்டி செய்து ஒதுக்கித் தள்ளிவிட்டது.

இத்தகைய ஒருதலைப்பட்ச யுத்தநிறுத்த அறிவிப்பை நோக்கும்போது, சரித்திரம் திரும்புகின்றதோ என்று எண்ணவே தோன்றுகின்றது.

சுமார் எட்டு ஆண்டுகளுக்கு முன்னர் இதேபோன்ற ஒரு யுத்தநிறுத்த அறிவிப்பை விடுதலைப் புலிகள் பிரகடனம் செய்து, அதனை நான்கு மாதங்கள் பேணியபோது அச்சமயத்தில் அதனை ஆட்சியிலிருந்த கொழும்பு அரசும் இதேபோன்று நிராகரிக்கவே செய்தது.

ஆனால், அப்போதைக்கும் இப்போதைக்கும் இராணுவ வலுச்சமநிலை பற்றிய வெளியாரின் கணிப்பீட்டில் வேறுபாடுகள் நிறையவே இருக்கவே செய்கின்றன.

முன்னைய அறிவிப்பை 2000 ஆம் ஆண்டு டிசம்பரில் புலிகள் விடுத்தனர்.

நத்தார், புதுவருடம், தைப்பொங்கல் என அடுத்தடுத்து வரும் பண்டிகைக் காலத்தை ஒட்டி 2000 ஆம் ஆண்டு டிசம்பர் 24ஆம் திகதி நள்ளிரவில் இருந்து ஜனவரி 24 ஆம் திகதி வரை அந்த யுத்தநிறுத்தம் புலிகளால் முதலில் அறிவிக்கப்பட்டது.

சமாதானத்திலும், பேச்சுகள் மூலமான அமைதித் தீர்விலும் தமக்குள்ள ஈடுபாட்டை வெளிப்படுத்தும் வகையிலும் -

யுத்த நெருக்கடியைத் தணித்து, இயல்பான நல்லெண்ண சூழ்நிலையை உருவாக்க இடமளிக்கும் நோக்கத்துடனும் இந்த யுத்த நிறுத்த நடவடிக்கையை ஒருதலைப் பட்சமாகத் தமது அமைப்பு மேற்கொள்வதாகப் புலிகள் இயக்கம் அப்போது அறிவித்தது.

## அத்தகைய ஒருதலைப்பட்ச அறிவிப்புக்கு எட்டு ஆண்டுகளுக்கு முன்பும் அதேகதிதான்!

ஆனால், புலிகளின் உத்தேச யுத்தநிறுத்தம் ஆரம்பமாவதற்கு முதல் நாளேயே - 2000, டிசம்பர் 23ஆம் திகதியே - புலிகளின் அந்த நல்லெண்ண சமிக்ஞையை - இப்போதைய மஹிந்த அரசுபோல அப்போதைய சந்திரிகா அரசும் - அடியோடு நிராகரித்துத் தூக்கிக் கடாசியது. புலிகளுக்கு எதிரான அரச படைகளின் தாக்குதல் நடவடிக்கைகள் தொடரும் என்றும் அப்போதும் அறிவிக்கப்பட்டது.

ஆனால், அன்று இருந்த நிலைமை வேறு. இன்றிருக்கும் நிலைமை வேறு.

### அப்போதைய நிலைமை

அந்தச் சமயத்தில் - 2000 ஆம் ஆண்டுக் காலப்பகுதியில் - இலங்கை அரசுப்படைகள் பாரதூரமான நெருக்கடிகளை எதிர்கொண்டு நின்றன.

வன்னிப் பெருநிலச் சமரில் தெரியாமல் அகலக்கால் வைக்கப்போய், ஆயிரக்கணக்கான படையினரின் உயிர்களைப் பலி கொடுத்து, பெரும் பின்னடைவுகளை இராணுவம் சந்திக்க நேர்ந்தது.

'வெற்றிகொள்ள முடியாத இரும்புக் கோட்டைகள் என இராணுவத்தால் கருதப்பட்ட பல படைத்தளங்கள், 'ஓயாத அலைகள்' என்ற பெயரில் புலிகள் தொடர்ச்சியாக மேற்கொண்ட வலிந்த தாக்குதல்களின்போது தகர்த்தெறியப்பட்டன.

'ஜெயசிக்குறு' படைநகர்வின் பெரும் தோல்வியை அடுத்து ஆனையிறவுப் படைத்தள வீழ்ச்சியும் இலங்கைப் படைத்தரப்பின் போரிடும் வல்லமையைப் பெரிதும் சீரழித்து இக்கட்டில் மாட்டிவிட்டிருந்தது.

வன்னிப் பெருநிலப் பரப்பில் இலங்கை இராணுவம் மேற்கொண்ட இராட்சத படையெடுப்பு நடவடிக்கைகளைத் தமது சாதுரியப் பதில் தாக்குதல்கள் மூலம் முறியடித்து -

கேந்திர முக்கியத்துவம் வாய்ந்த பல படைத் தளங்களையும், பட்டினங்களையும் கைப்பற்றி -

இலங்கைப் போரரங்கில் அபார யுத்தச் சாதனைகளை நிலைநாட்டி, இராணுவச் சமநிலையில் புலிகள் மேலோங்கியிருந்த வேளை அது.

இப்படித் தொடர்ச்சியான போர்க்கள வெற்றிகளை அடிக்கற்களாக இட்டு கட்டியெழுப்பப்பட்ட இராணுவப் பலத்தில் நின்றவாறே அப்போது யுத்தநிறுத்தப் பிரகடனத்தை புலிகள் ஒரு தலைப்பட்சமாக விடுத்தனர்.

ஆனாலும் அப்போதும்கூட, போரியல் ரீதியாகத் தமிழரை அடக்கி ஒடுக்கிவிடலாம் என்ற வெறியில் நின்ற சந்திரிகா அரசு, அந்த நல்லெண்ண சமிக்ஞையை இப்போதைய அரசைப் போல எள்ளி நகையாடத் தவறவேயில்லை.

எனினும், 2000 டிசம்பர் 24 ஆம் திகதியில் ஆரம்பித்து ஜனவரி 24 ஆம் திகதிவரை ஒருதலைப்பட்சமாக அறிவித்த ஒருமாத கால யுத்தநிறுத்தத்தை - அதனை இலங்கை அரசு நிராகரித்தபோதிலும் - ஒருதலைப்பட்சமாகவே புலிகள் மேலும் மேலும் மாதாந்தம் நீடித்து வந்தனர்.

ஆனால், அரசு யுத்தத் தீவிரத்தில் இருந்ததால் சுமார் நான்கு மாதம் நீடிக்கப்பட்ட அந்த ஒருதலைப்பட்ச யுத்தநிறுத்தத்தை வேறு வழியின்றி 2001 ஏப்ரல் 24 ஆம் திகதி நள்ளிரவுடன் புலிகள் முடித்துக்கொண்டு வந்தனர். அந்த யுத்த நிறுத்தம் முடிவுக்கு வந்து ஒரு சில மணி நேரத்திலேயே யாழ் குடாநாட்டின் தென்முனையில் புலிகளின் முன்னரங்கப் போர் முனைகளை நோக்கி பெரும் முன்னாயத்த எடுப்புகளோடு அதிரடிப் படை நடவடிக்கை ஒன்றை கொழும்பு அரச படைகள் ஆரம்பித்தன.

**- வி.சிவராம் -**

ஆனையிறவை மீளக்கைப்பற்றும் மூலோபாய இலக்குடன் ஆரம்பிக்கப்பட்ட அந்த 'தீச்சுவாலை' நடவடிக்கை, புலிகளின் தீவிரப் பதிலடியால் படைத்தரப்புக்கு பெரும் நஷ்டத்தையும் பேரழிவையும் ஒரு சில மணிநேரத்துக்குள் விளைவித்து, மீள முடியாத பின்னடைவுக்குள் அத்தரப்பை ஆழ்த்தியது.

அதைத் தொடர்ந்து இடம்பெற்ற - வரலாற்று முக்கியத்துவம் வாய்ந்த - கட்டுநாயக்க படைத்தளம் மற்றும் விமான நிலையம் ஆகியவற்றின் மீதான அதிரடித் தாக்குதல், அத்தளத்தை மாத்திரமல்லாமல், 'சமாதானத்திற்கான யுத்தம்' என்ற அப்போதைய சந்திரிகா அரசின் விநோதமான - விபரீதமான - கோட்பாட்டையே நிலைகுலையச் செய்து சிதைத்தது.

வான்படைகளின் சிறகுகளைக் கத்தரித்து, இலங்கையின் பொருளாதாரத்தை செயலிழக்கச்செய்து, கட்டுநாயக்காவில் புலிகள் நடத்திய துணிகரத் தாக்குதலே சிங்கள மேலாண்மை வாதிகளின் ஆக்கிரமிப்பு - அடக்குமுறைக் கற்பனைக் கோட்டையை அப்போது தகர்த்தது.

திகைப்பூட்டும் படைத்துறைச் சாதனைகளை புலிகள் வெளிப்படுத்தி, இலங்கை இராணுவத்தின் முதுகெலும்பை முறித்துப் போட்டு, ஆதிக்க வெறியர்களின் கனவுகளை அடியோடு சிதறடித்த போதுதான் சந்திரிகா அரசு சமாதான முயற்சித் தீர்வுக்கான கதவைத் தட்டத் தொடங்கியது.

புலிகளுடன் சமரசம் செய்து, தமிழரின் தேசியப் பிரச்சினைக்கு அமைதிவழியில் தீர்வுகாண முயற்சிப்பதைத் தவிர வேறு மார்க்கமேயில்லை என்பது உறைப்பாக உணர்த்தப்பட்ட பின்னரே - உரைக்கப்பட்ட பின்னரே அந்த வழியை கொழும்பு நாடும் என்பதற்கு அது ஒரு நல்ல பட்டறிவுப் பாடமாகும்.

இன்றும்கூட அதுவே பொருந்துகின்றது.

### இப்போதைய நிலைமை

எனவே, இன்றைய நிலையில் திரும்பவும் புலிகள் இப்போது அறிவித்துள்ள ஒருதலைப்பட்ச யுத்தநிறுத்த அறிவிப்பை இன்றைய அரசு நிராகரித்து, 'கிண்டல்' செய்வதில் வியப்பேதுமில்லை.

அதுவும் இப்போது களத்தில் தாங்கள் ஒரு தற்காப்பு யுத்தத்தையே நடத்தி வருகின்றார்கள் என்று புலிகளே தமது ஒருதலைப்பட்ச யுத்த நிறுத்த அறிவிப்பில் ஒப்புக்கொண்டு வெளிப்படுத்தியிருக்கின்றார்கள்.

2002 முற்பகுதியில் ரணில் அரசுடன் செய்துகொண்ட யுத்தநிறுத்த உடன்பாடு உத்தியோகபூர்வமாக இவ்வாண்டு ஆரம்பத்தில் முறித்துக்கொள்ளப்படுவதற்கு முன்னரே கிழக்கைப் புலிகளின் பிடியிலிருந்து முற்றாக விடுவித்துவிட்டதாக அரசுத்தரப்பு பிரகடனப்படுத்திவிட்டது. மன்னாரில் பரவலாகப் பிரதேசங்களைக் கைப்பற்றித் தனது கட்டுப்பாட்டுக்குள் கொண்டு வந்திருப்பதாக படைத்தரப்பு அறிவித்து வருகின்றது. தினசரி யுத்த அரங்கில் டசின் கணக்கில் புலிகளைக் கொன்று வருவதாகவும், ஆழ்கடலில் அடுத்தடுத்துப் புலிகளின் பல ஆயுதக் கப்பல்கள் மூழ்கடிக்கப்பட்டுள்ளன எனவும் அவ்வப்போது அறிவிப்புகள் வெளிவந்து கொண்டிருக்கின்றன.

இலங்கை அரசுப்படைகள் தமது விமானப்படையின் பலத்தை நன்கு வலுப்படுத்தி வான் தாக்குதல்களைத் தீவிரப்படுத்தியுள்ள நிலையில், படைகளின் விமானத்தாக்குதல்களுக்கு ஈடுகொடுக்கமுடியாத நிலையில் புலிகள் உள்ளனர் என்று கொழும்பில் இராணுவ ஆய்வாளர்களும் இராஜதந்திரிகளும் குறிப்பிட்டு வருகின்றனர்.

இவ்வாறு இலங்கை யுத்தக் களநிலையில் இராணுவ வலுச்சமநிலை அரசுப்படைகளுக்குச் சார்பாக இருப்பதான தோற்றமே தொடர்ந்து வெளிப்படுத்தப்பட்டு வருகையில் -

ஒருதடவை அநுராதபுரம் விமானத் தளத்துக்குள் நடத்திய பெரும் அதிரடித் தாக்குதலையும், தாம் திடீரென அறிமுகப் படுத்திய தமது விமானப்படை மூலம் சில தடவைகள் வான் வழித் தாக்குதலையும் நடத்தியமையையும் தவிர மற்றப்படி புலிகள் தாமே ஒப்புக்கொண்டுள்ளபடி இப்போதைய கால கட்டத்தில் அவர்கள் தற்காப்பு யுத்தத்தையே நடத்தி வருகையில் -

விடுதலைப் புலிகளையும், தமிழர்களின் ஆயுதம் தாங்கிய விடுதலைப் போராட்டத்தையும் இராணுவ ரீதியாக அடக்கி ஒடுக்கி, நிரந்தரமாக அழிக்க முடியும் என்ற பெரும் நம்பிக்கை தென்னிலங்கை பௌத்த - சிங்கள மக்களுக்கு பேரினவாத மேலாண்மைத் திமிருடைய சக்திகளால் நன்கு ஊட்டப்பட்டு வருகையில் -

புலிகளின் இத்தகைய ஒரு தலைப்பட்ச யுத்தநிறுத்த அறிவிப்புகள் கிள்ளுக்கீரையாகக் கருதப்பட்டு, தென்னிலங்கையால் நையாண்டி செய்யப்படுவது தவிர்க்க முடியாததே.

''இந்த யுத்த நிறுத்த அறிவிப்பு இலங்கை அரசுக்கோ, படைகளுக்கோ விடுக்கப்பட்டதல்ல. சர்வதேச சமூகத்துக்கு - குறிப்பாக 'சார்க்' மாநாட்டில் பங்குபற்றும் தென்னாசிய நாடுகளுக்கும் அந்நாடுகளின் மக்களுக்கும் - ஈழத் தமிழரின் நட்புறவு மற்றும் நல்லெண்ண சமிக்ஞையாகவே வெளியிடப்பட்டது.'' - என்று இந்த அறிவிப்புக்கு புலிகள் சமாதானமும், நியாயமும், விளக்கமும் கூறலாம்.

ஆனால், 2001 ஆம் ஆண்டு நிலைவரம் போல, தமது இராணுவ வலுச் சமநிலைப் பலத்தை நிரூபித்த பின்னர் இத்தகைய அறிவிப்பை புலிகள் விடுத்தால்தான் அது தென்னிலங்கையின் காதில் ஏறும்; செவியில் கேட்கும். அத்தகைய அறிவிப்புக்கு ஒரு மரியாதையும் இருக்கும்.

புலிகள் அமைப்பு தான் வெற்றி கொள்ள முடியாத விடுதலைப் போராட்ட அமைப்பு என்பதை மீண்டும் ஒரு தடவை வலிமையாக - உறைப்பாக - தென்னிலங்கைக்கு உணர்த்தி உரைத்து, பாடம் படிப்பித்த பின்னர் - அந்த இராணுவ மேலாண்மை நிலையில் நின்று கொண்டு - இப்படி ஓர் அறிவிப்பை விடுக்கும் காலத்தில் அது தென்னிலங்கைக்கு நன்கு புரியக்கூடியதாக - விளங்கக்கூடியதாக - இருக்கும்.

அதை விடுத்து, இப்போது இத்தகைய அறிவிப்பைப் புலிகள் விடுத்திருப்பது இந்தப் பிராந்தியத்தின் சர்வதேச அரசியலை ஒட்டி நல்ல இராஜதந்திர நகர்வு - தந்திரோபாய பூட்டு - என்றாலும், அதன் ஆழத்தையும் அர்த்த பரிமாணத்தையும் தென்னிலங்கையும் கொழும்பு அரசும் நன்கு புரிந்து கொள்ளப் போவதில்லை என்பது வெளிப்படையே. ✱

சுடர் ஒளி
ஜூலை 27 - ஓகஸ்ட் 02, 2008
85, ஜெயந்தமல்லிமாராச்சி மாவத்தை,
கொழும்பு-14 டெலிபோன் 0114734401—6
பாக்ஸ் 0114734404
E-mail: editorial@sudaroli.com

## கொழும்பில் 'சார்க்' மாநாடு

தென்னாசிய நாடுகளின் பிராந்திய உச்சி மாநாடு - 'சார்க்' - இந்த வாரம் கொழும்பில் நடைபெறுகின்றது.

முதலில் இருநாட்கள் வெளிவிவகார செயலர்கள் மட்டச் சந்திப்பு. பின்னர் அடுத்த இரு நாட்கள் வெளிவிவகார இணை - பிரதி அமைச்சர்கள் ரீதியில் ஆலோசனை. அதற்கு அடுத்த இரண்டு நாட்களும் வெளிவிவகார அமைச்சர்கள் மட்டத்தில் கலந்துரையாடல். பின்பு ஒரு நாள் இடைவெளிக்குப் பின்னர் கடைசி இரண்டு நாட்களும் 'சார்க்' நாடுகளின் அரசுத் தலைவர்கள் கலந்துகொள்ளும் உச்சிமாநாடு.

யுத்தநெருக்கடியில் சிக்குண்டிருக்கும் இலங்கையில் இத்தகைய உச்சிமாநாடு என்றதும், அதில் பங்குபற்றும் நாட்டுத் தலைவர்களின் பாதுகாப்புக் குறித்து அந்தந்த நாடுகள் சிந்தனையும், கவலையும், கரிசனையும் கொண்டன.

இந்தியா போன்ற நாடுகள் இந்த மாநாட்டில் தமது அரசுத் தலைவர்கள் பங்குபற்றுவது தொடர்பில் உள்ள பாதுகாப்பு விவகாரங்களை முன்கூட்டியே ஆராய்வதற்காக மிக உயர்ந்த மட்டத்தில் அதிகாரிகள் குழுவைக் கொழும்புக்கு அனுப்பி வைத்தன.

மாநாட்டு சமயத்தில் கொழும்பில் வான் வழிப் பாதுகாப்பைத் தாங்கள் கண்காணிப்பது உட்பட பல பாதுகாப்பு முன்னேற்பாடுகளைச் செய்ய வேண்டும் என்று இந்தியா வற்புறுத்தும் அளவுக்கு நிலைமை இருந்தது.

'சார்க்' மாநாட்டை ஒட்டி எழுந்த பாதுகாப்புப் பீதி கொழும்பையும் பெரும் பதற்றத்துக்குள்ளாக்கியுள்ளது. பாதுகாப்புத் தரப்பினரின் நெருக்குவாரங்கள் சொல்லுந்தரமன்று. ஏக கெடுபிடி.

ஆனாலும் 'சார்க்' மாநாட்டு காலத்தில் ஒரு தலைப்பட்சமாக யுத்த நிறுத்தத்தை அறிவித்தன் மூலம் இந்தப் பாதுகாப்புப் பதற்றத்தை பெருமளவில் தணியச்செய்துவிட்டார்கள் புலிகள்.

எனினும், புலிகளின் அறிவிப்பைக் காரணமாகக் காட்டி பாதுகாப்புக் கெடுபிடிகளைத் தளர்த்த அரசோ, பிற தரப்புகளோ தயாராக இல்லை. எதற்கும் சந்தர்ப்பமளிக்காத வகையில் கெடுபிடிகள் தொடர்கின்றன.

அதற்கும் நியாயபூர்வமான காரணங்கள் இருக்கவே செய்கின்றன.

அண்மையில் காபூலில் இந்தியத் தூதரகத்துக்கு முன்னால் நடத்தப்பட்ட - பேரழிவை ஏற்படுத்திய - தற்கொலைத் தாக்குதலுக்கு இப்பிராந்திய நாடு ஒன்றின் உளவுப்பிரிவே பொறுப்பு என்று குற்றம் சுமத்தப்படுகின்றது.

அந்தப் பின்புலத்தில் நோக்குவோமானால் -

புலிகள் ஒரு தலைப்பட்சமாக யுத்தநிறுத்தம் அறிவித்து விட்டார்கள் என்பதை வைத்துக் கொண்டு, கொழும்பில் இந்தியத் தலைவரின் பாதுகாப்புக் குறித்து அந்நாடு அசட்டையாக இருந்துவிட முடியாது என்பதைப் புரிந்து கொள்ளலாம்.

அதேவேளை, இந்த 'சார்க்' சமயத்தில் ஒரு தலைப்பட்சமாக யுத்த நிறுத்தத்தை அறிவித்து, 'சார்க' நாடுகள், பெருமூச்சுவிட வழிசெய்து, அதன் மூலம் நற்பெயரைச் சம்பாதித்திருக்கும் புலிகளுக்கு இழுக்குத் தேடித்தரும் எண்ணத்துடன், புலி விரோத சக்திகள், வன்முறைகளைப் புரிந்து, புலிகள் மீது அபாண்டக்குற்றம் சுமத்தும் நோக்கில் சதித்திட்டங்களைக் கட்டவிழ்க்கவும் வாய்ப்புண்டு.

எனவே, 'சார்க்'கை ஒட்டி சகல தரப்புகளும் அவதானத்துடனும், விவேகத்துடனும் நடந்து கொள்வது அவசியமாகும்.

'சார்க்' மாநாடு இந்தப் பிராந்தியத்தின் நாடுகளின் பொதுவான விடயங்கள் பற்றி ஆராயவே கூட்டப்படுகின்றது. 'சார்க்' மாநாட்டின் பேரில் ஒரு நாட்டின் உள்விவகாரத்தில் தலையிடுவது 'சார்க்' வரண்முறைக்கு மாறாக இருக்கலாம்.

ஆனால், இலங்கைத் தீவின் இனப்பிரச்சினைக்கு அமைதி வழித் தீர்வு காணும் வாய்ப்புகளை அடியோடு புறந்தள்ளி, உதாசீனம் செய்து, தமிழர் தாயகம் மீது தென்னிலங்கை அரசு கொடூர யுத்தம் ஒன்றைக் கட்டவிழ்த்து விட்டிருப்பதால் இந்த மண்ணில் மனிதப் பேரவல நெருக்கடி உருவாகியிருக்கிறது. ஒரு நாட்டின் உள்நாட்டு விவகாரம் என்று ஒதுக்கித் தள்ளி விடத்தக்கதல்ல இந்த மோசமான மனிதநேயப் பிரச்சினை.

ஒரு யுத்தநிறுத்தத்தை அறிவித்து, தென்னாசிய நாடுகளின் சகோதரர்களுக்கு நட்புறவுக் கரம் நீட்டி, நல்லெண்ணத்தை வெளிப்படுத்தியிருக்கும் ஈழத்தமிழர்கள் குறித்தும் 'சார்க்' தனது அவதானத்தைச் செலுத்துவது அவசியமாகும்.

அவர்களின் அவலநிலைமையைப் போக்குவதற்கான வழிவகைகள் ஆராய்வதும், அதற்கான தரப்புகளுக்கு அழுத்தங்களைக் கொடுப்பதும் கூட 'சார்க்'கின் பொறுப்பாகின்றது.

# கொழும்பின் போக்கு இந்தியா கொதிப்பு!



ஒரு மிகப்பெரிய, வலுவான நாட்டில் ஒரு பலமான அரசியல் தலைமை இல்லாவிட்டால், அந்த நாட்டை ஒரு மிகச் சிறிய நாட்டின் பலமான அரசியல் தலைமை கூட இலகுவாக ஏய்த்து 'பேய்க்காட்ட' முடியும்.

அதற்கு உதாரணம் தேடி வேறு எங்கும் அலையத் தேவையில்லை.

நமது வலுமிக்க அண்டை நாடான இந்தியாவையும், அதன் தென்கோடி முனையில் 'இந்துணூண்டு' அளவில் இருக்கும் இலங்கைத் தீவையும் எடுத்துக் கொண்டாலே போதும்.

இந்தியா பலமுள்ள - பெரிய - வல்லாதிக்க நாடுதான். ஆனால், அதன் இன்றைய அரசுத் தலைமையோ அதிகாரச் செல்வாக்கு வறுமையில் சிக்கி, 'நித்திய கண்டம் பூரண ஆயுசு' - என்ற கணக்கில் ஆட்சியைக் கொண்டிழுத்துக் கொண்டிருக்கின்றது.

முன்னர் இந்தியாவை வழிநடத்திய பிரதமர்களான இந்திராகாந்தி, அவரின் மகன் ராஜீவ்காந்தி போன்ற அரசியல் தலைவர்கள் மாதிரித் தமது அதிகாரத்தை வலிமையுடன் பிரயோகிக்கத்தக்க அரசியல் துணிச்சலுடைய வலுவான அரசுத் தலைமை இன்று அங்கு இல்லை.

அதனால், தெளிவான - தீர்க்கமான - உறுதியான - துணிகரமான - அரசியல் முடிவுகளை எடுத்து, அவற்றின் வழி திடமாக நின்று பிடிக்கக்கூடிய தலைமைத்துவம் புதுடில்லிக்கு எட்டாக்கனியாகிவிட்டது.

அதேசமயம், அரசமைப்புத் தந்த நிறைவேற்று அதிகாரம், அதன் மூலம் கிடைத்த கட்டுமட்டற்ற இராணுவ அதிகாரங்கள், அரசியல் குத்துக்கரணங்களை வசமாகப் பயன்படுத்தியமை மூலம் சுவீகரித்துக் கொண்ட அரசியல் அதிகாரச் செல்வாக்கு இவற்றுடன் அசைக்கமுடியாத தலைவராக ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷ உருவெடுத்திருக்கிறார்.

இந்தக் குட்டித்தீவின் அதிகாரத்துக்கு - ஆட்சிக்கு - அவர் வந்தமை என்னவோ ஒரு லட்சத்து 80 ஆயிரம் என்ற சொற்ப வாக்குகள் வித்தியாசத்தில்தான். ஆனால், இன்று தமது அதிகாரப்பிடி நிலையை அவர் இறுக்கிக் கொண்டு வலுவான அதிகாரத் தலைவராகத் தம் செல்வாக்கை நிலைநிறுத்தி நிற்கின்றார்.

அத்தகைய உறுதியுடன் இருக்கும் கொழும்பு அரசின் தலைவர், இலங்கை - இந்திய ராஜதந்திர விடயங்களில் புகுந்து விளையாடி மேற்கொள்ளும் காய்நகர்த்தல்களுக்கு ஈடுகொடுக்கமுடியாமல் அல்லாடுகின்றது புதுடில்லி.

ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷவும் அவரது அரசும் கடந்த இரண்டரை ஆண்டுகாலம் இந்தியத் தரப்போடு மேற்கொண்ட இராஜதந்திர உறவாடல்களின்போது கொழும்பினால் வழங்கப்பட்ட பெரும்பாலான வாக்குறுதிகள் நிறைவேற்றப்படவேயில்லையாம்!

'பயங்கரவாதத்தை ஒழித்தல்', 'இறைமையுள்ள நாட்டின் செயற்பாடு', 'ஜனநாயகத்தை நிலைநிறுத்தல்' - என்ற பல்வேறு சாக்குப் போக்குகளைக் கூறிக் கொண்டு தன்பாட்டில் - தன்னிச்சைப்படி - விடயங்களை மேற்கொள்ளும் ராஜபக்ஷவை மிரட்டவும் முடியாமல், அடக்கவும் வழியின்றித் திண்டாடுகின்றது புதுடில்லி என்கின்றன ராஜதந்திர வட்டாரங்கள்.

தனது தென்கோடி எல்லையில் உள்ள இலங்கையில் சீனா, பாகிஸ்தான் போன்ற - தனக்குப் பரமவைரியான - நாடுகளையும் அவற்றின் படைகளையும் நிலைகொள்ள இடமளிக்கவேண்டாம் என்று புதுடில்லி வற்புறுத்தும் போது, ஆமாம் என்று அதற்கு, அப்போதைக்கு, தலையாட்டி விட்டு, தன் பாட்டில் காரியத்தைப் பார்க்கின்றது கொழும்பு என்று பொருமுகிறதாம் புதுடில்லி.

கொஞ்சம் புதுடில்லி முரண்டு பிடித்தால் -

மன்னாரில் எரிபொருள் அகழும் உரிமையைத் தருகிறோம், காங்கேசன்துறையில் சிமெந்து உற்பத்திக்கு இடமளிக்கிறோம், சம்பூரில் மின் உற்பத்தி நிலையம் அமைக்க வாய்ப்புத் தருகிறோம் என்று நாட்டின் மூல வளங்களை இந்தியாவுக்கு அள்ளித் தெளித்து ஆசைகாட்டி விட்டுத் தன்பாட்டில் தனது காரியங்களைக் கொழும்பு ஒப்பேற்றுகின்றது - இந்திய நலனைப் பற்றிக் கவலைப்படாமல் எனக் கொதித்துப்போய் இருக்கின்றது இந்திய இராஜதந்திர வட்டாரங்கள்.

கடந்த ஜூன் மூன்றாம் வாரத்தில் கொழும்பு வந்த இந்திய உயர்மட்ட அதிகாரிகள் குழு, இந்தியத் தரப்பின் சீற்றம் குறித்து இலங்கை ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷவிடம் காட்டமாக எடுத்துக்கூறிய போது அவர்களைச் சமாளிப்பதற்குப் பல கயிறுகளை வழமைபோல எடுத்துவிட்டாராம் இலங்கை ஜனாதிபதி.



இந்தியத்தூதுவர் அலோக் பிரசாத்

**அதிரடி ரங்கு** -அமர்விழியான்

அவற்றில் ஒன்றுதான் நீண்ட காலம் நிலுவையாகக் கிடைக்கும், 'விசால பொருளாதார பங்களிப்பு ஒப்பந்தத்தில்' (CEPA) இலங்கையும் இந்தியாவும் ஒப்பமிடலாம் என்று அம் முயற்சிக்கு மஹிந்தர் காட்டிய பச்சைக்கொடி.

'சார்க்' மாநாட்டுக்காக இந்திய அரசுத் தலைவர் கொழும்புக்கு வரும்போதே அதில் ஒப்பிடலாம் என்று படு 'கஷுவலாக' மேற்படி சந்திப்பின்போது மஹிந்த உறுதி கூறினாராம்.

இந்த ஒப்பந்தத்திற்காக நீண்டகாலம் இந்தியத் தரப்பு அதீத முயற்சிகளை எடுத்து வந்தும் அது பலிக்காமலேயே இழுபட்டுக் கொண்டிருக்கும்.

அதற்கு இலங்கை ஜனாதிபதி இணங்க வைத்தமை தமக்குக் கிடைத்த பெரு வெற்றி என்று இந்தச் சந்திப்பில் கலந்துகொண்டு கொழும்புக்கான இந்தியத் தூதர் அலோக் பிரசாத் பின்னர் கூறி மகிழ்ந்து கொண்டாராம்.

இவ்வளவு காலமும் ஜனாதிபதி மஹிந்தருக்கும், அவரது பிரதம ஆலோசகரும் சகோதரருமான பஸில் ராஜபக்ஷவுக்கும் நெருக்கமானவராகப் பழகி, நட்புப் பேணி நல்லுறவைத் தொடர்ந்து தமக்கு அதன் மூலம் சாதிக்க முடிந்த நல்ல சாதனை இதுவென்றும் -

தமது இராஜந்திரப் பணியில் தாம் சாதித்த முக்கிய மைல் கல்லாக இந்த ஒப்பந்தத்துக்கு இலங்கைத் தலைமையை, இணங்க வைத்து, ஒப்பந்தம் செய்தமையைத் தாம் எதிர்காலத்தில் குறிப்பிட்டுக் காட்ட முடியும் என்றும் தெரிவித்துக்கூட மகிழ்ந்தாராம் அலோக் பிரசாத்.

ஆனால், மஹிந்தரின் ராஜதந்திரம் புரியாமல், அந்த ஒப்பந்த நகலைத் தயாரித்து, அதில் கையெழுத்திடுவதற்கான இறுதி ஏற்பாடுகள் வரை ஓடியாடி ஈடுபட்ட தூதுவர் அலோக் பிரசாத், அவரை அலாக்காகத் தூக்கியடிப்பதற்கு மஹிந்த மேற்கொண்ட காய் நகர்த்தல்களைப் பின்னர் அறிந்த போதுதான் துணுக்குற்று அதிர்ச்சியில் உறைந்து போனார் எனத் தெரிகிறது.

இந்தியப் பிரதமர் மன்மோகன் சிங்கை வியன்னாவில் சந்தித்த போது 'வடக்கு - கிழக்கை இணைப்பேன்' - என அவருக்கு வாக்குறுதி அளித்த மஹிந்த ராஜபக்ஷ, பின்னர் அப்படி இணைப்பதற்கான சட்ட அதிகாரமும், வலிமையும் தமக்கு இருப்பது நீதிமன்றத்தினால் சுட்டிக்காட்டப்பட்டிருந்தும் கூட 'நான் என்ன செய்ய? நீதிமன்றத் தீர்ப்பின்படிதான் நடக்கிறேன்!' - என்று குறிப்பிட்டு இந்தியாவின் காதிலும் பூச்சுற்றினார். வடக்கு, கிழக்குப் பிரிப்பை உறுதிப்படுத்தினார்.

அதே பூச்சுற்றலை இப்போது அலோக் பிரசாத்தின் காதிலும் நன்றாகக் காதுகுத்தி, சுற்றிவிட்டிருக்கின்றார் மஹிந்தர்.

ஒருபக்கத்தால் அந்த ஒப்பந்தத்துக்குத் தலையசைத்து, பச்சைக் கொடி காட்டி, இந்தியத் தரப்பைத் தாஜாசெய்து, அலோக் பிரசாத்தை மகிழ்ச்சிக்கடலில் ஆழ்த்திய மஹிந்தர் -

மறுபக்கத்தில் தான் தனது கூட்டமைப்பில் வலிமையாகச் சேர்த்து வைத்திருக்கும் ஜாதிக ஹெல உறுமயவினர் மற்றும் விமல் வீரவன்ச, ஜே.வி.பியினர் போன்றோரையும் உள்நாட்டில் பேரினவாதச் சிந்தனையில் செயற்படும் தொழில் முயற்சியாளர்களையும் அந்த ஒப்பந்தத்துக்கு எதிராகத் தூண்டிவிட்டு, அதைக் காரணம் காட்டியே, அந்த ஒப்பந்த முயற்சியைக் கிடப்பில் போடப் பண்ணியும் விட்டார்.

இப்படிக் கயிற்றைக் கொடுத்து, ஆட்களை விழுத்தும், தந்திரோபாயம்தான் 'மஹிந்த சிந்தனை' என்பதைக் காலம் கடந்து உணர்ந்துள்ள இந்தியத்தூதுவர் அலோக் பிரசாத் அதனால் ஆடிப்போயிருக்கின்றார்.

வாக்குறுதி கொடுப்பது, பின்னர் அதற்கு மாறாக நழுவி வழுவிச் சென்று தன் திட்டத்தை முன்னெடுப்பது என மஹிந்தரின் நரித்தந்திரம் கட்டவிழ, அதற்கு 'செக் - மேட்' வைக்கக் கூடிய அதிகாரத் தலைமை புதுடில்லியில் இல்லாததால் இந்திய அதிகார வர்க்கம் - உயரதிகாரிகள் தரப்பு - ஒன்றும் செய்ய இயலாமல் விசனித்துக்கொதித்துப் போய் இருக்கின்றது.

புதுடில்லியில் அரசியல் கண்டத்திலிருந்து தப்பிப் பிழைத்திருக்கும் மன்மோகன் சிங் அரசு இதன் பின்னராவது மஹிந்தர் விடயத்தில் அவரது அரசின் சுத்துமாத்துகளுக்கு இடமளிக்காத வகையில் கடுமையாக - கடும் போக்காக - நடந்துகொள்ளத் தீர்மானித்து, அதற்கான வழிகாட்டலையும் உத்தரவுகளையும் தங்களுக்கு வழங்காதா என்று உயரதிகாரிகள் மட்டம் - புதுடில்லி இராஜதந்திர வட்டம் - ஆவலுடன் எதிர்பார்த்துக் காத்திருப்பதாகவும் தகவல்.

இந்தியாவின் வைரி நாடுகளான சீனா, பாகிஸ்தான் போன்றவற்றை இலங்கைக்குள் அதிகம் காலூன்ற இடமளிக்கக்கூடாது என இந்தியா வற்புறுத்தியபோது, அதற்கு மஹிந்தரின் அரசு இணங்கித் தலையாட்டியது. ஆனால், இப்போதே, தாம் வழங்கும் புதிய ரக ஆயுதங்களுக்கான பயிற்சி என்ற பெயரில் சீன அதிகாரிகள் பொலன்னறுவையில் படை முகாம் செயற்பாடுகளில் பங்குபற்றுகின்றனர் என்ற நம்பகமான தகவல்கள் எமக்கு வந்திருக்கின்றன - என்று சீறுகிறார் இந்திய இராஜதந்திரி ஒருவர்.

இவ்வாறு தமக்குப் போக்குக் காட்டும் மஹிந்தரை, புதுடில்லி எப்படிச் சமாளிக்கப் போகிறது? பொறுத்திருந்துதான் பார்க்கவேண்டும்.

# எரிகிற வீட்டில்...!

"....அடுத்ததாக 'இலங்கை' ஏலத்திற்கு விடப்படுகின்றது. விரும்பியவர்கள் ஏலம் கேட்கலாம்!"

இவ்வாறான ஏலம்போடும் நிகழ்வொன்று நடைபெற்றால் அது ஆச்சரியப்படுவதற்கில்லை. ஏனெனில், அப்படியான நிலையில்தான் இலங்கையில் நடைபெறும் நிகழ்வுகள் தொடர்ந்து செல்கின்றன.

ஏறக்குறைய இலங்கை பங்குபோடப்பட்டு, விற்கப்பட்டுக் கொண்டிருக்கின்றது. இலங்கைச் சந்தையிலுள்ள எல்லாப் பொருட்களையும் அள்ளிக்கொண்டு செல்வதில் இந்திய வியாபாரியே வழமைபோல முன்னிலையில் நிற்கின்றார். கடைசியாக இலங்கையில் இந்தியா வாங்கத் தீர்மானித்துள்ள பண்டம் - காங்கேசன்துறை சிமெந்து தொழிற்சாலை.



காங்கேசன் சிமெந்து ஆலை

எரிகின்ற வீட்டில் பிடுங்கின வரைக்கும் லாபம் என்ற போக்கே இந்திய அரச இயந்திரத்தின் நீண்ட நாளைய கருத்தியலாக உள்ளது.

தனக்குப் பக்கத்திலுள்ள நாடுகளின் பிரச்சினைகளை ஊதி, ஊதி எரிய விடுவதில் இந்தியாவுக்கு நிகர் இந்தியாவேதான். அந்த எரிதலில் குளிர்காய்வதோடு மட்டும் நின்றுவிடாது, அதன்மூலம் பல வளங்களைச் சுருட்டவும் நினைக்கின்றது.

இலங்கையில் தமிழர் விடுதலைப் போராட்டத்துக்கான முளைகொள்ளல் நிகழ்ந்தபோது தமிழர் தரப்புக்காக இலங்கை ஆட்சியாளர்களிடம் வாதாடி நீதி பெற்றுத்தரவோ அல்லது இலங்கை அரசுக்குச் சார்பாக தமிழ் விடுதலைக் குழுக்களை நசுக்கவோ இந்தியா முனையவில்லை. அன்றைய அரசியல் சூழ்நிலையில் அவற்றைச் செய்வதற்கான 'அதிகாரத் தொனி' பாரதத்திடம் இருக்கவே செய்தது. எனினும், அது அவ்வாறு செய்யவில்லை.

## ருசிகண்ட பாரதம்!

தமிழ்ப் போராளிகளுக்கு பயிற்சியளித்து - அவர்களுக்கு கொம்பு சீவிவிட்டு - இலங்கைப் பிரச்சினையை கொழுந்துவிட்டெரியச் செய்தது டில்லி. எரிகிற நெருப்பைத் தணிக்க வருவது போல், இலங்கையின் வளங்களைச் சுரண்ட அமைதிப்படை என்ற பெயரில் அது உள்நுழைந்தது. எனினும், பாரதமே எதிர்பாராத வகையில் அரசியல், இராணுவ புதைகுழிகளில் அது சிக்குண்டு தப்பினோம், பிழைத்தோமென்று இலங்கையைவிட்டு ஓடிய நிகழ்வுதான் அரங்கேறியது. என்றாலும் ருசிகண்ட பூனையாய், தன் நாவைச் சப்புக்கொட்டியபடி இலங்கையின் வளங்கள் மீது தான் வைத்திருந்த கண்ணை இந்தியா எடுக்கவேயில்லை; சந்தர்ப்பத்துக்காகக் காத்திருந்தது.

'மஹிந்த சிந்தனை' பாரதம் மீண்டும் இலங்கையின் வளத்தை - குறிப்பாகத் தமிழர் தாயகப் பகுதியிலுள்ளவற்றை - சுரண்டுவதற்கான வாசலைத் திறந்துவிட்டது. 'மஹிந்த சிந்தனையின்' தொலைநோக்கான (?) முன்னெடுப்புகளால், இலங்கையின் பொருளாதாரத்தில் ஓராயிரம் பொத்தல்கள் வீழ்ந்தன.

எல்லா நாட்டினரும் 'நிதியுதவி' என்ற போர்வையில் வந்து போகக்கூடியளவுக்கு அந்தப் பொத்தல்கள் விரிவடைந்து கொண்டே சென்றன. இந்தக் காலகட்டத்தில் இலங்கை விடயங்களில் இந்தியா ஓரளவு பாராமுகமாகவே இருந்துவந்தது. தமிழ்நாட்டில் மீண்டும் எழுச்சிபெற்ற ஈழத்தமிழருக்கான ஆதரவு, இலங்கையரசுக்கு உதவ வேண்டாமென பல அரசியற் கட்சிகள் கொடுத்த அழுத்தம், இலங்கையைக் காயவிட்டால் பின்பு அதன் வளங்களை அடிமாட்டு விலைக்கு 'அமத்தி' விடலாமென்ற கணக்குகள் போன்றன இந்தப் பாராமுகத்துக்குக் காரணமாயிருக்கலாம்.

## இந்தியாவைப் பயமுறுத்த இலங்கைக்கு வந்த ஈரான்

இந்தியாவின் பரமவைரிகளான பாகிஸ்தான், சீனா என்பன இந்தப் பாராமுகத்தைத் தமக்குச் சாதகமாகப் பயன்படுத்தின.

இலங்கைக்கு ஆயுத உதவிகளை வழங்கிவிட்டு, தமது கால்களை ஊன்ற முனைந்தன. இது போதாதென்று ஈரானும் இந்தப் பந்தயத்தில் இணைந்துகொண்டது. 'இலங்கைக்கு நிதியுதவி வழங்குவதில் முன்னணி நாடு' என்று அடையாளப்படுத்துமளவிற்கு இலங்கையுடன் ஈரான் ஒட்டியுறவாடத் தொடங்கியது.

பன்னாட்டு நிறுவனங்களின் விளம்பரத் தட்டிகள் போல, இலங்கை அரசுத்தலைவரும், ஈரானிய அதிபரும் இணைந்து நிற்கின்ற பிரமாண்டமான விளம்பரப் பலகைகள் தலைநகரெங்கும் காளான்களாய் முளைத்தன.

'இந்தியா உதவி செய்யாவிட்டாலும் இலங்கைக்கு உதவிசெய்ய ஏராளமானோர் இருக்கின்றார்கள் என்ற செய்தியை வெளிப்படுத்துவதாகவும் இந்தியாவை மீண்டும் இலங்கைக்கு உதவிசெய்யவைக்கும் தூண்டிலாகவும் இவ்விளம்பரப் பலகைகளும் ஈரானிய உறவுநிலைகளும் பயன்படுத்தப்பட்டன.

இந்தத் தூண்டிலில் இந்தியா சிக்குவதைத் தவிர வேறுவழியிருக்கவில்லை. இலங்கைக்கு மீண்டும் ஆயுத உதவி, படையினருக்குப் பயிற்சிகள், அபிவிருத்திக்கான நிதியுதவி, அடிக்கடி நிகழ்கின்ற இந்திய உயர்மட்ட குழுவினரின்

பிரமன்

வருகைகள் என இந்திய - இலங்கை உறவுநிலை மீண்டும் களைகட்டத் தொடங்கியுள்ளது.

## இந்தியாவின் உதவிகளுக்கு கொழும்பு தந்த பரிசுகள்

இந்தியா செய்கின்ற இந்தத் 'திடீர்' உதவிகளுக்கு பிரதிபலனாக இலங்கை கொடுத்த பரிசுகள்தான் -மன்னார் எண்ணெய் வளமும், காங்கேசன்துறை சிமெந்து ஆலையும். இதனால் இலங்கையரசுக்கு எவ்வித நஷ்டங்களுமில்லை. ஏனெனில், இப்போது கொடுத்துள்ள இடங்களிலிருந்து இலங்கையரசுக்கு உடனடி வருமானமென்று எதுவுமில்லை. அத்தோடு இவை இருக்கின்ற இடங்கள் தமிழர்களின் பூர்வீகப் பிரதேசங்கள். எனவே, கொஞ்சமும் யோசிக்காமல் இவையிரண்டையும் தூக்கிக்கொடுத்துவிட்டது இலங்கை ஆட்சிப்பீடம்.

தமிழர் தாயகப் பகுதிகளின் முக்கிய முனைகளில் தன் இருப்பைத் தக்க வைத்துக் கொள்ளவேண்டுமென்பது இந்தியாவின் பெருவிருப்பாகும். ஏற்கனவே கேந்திர முக்கியத்துவம் வாய்ந்த திருகோணமலைத் துறைமுகத்திலுள்ள எண்ணெய்க் குதங்கள் இந்தியா வசமே உள்ளன. இதற்கடுத்த கட்டமாக மன்னாரில் எண்ணெய் வள ஆய்வு, எண்ணெய்க் கிணறு அகழ்தல் என்னும் பணிகளுக்காய், அண்மையில் அங்கும் இந்தியாவின் ஆதிக்கம் ஊன்றப்பட்டுவிட்டது. இப்போது ஈழத்தமிழர்களின் பண்பாட்டுத் தலைநகரம் எனக் கொண்டாடப்படுகின்ற யாழ்ப்பாணத்தில், காங்கேசன்துறை சிமெந்து ஆலையை வாங்குவதற்காக இந்திய நிறுவனமொன்றின் அதிகாரிகள் பலாலிக்கு வந்து போயிருக்கிறார்கள்.

காங்கேசன்துறை சிமெந்து ஆலையையும் கைக்குள் போட்டுக்கொண்டால் தமிழர் தாயகப் பகுதியில் திருகோணமலை, யாழ்ப்பாணம், மன்னார் என்னும் முக்கோணப் புள்ளிகளினூடாகத் தன் பார்வையை இலங்கை மீது வைத்திருக்கமுடியும். அத்தோடு இந்து சமுத்திரப் பரப்பில் தன்னுடைய பிராந்திய கடலாதிக்கத்தை இன்னும் வலுப்படுத்திக் கொள்ளவும் தனக்கு வேண்டாத நாடுகளின் மூச்சுக்காற்றுக் கூட இலங்கையை நெருங்க விடாமற் செய்வதற்கும் இந்தியாவுக்கு இது வசதியானதாகவிருக்கும்.

பொதுவாக நாய்கள் தம்முடைய எல்லைப்பரப்பை அடையாளப்படுத்துவதற் காய், மரங்கள், கம்பங்கள் என்பவற்றின் மீது சிறுநீர் கழித்துவிடுகின்றன. இதனால் குறித்த நாயொன்றின் சிறுநீர் வாடையை வைத்து அதனுடைய எல்லையைப் புரிந்துகொள்ளும் பிறநாய்கள் தங்களுடைய செயற்பாடுகளை அந்த எல்லைக்குள் வராமல் அடக்கியே வாசிக்கும். அதுபோன்ற தொரு செயற்பாட்டையே பாரதம் ஈழத்தில் - தமிழர் தாயகப் பரப்பில் - மேற்கொண்டுள்ளது. ஏறக்குறைய இதுவும் ஒருவகை யான ஆக்கிரமிப்பு வடிவந்தான்.

இந்திய - இலங்கைப் பாகப் பிரிவினையில் மாட்டிக்கொண்டு, தம் எதிர்காலத்தை தொலைத்து நிற்பது வழமைபோலவே தமிழர்கள்தான். நீண்டகாலமாக நடைபெற்று வருகின்ற போர் நடவடிக்கைகள் காரணமாக தமிழர் தாயகப் பகுதிகளில் பொருளாதாரச் சமநிலை பெரிதும் குழப்பத்திற்குள்ளாகியுள்ளது.

ஏதோ ஒரு காலத்தில் சமாதானம் ஏற்பட்டு தமிழ்ப் பகுதிகளில் இயல்புநிலை திரும்புகின்ற நேரத்தில் - தமக்கான பொருளாதாரப் பலத்தைத் தம்மிடமுள்ள இயற்கை வளங்களை வைத்தே கட்டியெழுப்பவேண்டிய தேவை தமிழ்மக்களுக்குண்டு. அத்தகைய வாய்ப்பினைத் தமிழர்களுக்கு வழங்காது, போரின் போர்வைக்குள்ளிருந்து அவற்றைத் திருடுகின்ற நரித்தந்திரத்தில் இந்தியா குறியாக நிற்கின்றது.

மன்னார் பிரதேசத்தில் எண்ணெய் வள ஆய்வுகளை மேற்கொள்ளல் மற்றும் எண்ணெய்க் கிணறுகளை அகழ்தல் என்பவற்றில் சீனாவே முதலில் ஈடுபடுவதாக இருந்தது. தற்போது அதனை இந்தியா தட்டிப்பறித்திருக்கின்றது.

இன்றைய நவீன கைத்தொழில், அறிவியல் உலகில் உணவை விடவும் பெற்றோலியமே பிரதானமானதாக மாறியிருக்கின்றது. சர்வதேசச் சந்தையில் மசகு எண்ணெயின் விலை தினமும் எகிறிக்கொண்டே வருகின்றது. இலங்கையில் மன்னாரில் மட்டுமே பெற்றோலிய வளம் இருப்பதாகக் கண்டறியப்பட்டுள்ளது. இப்போது அந்தக் கொஞ்சநஞ்சமுள்ள பெற்றோலிய வளத்தையும் இந்தியா உறிஞ்சப்போகின்றது. எங்களுடைய வளத்தை - எங்களது மண்ணிலிருந்து பெறப்பட்ட பெற்றோலியத்தை - சர்வதேசச் சந்தையின் விலைக்கு நாமே வாங்கவேண்டிய கட்டாயம் ஏற்படப்போகின்றது.

காங்கேசன்துறை சிமெந்து ஆலை தற்போது மூடப்பட்டதாக இருப்பினும், ஒருகாலத்தில் இலங்கையின் பொருளாதார நிமிர்வுக்கு 'மூண்டு' கொடுக்கும் அளவுக்கு முக்கியத்துவமானதாயிருந்தது. காங்கேசன்துறையை அண்மித்த பகுதிகளில் புதைந்துகிடக்கின்ற சுண்ணக்கற்களும், கடற்கரையோரமாகக் குவிந்து கிடக்கின்ற மணலும் இத்தொழிற்சாலைக்கான மூலப்பொருட்களின் பெரும்பகுதித் தேவையை நிறைவுசெய்யக்கூடியவையாக உள்ளன. கூடவே காங்கேசன்துறையில் உள்ள இயற்கைத் துறைமுகமும் தொழிற்சாலைக்குப் பெரிதும் அனுகூலமாயிருக்கும். எல்லா இடங்களிலும் எழுந்து வருகின்ற புதிய கட்டடங்களின் பெருக்கம், சிமெந்தின் 'கிராக்கியை' அதிகரித்தபடியே உள்ளது.

## சுண்ணக்கல் கொள்ளை!

இதிலே இன்னமும் ஒரு லாபத்தினை இந்தியா அனுபவிக்கக் காத்திருக்கின்றது. வலி.வடக்கு பிரதேசத்திலுள்ள சுண்ணக்கற்களை அகழ்ந்தெடுத்து சிமெந்து உற்பத்திக்குப் பயன்படுத்தும்போது அவ்வாறு அகழப்படுகின்ற சுண்ணக்கற்கள் புதைந்துள்ள நிலத்தின் உரிமையாளருக்கு அதற்குரிய பணத்தை கொடுக்கவேண்டிய தேவையும் இல்லாமற்போகின்றது. 'உயர் பாதுகாப்பு வலயம்' என்ற தடை காரணமாக அந்த நிலங்களின் உரிமைக்காரர்கள் அகதிமுகாம்களில் அடுத்தவேளைக் கஞ்சிக்காக கனவு கண்டுகொண்டிருக்கையில் மறுபுறத்தே கோடிக்கணக்கான பெறுமதியுள்ள அவர்களுக்குச் சொந்தமான சுண்ணக்கற்களை பாரததேசம் கபளீகரம் செய்து கொண்டிருக்கும். இந்தச் சிமெந்து ஆலையை மீள இயங்கவைப்பதனூடாக யாழ்.குடாநாட்டிலுள்ள ஆயிரக்கணக்கான இளைஞர்களுக்கு வேலைவாய்ப்பை வழங்கமுடியுமென ஆசைவார்த்தைகள் கூறப்படுகின்றன. காங்கேசன்துறை சிமெந்து ஆலையானது பலாலி கூட்டுப்படைத் தளம், காங்கேசன்துறை துறைமுகம், விமானநிலையம் போன்ற கேந்திர முக்கியத்துவம் வாய்ந்த இராணுவ நிலைகளுக்குள் உள்ளடங்குவதால் தமிழ் இளைஞர்கள் அப்பகுதிக்குள் வேலைக்குச் செல்வது எவ்வளவுதூரம் சாத்தியமென்று தெரியவில்லை.

சாதாரணமாக கப்பல், விமானப் போக்குவரத்துக்காக பலாலி காங்கேசன்துறை செல்கின்ற பயணிகளே பலவித 'சில்லெடுப்புகளை' எதிர்கொள்ளும்போது, தொழிற்சாலையில் தமிழ் இளைஞர்கள் தொடர்ச்சியாக வேலைசெய்ய படைத்தரப்பு அனுமதிக்குமா என்பதும் விவாதத்திற்குரியது.

(27 ஆம் பக்கம் பார்க்க)

# படையினரின் பூநகரிக் கனவில் புலிகளின் புயல் வீசுமா?




வட போர்முனையில் விடுதலைப்புலிகள் காண்பிக்கும் பொறுமையின் எல்லைப் புள்ளியை அண்மித்திருக்கும் அரச படைகள், தாம் இரண்டு வருடங்களாக மேற்கொள்ளும் படை நடவடிக்கைக்கான 'பரிசு' பெறும் கட்டத்தையும் நெருங்கிக் கொண்டிருக்கின்றன. பல்வேறு வழிகளிலும் புலிகளை சீற்றமுறச் செய்யும் காரியங்களை மேற்கொண்டு, ஒன்றிலுமே தாம் எதிர்பார்த்த பெறுபேற்றை பெற்றுக் கொள்ளாமல் படைத்தரப்புத்தான் தற்போது சீற்றமடைந்திருக்கிறது.

இதன் வெளிப்பாடாக அண்மைக்காலமாக கொழும்பில் அதிகநேரம் முகாமிட்டிருக்கும் இராணுவ தளபதி, வன்னியில் தாம் கைப்பற்றிய பிரதேசங்களாக உள்ளூர் கல்வெட்டுகளையும் கைவிடப்பட்ட ஓலைக் கொட்டில்களையும் காண்பித்து பேட்டிகள் கொடுத்தவண்ணமுள்ளார்.

அதேபோல, களத்தில் படைகளை வழிநடத்தும் இராணுவ அதிகாரிகளும், தாம் இப்படியொரு தலைமைத்துவத்தை பெற்றது பெரும்பேறு என்ற ரீதியில் அங்கு செல்லும் சிங்கள ஊடகவியலாளர்களுக்குக் கருத்து தெரிவித்தவண்ணமுள்ளனர். உண்மையில், களநிலைவரத்தை பார்க்கப் போனால், விடத்தல்தீவை அரச படைகள் அடைந்திருக்கின்றன. புலிகளின் மிகப் பெரிய கடற்படைத்தளம் என தாம் வர்ணித்ததற்கு ஏற்ப, புலிகள் அதை விட்டுக்கொடுக்காமல் சண்டையிடுவார்கள் என இராணுவத்தரப்பு எதிர்பார்த்தது.

விடத்தல்தீவு என்பது மன்னார் தமது கைகளில் உள்ளவரை அதற்கு தேவையான ஒரு பின்புலமாக விடுதலைப்புலிகளால் பயன்படுத்தப்பட்டு வந்த ஒரு இடம். மன்னாரை விட்டு எப்போது புலிகள் பின்வாங்கினரோ, அன்றோடு விடத்தல் தீவின் கேந்திர முக்கியத்துவம் அற்றுப் போய்விட்டது.

இதனை புரிந்துகொள்ளாத படைகள் விடத்தல்தீவு வெற்றியை, ஆனையிறவை வென்றது போலான ஒரு நடவடிக்கையாக கருதிக் கொண்டாடுகின்றன.

தற்போது, அங்கிருந்து வடக்காக இலுப்பைக் கடவைக்குச் சென்று ஏ- 32 வீதியில் மேற்கொண்டு நகரும் நடவடிக்கையில் அரச படைகள் ஈடுபட்டுவருகின்றன.

படையினரின் நடவடிக்கையை சற்று ஆழமாக நோக்கினால், அவர்கள் கடந்த காலங்களில் ஏற்பட்ட இழப்புக்களில் இருந்து சில தெளிவுகளைப் பெற்றுள்ளார்கள் போல தெரிகிறது.

அதாவது, 'ஜெயசிக்குறு' காலப்பகுதியில் பெருமெடுப்பில் ஏ - 9 பாதையில் கால்வைத்த படையினர் மாங்குளம் செல்லும்வரை புலிகளின் எதிர்த்தாக்குதல்களால் பல ஆயிரக் கணக்கானோரை இழந்தனர்.

இதற்கு காரணம், ஏ- 9 பாதையின் இருமருங்கிலுமிருந்து புலிகள் மேற்கொண்ட தொடர்ச்சியான தாக்குதல்தான். தாண்டிக்குளத்தில் ஆரம்பித்து கனகராயன் குளம் வரை புலிகளின் பல்வேறு முற்றுகைத் தாக்குதல்களுக்குள் அகப்பட்டமை, படையினரின் பல நூற்றுக் கணக்கானவரை இழக்கவைத்ததுடன் பெருமளவு ஆயுத தளபாடங்களையும் புலிகளிடம் சேர்ப்பித்தது.

ஆனால், தற்போது வன்னியின் மேற்பக்க மாக இருந்து 'கடற்பிரதேசத்தை ஒரு பக்கமாக வைத்து - வடக்கு நோக்கி நகர்ந்தால், ஒரு பக்கம் கடல் மறுபக்கம் தான் வெளிகள் நிறைந்த இடம். இங்கு புலிகளின் முற்றுகை தாக்குதல்கள் இடம் பெறுவது என்பது பழைய நிலைமையுடன் பார்க்கையில் குறைவாக இருக்கும் என்று படைத்தரப்பு கருதுகிறது.

இப்பொழுது, விடத்தல்தீவில் நிலைகொண்டுள்ள படையினரையோ அல்லது அதற்கு அப்பால் முன்னேறி நிலைகொள்ளவுள்ள படையினரையோ ஒரு முற்றுகைக்குள் கொண்டுவந்து, அவர்களுக்கு பெரிய இழப்புக்களை ஏற்படுத்தக்கூடிய ஒரு தாக்குதலை மேற்கொள்ளவேண்டுமாயின், கடல்வழியான தாக்குதல் ஒன்றை நிச்சயம் வெற்றிகரமாக ஒழுங்கமைக்க வேண்டிய தேவை புலிகளுக்கு உள்ளது.

அவ்வாறு தாக்குதல் நடைபெறும்போது, படையினருக்கு கடல்வழியாக உதவிக்கு வரும் படையினரை தாக்குவது, அதேவேளை படையினரை தப்பியோடவிடாமல் தமது பொறிக்குள் விழுத்துவது, அவர்களுக்கான விநியோக வழிகளை தடுப்பது போன்ற புலிகளின் தரைவழித் தாக்குதல் அணிகளின் பல்வேறு தேவை களுக்கு கடற்புலிகளின் பங்கு அவசியமாகிறது.

கடந்த தடவை - ஜெயசிக்குறு நடவடிக்கையின் போது - காடுகளுக்குள் அகப்பட்டு - அடிவாங்கியதுடன் ஒப்பிடுகையில், கடற்புலிகளால் ஏற்படக்கூடிய இந்த சவாலை சமாளித்தவாறே தமது முன்னேற்றத்தை தொடர்ந்து மேற்கொள்ளலாம் என்று படைத்தரப்பு நம்புகிறது.




ஆனால், எவ்வளவு பிரதேசத்தை படையினர் கட்டுப்பாட்டுக்குள் கொண்டுவந்தாலும், அங்கெல்லாம் உள்ள கடலில் தமது ஆதிக்கம்தான் தொடர்ந்து உள்ளது என்பதை படைத்தரப்புக்கும் இடித்துரைப்பது போல, கடற்புலிகளின் சிறுத்தீவு தாக்குதல் மற்றும் மண்டைதீவுத் தாக்குதல் ஆகியவை நடைபெற்றிருக்கின்றன.

ஆகவே, வடக்கு கடலில் கடற்புலிகளின் கை எப்பொழுதுமே மேலோங்கியிருப்பது, படையினர் எவ்வளவுதான் நிலப் பிரதேசங்களை கைப்பற்றினாலும், அவற்றை செல்லாக் காசாக்கிவிடும் என்பதை தெளிவாக படம்பிடித்துக் காட்டுகிறது.

**அவுஸ்திரேலியாவிலிருந்து**
**தெய்வீகன்**

இதேவேளை, படையினரின் தற்போதைய நடவடிக்கை பூநகரியை இலக்குவைத்தே மேற்கொள்ளப்படுகிறது என்பதை களநிலைமை தெளிவாக காண்பிக்கிறது.

ஓயாத அலைகள் ஒன்றின் ஆரம்பத்துக்கு முன்னர் படையினரால் ஆரம்பிக்கப்பட்ட சத்ஜெய நடவடிக்கையின்போது, கிளிநொச்சியை கைப்பற்றுவதற்காக, படையினரால் கைவிடப்பட்ட பூநகரி அன்று முதல் இன்றுவரை புலிகள் வசமே இருந்துவருகிறது. அதன் விளைவுகள், என்ன என்பதை பலாலி விமானத்தளம் வரை வீழ்ந்து வெடித்த புலிகளின் ஆட்லறிகள் பதிலாகச் சொல்லியிருக்கின்றன.

சம்பூரை தமது கட்டுப்பாட்டுக்குள் வைத்திருக்கும் வரை எவ்வாறு திருகோணமலை முழுவதையும் புலிகள் தமது கட்டுப்பாட்டுக்குள் வைத்திருந்தனரோ அதேபோன்று, பூநகரி புலிகளின் கட்டுப்பாட்டிற்குள் உள்ளவரை குடாநாடு புலிகளின் மறைமுகக் கட்டுப்பாட்டிற்குள் தான் இருக்கும் என்பது எழுதாத விதி.

ஆகவே, கிழக்கிலிருந்து புலிகள் பின்வாங்கியதுடன் சம்பூர் பிரச்சினையிலிருந்து விடுபட்ட இராணுவத்துக்கு, தற்போது எஞ்சியிருக்கும் தலையிடி பூநகரி. அங்கு, கல்முனைப் பகுதியில் புலிகளின் ஆட்லறித் தளம் உள்ளது என்று கூறி தினம் தினம் வான் தாக்குதல்களை மேற்கொண்டுவரும்போதிலும் அதனால் இராணுவம் எந்தப் [illegible]னையும் பெற்றதாக தெரியவில்லை.

ஆகவே, தற்போதைய மன்னார் நடவடிக்கையை பூநகரிவரை நீட்டிச் செல்வது என்று ஒரு பேராசையில் படைத்தரப்பு இறங்கியிருப்பது களநகர்வுகளிலிருந்து தெளிவாகத் தெரிகிறது.

அவ்வாறு, பூநகரியை நோக்கி ஒரு தரைவழி தாக்குதல் நகர்வை மேற்கொள்வதாக இருந்தால்கூட படையினர் தற்போது நிலைகொண்டுள்ள இலுப்பைக் கடவையிலிருந்து வடக்காக இன்னும் நகரவேண்டியிருக்கிறது. குறைந்தது, நாச்சிக்குடாவரை சென்றால்தான் அங்கிருந்தது பூநகரி மீது ஆட்லறி தாக்குதலையாவது மேற்கொள்ள முடியும்.

அதற்கு, இனி வெள்ளாங்குளம் தாண்டி இன்னும் சுமார் 25 கிலோ மீற்றராவது வடக்கே முன்னேற வேண்டிய பாரிய நடவடிக்கை படையினர் இறங்கவேண்டும்.

தினமும் மூன்று கிலோ மீற்றர் முன்னேறுவதாக கொழும்பில் பேட்டியளிக்கும் இராணுவத் தளபதியின் கருத்து உண்மையானால், படையினர் இலுப்பைக் கடவையை கைப்பற்றி எட்டு அல்லது ஒன்பதுநாட்களில் நாச்சிக் குடாவை கைப்பற்றியிருக்கவேண்டும்.

பூநகரி மீது தரைவழியாகத் துல்லியமான ஒரு தாக்குதலை மேற்கொள்வதாயின், அதற்கு நாச்சிக்குடா படையினருக்கு தேவையான ஒரு கேந்திர முக்கியத்துவம் வாய்ந்த இடம். அங்கிருந்து படையினரிடம் தற்போதுள்ள சுமார் 27 கிலோமீற்றர் வரை சென்று தாக்கக்கூடிய 130 மில்லிமீற்றர் ஆட்லறிகளால் தாக்கினால், புலிகளின் பூநகரி இருப்புக்கு கேள்வி எழலாம்.

அப்போதுதான், ஆட்லறி எனப்படுவது படையினருக்கு இராணுவரீதியாக உச்சப் பயனைக் கொடுக்கும்.

தற்போது களத்திற்கு நகர்த்தியிருக்கும் தனது ஆட்லறிகளால் மக்கள் குடியிருப்புப் பகுதிகளை நோக்கித் தாக்குவதையே பிரதான பணியாக படையினர் மேற்கொண்டு வருகின்றனர். இது வன்னியில் பாரிய மனிதப் பேரவலத்தை ஏற்படுத்தியிருப்பது அரசைத் தவிர அனைவருக்கும் தெரிந்தவிடயம்.

அதேபோல, படையினரின் அடுத்த இலக்குகளாகக் காணப்படுபவை, ஏ-9 பாதைக்கு மேற்காக உள்ள துணுக்காய் மற்றும் மல்லாவி பிரதேசங்கள் ஆகும். இவற்றைக் கைப்பற்றிக் கொண்டால் கிளிநொச்சி முழுவதையும் தமது ஆட்லறி வீச்செல்லைக்குள்

(27ஆம் பக்கம் பார்க்க)











# தலைவனின் வாசனை



செக்ஸ் உட்பட எல்லா விஷயங்களிலும் தன் இனத்தைச் சேர்ந்த அத்தனை பேரையும் கட்டுப்படுத்தி, அடக்கி ஆளும் தன்மை (Domination) விலங்கினங்களுக்கு வருவது எப்படி? ஒரு இனத்தைச் சேர்ந்த விலங்கினங்களுக்குத் 'தலைவராக' இருக்க என்ன தகுதிகள் தேவை?

சிம்பிள்! பலம், எடை, வேகம், துணிவு, பயமுறுத்தும் அணுகுமுறை, எதிர்ப்பவர்களை ஆரம்பத்திலேயே தட்டிவைப்பது! - அத்தியாவசியமான குணநலன்கள் இவையே (மனிதர்கள் மாதிரியேதான்!).

சில சமயம் விலங்குக் கூட்டத்தைப் பார்த்தவுடனேயே, தலைவர் யார் என்பதை நம்மால் கண்டுபிடித்துவிட முடியும்!

'கலைமான் தலைவர்' என்றால், அதன் கொம்புகளின் சைஸும் அதில் இருந்து பிரியும் கிளைகளின் எண்ணிக்கையும் மற்ற ஆண்களைவிடப் பெரிதாக, கம்பீரமாக இருக்கும்!

கொரில்லாவைப் பொறுத்த மட்டில், அதன் எடையையும் உட்கார்ந்திருக்கும் ஸ்டைலையும் மற்ற கொரில்லாக்கள் அருகில் வரும்போது, தலைவனிடம் காட்டும் பணிவையும் பார்த்தாலே, 'இவர்தான் லீடர்' என்பது புரியும்.

யானை என்றால் மிகப் பெரிய தந்தங்களோடு மந்தையின் முன்னால் ராஜநடை போடும்!

சில சமயங்களில் தலைவரை உடனே நாம் கண்டுபிடிப்பது சிரமமாகவும் இருக்கக்கூடும்...

குரங்கு வகைகளில் தலைமைக் குரங்கின் உருவம்,எடையெல்லாம் பெரிதாக இல்லாமலும் போகலாம். ஆனால், மற்றக் குரங்குகளைவிட 'குயுக்தி' அதற்கு அதிகம் இருக்கும்! மற்ற குரங்குகளைவிடத் தான் புத்திசாலி என்பதைப் பலவிதங்களில் தொடர்ந்து நிரூபித்து, ஒருவித பயத்தை அந்தக் குரங்கு ஏற்படுத்தியிருக்கும்.

சினிமாவில் வில்லன் சின்னவராக, குள்ளமாக இருப்பார். அதுவே அவரது அடியாள் ஏழு அடி உயரத்துக்கு ஆஜானுபாகுவாகத் தோற்றமளித்தாலும், வில்லன் எம்பி நின்று, அடியாளுக்கு ஒரு அறை கொடுக்கும்போது பணிவோடு அதை வாங்கிக்கொண்டு தலைகுனிந்து நிற்பான். இல்லையா? குரங்கிலும் அப்படித்தான்!

மனிதன் உட்பட எல்லா விலங்கினங்களிலும் அல்பா (Alpha) ஆண்கள் உண்டு. அல்பா ஆண்களுக்கு எல்லாவிதத் 'தலைமைத் தகுதி'களும் இருக்கும். பிறகு பீட்டா (Beta), காமா (Gamma), டெல்டா (Delta) என்று நீண்டு... ஒமேகாவில் (Omega) முடியும் (கிரேக்க அரிச்சுவடியில் அல்பா முதல் எழுத்து, ஒமேகா கடைசி!). ஒமேகா ஆண்கள் பணிவான, பயப்படுகிற, பின்வாங்குகிற, அடிமை மனப்பான்மை உள்ள டைப்!

திரும்பத் திரும்ப ஆண்களைப் பற்றி மட்டும் இங்கே குறிப்பிடுவதற்குக் காரணம்,நிலைமை அப்படித்தான்! எல்லா உயிரினங்களிலும் ஆண்களின் ஆளுமைதான் (Domination) அதிகம். ஒரு இனத்துக்குப் பெண்கள் தலைமையேற்பது மிகவும் அரிது. (பெண்கள் தலைமைக்கு உதாரணமாக, வெர்வெட் குரங்கு இனத்தைச் சொல்லலாம். அதில் ஆண்கள் வெறும் தொண்டர்களே)

அப்படியென்றால், விலங்கினங்களில் பெண்களின் நிலைமைதான் என்ன?

ஆண்கள் பலசாலியாக இருந்தாலும் பெண்ணுக்குப் பிடிக்காமல் போகலாம், இல்லையா?

அந்த ஆணைப் பெண் நிராகரிக்க முடியுமா? ஆணின் பலவந்தத்துக்குப் பணிந்து போய்த்தான் தீரவேண்டுமா?

'பணிந்து போவது' என்று சொல்வதைவிட, தன்னைப் பணிய வைக்கும் ஆளுமை உள்ள ஆணைத்தான் பெண் விரும்புகிறது என்று வேண்டுமானால் சொல்லலாம்!

இதோ, ஒரு சோதனை...

Hamsters என்கிற - எலி (Rodents) இனத்தைச் சேர்ந்தவை சோதனைக்கூடத்தில் கூண்டுக்குள் விடப்பட்டன. ஒரு மணி நேரத்துக்குள் பலவிதமான மிரட்டல்கள், மோதல்கள், துரத்தல்கள் நிகழ்ந்த பிறகு தலைவர், உபதலைவர், தொண்டர் என்று வரிசைப்படுத்தி தாங்களே ஒரு ஆட்சியை அந்த எலிகள் நிர்ணயித்துக்கொண்டன!

யார் நம்பர் 1, யார் யார் நம்பர் 2, 3 என்கிற இந்தத் 'தலைமை வரிசையை' விஞ்ஞானிகள் கவனித்துக் குறித்துக்கொண்டார்கள்.

அடுத்த கட்டமாக, ஆண் எலிகள் நீண்ட சங்கிலியில் பிணைக்கப்பட்டன - நாய்களை நாம் செயினில் (Leash) கட்டிவைப்பது போல. அதாவது, ஆண்கள் தாங்களாகச் சென்று பெண்ணிடம் செக்ஸ் வைத்துக்கொள்ளமுடியாது. பெண்களே வலியப் போனால்தான் உண்டு!

மறுநாள், அந்தக் கூண்டுக்குள் பெண் எலிகள் ஒவ்வொன்றாக அனுப்பப்பட்டன. ஆச்சரியம்! முதலில் போன பெண் எலி ஐந்து நிமிடத்துக்குள் ஒரு ஆணைத் தேர்ந்தெடுத்தது. அது, விஞ்ஞானிகள் வரிசைப்படுத்தியிருந்ததில் நம்பர் ஒன் தலைமை எலி!

இரண்டாவது பெண் எலி நுழைந்தவுடன், அது செக்ஸுக்குத் தேர்ந்தெடுத்தது உப தலைவரை (தலைவர் ஏற்கனவே 'பிஸி'யாக இருந்ததால்!).

கூண்டுக்குள் நுழைந்தவுடனேயே, பலசாலியான தலைவர் யார் என்பதைப் பெண் எப்படிக் கண்டுபிடித்தது?!

ஜாதகப் பரிமாற்றம், விசாரணைகள், ரெகமெண்டேஷன் எதுவும் இல்லாமல் ஒரு பெண் எலி 'நம்பர் ஒன்' ஆணைப் புணர்ச்சிக்காகத் தேர்ந்தெடுத்தது எப்படி?

வாசனையைப் பார்த்தே அவற்றால் தங்கள் தலைவரைக் கண்டுபிடிக்க முடியும். 'தலைவன்' என்கிற உணர்வு, தனி வாசனையை உடலில் ஏற்படுத்துகிறது! இதை Odour of Power என்கிறார்கள் விஞ்ஞானிகள்.

மாவீரன் அலெக்சாண்டரிடம் சிலிப்பூட்டும் ஒருவித கற்பூர வாசனை அடித்ததாக வரலாற்று ஆசிரியர் ப்ளூடார்க் எழுதியிருக்கிறார்!

புணர்ச்சிக்காகத் தயாராகும் பெண் விலங்கினங்கள், ஆண்களுக்குத் தரும் ஒத்துழைப்பும் ஆச்சரியமானது. கூண்டுக்குள் விடப்பட்ட பெண், நேரே ஆணிடம் சென்று, திரும்பிப் பின்புறத்தைச் சற்றுத் தூக்கியவாறு அமர்ந்து தடங்கலாக இல்லாத வண்ணம் தன் வாலை அகற்றிக்கொண்டு, ஆணுக்கு 'வசதி' செய்து கொடுத்தது!

பெண் , உடலுறவுக்கு முன் தன் பின்புறத்தால் ஆணின் உறுப்புப் பிரதேசத்தை மிருதுவாகத் தேய்க்கவும் செய்யும். ஆணின் வேட்கையை அதிகப்படுத்துவதற்காக அல்ல (அது உத்தரவாதம்!). பெண் தரும் 'மெஸேஜ்' அது! அதாவது, 'நான் நகரமாட்டேன். எங்கும் போய்விடமாட்டேன். உனக்கு வசதியாக இருக்கிறதா? எந்தக் கவலையும் இல்லாமல், முழு ஈடுபாட்டுடன் என்னோடு நீ உறவு கொள்ளலாம்...'- என்கிறது பெண்!

இவ்வளவு இருந்தும், எந்த விலங்கின் வாழ்க்கையிலும் சட்ட திட்டங்கள், சம்பிரதாயங்கள் எதுவும் நூறு சதவிகிதம் நிச்சயமல்ல... செக்ஸ் விஷயத்தில் சில சமயங்களில் எதுவும் மீறப்படலாம்!

அவ்வப்போது தலைவருக்கு மட்டுமே சொந்தமான பெண்ணின் கவனத்தைத் தொண்டன் ஒருவன் கவரக்கூடும்! தலைவன் அசந்து தூங்கிவிடும்போதோ, கவனக் குறைவாக இருக்கும் போதோ, சமயம் பார்த்து அந்தத் தொண்டனுடன் தலைவி ரகசிய உடலுறவு வைத்துக்கொள்வதும் உண்டு!

இதை Kleptogamy என்கிறார்கள். Klepto என்றால் திருடுவது! Gany - திருமண உறவு!

தலைவனின் 'செயல்பாடு' தலைவிக்குத் திருப்தி அளிக்காமல் போனாலோ அல்லது தலைவன் சற்று உடல் நலக்குறைவோடு இருந்தாலோ, அவனுக்கு வயசாகிவிட்டாலோ தொண்டனுக்கு சான்ஸ் அடிக்கும்!

தொண்டனிடம் ஏதோ விஷயம் இருக்கவேண்டும். ஒருவேளை, அவன் பிற்பாடு தலைவனாகக்கூட ஆகலாம்! இப்படியாக, Kleptogamy-க்குப் பல காரணங்கள் உண்டு!

பிற்காலத்தில், அரசர்கள் அந்தப்புரத்துக்குக் காவலாளிகளாக விரைகள் நீக்கப்பட்ட ஆண்களை நியமித்ததுகூட ராணிகளைப் பற்றிய இந்தக் கவலையினால்தான்!

(தொடரும்...)





# கவிதைப்புனல்

## தவம்

கூவிஅழைத்தால் குரல் கேட்டு ஓடிவந்து
பால் கொடுத்த அந்தப் 'பார்வதித்தாய்'
எம் அழைப்பை
ஏற்க மறுத்தது ஏன்?
இறந்த கவிக்கிரங்கி...
சூலநோய் தீர்த்துக் கல்லினிலே தோணிசெய்து
சூளை அறைச் சுண்ணாம்பில் சோலை செய்த
'தோணியப்பர்'
எங்களது கெஞ்சுதலை
ஏன்கேட்க மறுத்துவிட்டார்?
''ஆதிமூலமே'' என்று அழைத்ததையே காத்த 'ஹரி'
நீதிசாகக் கண்டும்நிஷ்டை கொண்டுவிட்டது ஏன்?
''குண்டையூர் நெல்லைக்
கொண்டந்து தா'' என்ற
சுந்தரர்க்காய் வந்த சோமகாந்தன்... 'நிம்மதியைத்
தந்திடடா' என்று தமிழ்பாடும் எங்குடிக்குத்
துணையாயேன் வரலை?
சுமைசுமந்தேன் வாழ்த்திடலை?
தேவர் தளை எரிக்க தீக்கொழுந்தாய் வந்தகுகன்
எங்களது பக்கத்தை எட்டியும் பார்க்கலை... நம்
வேதனையைத் தீர்க்க
விநாயகரேன் வரவில்லை?

கலியுகத்தில்...
தெய்வம் நம் கண்களுக்குத் தெரியாதாம்!
சரி. மண்ணை வாட்டும் அதர்மத்தைச் சங்கரித்து
அறம்பாட ஆரும்
'குரவர்களும்' தோன்றலியே...!
பொய்யைத் துகிலுரிந்து மெய்க்கு முடிதரித்துச்
சைவம் தழைக்கவைத்த 'சம்பந்தன்' போல்
எம்மை
உய்விக்க இங்கே ஒருவருமே வரவிலையே!

அனல்வாதஞ் செய்தும் அசையாமல் நீதிக்காய்ப்
புனல் வாதஞ் செய்தும்
பொய்யின் திமிரடங்க...,
பட்டினிச் சனங்களுக்குப் 'படியரிசி' பெற்றளிக்க,
போர்ப்பாம்பு தீண்டிய 'பூம்பாவை' களைமீட்க,
பூட்டிய மனக்கதவைப்
பொற்பாட்டால் திறக்கவைக்க...,
அற்புதங்கள் செய்து அயல் மகிழ்ந்து பாட என்று
'பொற்தாளம்' வேண்ட...,
புனிதத் தமிழ்க்கவிக்குப்
'பொற்சிவிகை' கேட்க...' புதிதாக இம்மண்ணில்
'ஒரு ஞான சம்பந்தன்' உதித்தாலே போதும் என்ற
வரங்கேட்டோம்.
நேர்ந்து வயிறுலர்ந்தோம்.
திசையெல்லாம்
எரியும் நெருப்புக்குள்
இன்றும் தவஞ் செய்துள்ளோம்.

■ தேராடி சித்தர்.

## வாக்கும் போக்கும்

மாகாண சபைத்தேர்தல்
வாகாக நடக்குமென்று
மந்திரிமார் சொல்லுவாங்க! - வாக்கெல்லாம்
ஆகாத வன்முறையில்
ஆசாமி வசமாகும்
அமைச்சுகளைச் சொல்லுவாங்க!

மதுச்சரக்கு வாடையிலும்
மயில் மறக்கும் சாடையிலும்
வாக்குகளைத் திரட்டுவாங்க! - தேர்தல்
சதுரங்க ஆட்டத்திலே,
ஜெயித்துவிட்ட கூட்டத்திலே
சரித்திரத்தைப் புரட்டுவாங்க!

அநியாய வேட்டையிலும்
அநாயாச முட்டையிலும்
அரசியலைக் கட்டுவாங்க! - சிலபேர்
முன்வாசல் உழைப்பினிலும்
மூக்கால் பிழைப்பினிலும்
மனவாங்கு கொட்டுவாங்க!

பச்சோந்திப் பாவனைப்பில்
பகல்வேஷ மொளுமொறுப்பில்
பரிவட்டம் சூடுவாங்க! - சிலபேர்
கச்சேரி, கனியாட்டம்
கணியெலாம் குத்திவாட்டும்
கவுரவத்தை நாடுவாங்க.

பதவிக்குக் கலம்பிடிச்சு,
'பதனுக்கு' வாலபிடிச்சுப்
பலபேரும் முட்டுவாங்க! - எம்பி
உதவிக்கு முன்னிற்க
ஒன்றனைத்து பின்னிற்க
உடன்படியாத் திட்டுவாங்க!

வருகின்ற தேர்தலிலே
வாக்குகளைச் சேர்த்தெடுக்க
வாக்குறுதி அளிப்பாங்க! - கனவான்
பெருவாரி வாக்குகளால்
பேரவைக்குப் போனாக்கால்
பத்திரத்தைக் கிழிப்பாங்க!

■ ஏறாவூர் அனலக்தர்

## இன்றும் நாளையும்

நேற்றிருந்த நிலைஎண்ணி ஏங்கி
நெக்குருகித் தவிப்பதுவும்... சொற்பச் சொர்க்கம்
காற்றினிலே கற்பூரம் கரைதல் போலே
கரையக் கண்டழுவதுவும்... நாளை என்ன
ஏற்படுமென்றறியாமல் இடறிக் குண்டின்
இடிவிழநாம் கருகுவதும்... ரத்தக் கண்ணீர்
ஆற்றினில் யாம் அலைவதுவும், அகதி வாழ்வும்
அலையழித்த மணல்வீடாய்... ஒருநாள் சாயும்.

நாளையொரு வாழ்வெமக்கு மலரும். அன்று
நரபலிகள் அற்று இனம் பெருகிக் காய்க்கும்;
பாலுமின்றி 'சரசயனம்' மீது செய்த
பயத்தவங்கள் விழும்; 'பால காண்டம்' தோன்றும்,
'ஏழு அரைச் சனி' போன்ற கொடுமை நீங்கும்,
எம்மண்ணின் வடு, காயம் மறையும்; அஞ்சித்
தாழ்ந்திருந்த கலைதழைக்கும், தமிழும் ஆர்க்கும்,
வசந்தத்தின் நிழலெமையும் தடவிப் பார்க்கும்.

விருப்பம்போல் தெருத்தெருவாய்த் திரிவோம்! கூத்தை
விடியும்வரை ரசித்திருப்போம்! ருசியாய்த் தின்போம்!
திருவிழாக்கள் தினஞ்செய்வோம்! போர்த்துன்பத்தில்
திளைத்தவர் நாம்... 'பேரினபம்' துய்ப்போம்! இங்கே
உருக்குலைந்த பள்ளிகட்டி உண்மை சொல்வோம்!
ஒளி மிகுநம் விழுமியத்தால் உலகை வெல்வோம்!
வருமொருநாள்! நம்புகழை வையம் போற்றும்
'வாழ்க்கைப்போர்' ஜெயித்த நமை வரலா றேத்தும்.

■ அருணன்.

## ஒரு தலைவருக்கு விடை

தும்பிக்கை விநாயகனின் கோயில் முன்னால்
தொழிலாளர் கூட்டத்தைக் கூட்டி முன்னர்
நம்பிக்கை மோசடியில் ஈடு பட்டு
நட்டாற்றில் தள்ளிவிட்ட தலைவன் தன்னை
''கொம்பன்நீ; விடையளிப்பு; பதவி யில்லை
கொடுத்திட்டோம் வழியனுப்பு விழாவே'' என்றார்
வம்புகளும் பலர்செய்தார்; தலைவர் மெல்ல
விடைபெற்றார்; அவமதிப்பு; கிண்டல் பேச்சு!

''நிருவாகத் தில்லுமுல்லு மறைப்பு; எங்கள்
நியாயபூர்வ பிரச்சினைகள் புதைப்பு; எம்மைக்
குருடாக்கி திரைமறைவில் துரைமா ரோடு
குதூகலிப்பு; அன்னவர்க்குப் பிடிப்புப் பந்தம்!
அருவருப்புக் கூத்துக்கள் அவ்வப் போழ்து
அரங்கேற்றம்; துரைத்தனத்தின் அட்ட காசம்!
ஒருவார்த்தை இத்தலைவர் பேச வில்லை
ஒத்துழைப்போ? இவரெமக்கு வேண்டா'' மென்றார்


கங்காணி தொழில்செய்த அன்னா ரண்ணன்
கண்மூடித் திறக்குமுனர் கணக்குப் பிள்ளை
தங்கவிடம் இல்லாது தவித்த அன்னார்
தம்பிக்குக் காவற்பணி; நல்ல வேலை!
சங்கத்தின் பலத்தையிவர் ஈடு வைத்துச்
சாதனைகள் புரிந்துள்ளார்; வெட்கக் கேடு!
எங்களுக்குக் கழுத்தறுப்பு; ஆத லாலே
எட்டப்பர் எங்களுக்கு வேண்டா மென்றார்!

இருள் வானை மின்னல்வாள் கிழிக்கும் வெட்டி
இடிபிடித்து அதிரவைக்கும்; நடுங்கும் பூமி
வருவெள்ளம் பேரழிவை விட்டுச் செல்லும்
விருட்சங்களைக் கோரப்புயல் சாய்க்கும்; பொங்கும்
பெருங்கடலும் கரையூரை விழுங்கும்; அந்தோ
பூகம்பம் தரைவெளியை உலுக்கும் ஈங்கு
ஒருங்கிணைந்த வெகுஜனத்து சக்தித் தீயும்
ஒழித்துவிடும்; தீய்த்துவிடும் கயவர் தம்மை!

[தொடரும்]

■ கவிஞர் ஜி.எஸ்.காந்தி.

## கொஞ்சல்வழிக் கல்வி





ஓவியர் பிக்காசோ பிறந்தவுடன்
இறந்துவிட்டதாக நினைத்திருக்கிறார்கள்
ஆனால் மருத்துவரான அவரது மாமா
பிக்காசோவின் வாயில் மூச்சுக்காற்றை ஊதி
பிழைக்க வைத்திருக்கிறார்

உன்னை முதல் முதலில் பார்த்தவுடன்
நான் சிலையாகி விட்டேன் என்றே நினைத்தேன்
நல்ல வேளை என் இதயத்தில்
காதலை ஊட்டி
நீ என்னை நடமாட வைத்துவிட்டாய்

சுறாமீன் நீந்திக்கொண்டே
இருக்காவிட்டால்
இறந்துவிடும்

நான் உன்னைக்
காதலித்துக்கொண்டே
இருக்காவிட்டால்
இறந்துவிடுவேன்

■ தபூ சங்கர்

## பற்றுவேன் கை

அன்பே! எனதுயிரே! என்றழைத்த தேன் மலரே!
என்பே ரறிந்தாய்! என்னையறிந்தாய்! - உன்பே
ரறிந்தேன்! உனையறிந்தேன்! அஞ்சாதே! உன்னைப்
புரிந்திடுவேனே மணம்!

கண்ணே! கலைமானே! என்றே நீ
முத்துத் தமிழில் முழங்கலிட்டாய்! - பித்து
எனக்குமுண்டு! எந்தன் எழிற்கிள்ளாய் உன்னை
மணக்கவுண்டு நல்ல மனம்!

சந்தடிகள் இல்லாத சாமப் பொழுதினிலே
வந்தடிகள் வைக்கின்றாய் வாசலிலே! உந்தனிதழிலே
ஒடியனைத்து ஒரு முத்த மியாமுன்
போடி! வெறுங்கனவு போ!

ஆடை அணிகலன்கள் அல்லாமற் பேரழகு
மேடை அமைந்திருக்கும் நின்மேனி! - நாளை
எனைக்குறித்து அல்லாற் பிறர்க்காமோ? என்றன்
மனக்கருத்தைச் சொன்னேன் மதி!

பூந்தோப்பு நீதான்! புகுந்திடுவேன் நிச்சயமே!
மத்தாப்புக் காட்டுவதாய் நம்பாதே! நாம் நகம்
சதை போலிணைந்து வாழ்வதற்கு
முன்னாடி வேண்டும் தொழில்!

காசுக்குக் கல்யாணங் கட்டுகிற காளையல்லன்!
ஆசிரிய வேலைக்கு விண்ணப்பம் - ஆசையுடன்
போட்டுள்ளேன்! கொஞ்சம் பொறுத்திருவாய் செங்கழுத்தில்
மாட்டிடுவேன் தாலி மகிழ்ந்து!

■ ஏறாவூர் - சாஹிறா எம். றிஃபாஃ.

## அருளைத் தா!

அங்கும் இங்கும் தினம்ஓடி
அலைந்து திரிந்தும் காணமால்
எங்கு ஒளித்தாய் பரம்பொருளே!
எனக்குத் தருவாய் நீயருளே!

திங்க ளுடனே கங்கைதனைத்
திகழும் முடியில் வைத்தவனே!
மங்கா துன்றன் நினைவுடனே
மண்ணில் வாழ அருளைத்தா!

பாதம் தொழுது பணிந்துனது
பத்திகாண வருகின்றேன்!
நாதா, வாழ்வை சீராக்கி,
நல்வழி காட்டு; அருளைத்தா!

காதல் செய்து களிப்பூட்டிக்
கவலைக் கடலில் தள்ளிவிடும்
மாதர்மையல் அணுகாமல்
மண்ணில் வாழ அருளைத்தா!

அன்புக் காக உயிர்விடவும்
அஞ்சா நெஞ்சம் உள்ளவரை
நண்ப ராக்கி - என்வாழ்வில்
நலங்கள்சேர அருளைத்தா!

மந்தைகள் போலும் வாழாமல்
மனித ராக மண்ணுலகில்
கந்தை யுடுத்தி வாழ்ந்தாலும்
கண்ணிய னாக அருளைத்தா!

நாட்டுப் பற்று மிக்கவனாய்
நாளும் வாழ; மது தொட்டு
ஆட்டம் போட்டு வாழாமல்
ஆண்ட வனே! அருளைத்தா!

■ கவிஞர் ஏ. கௌரிதாசன்.

## ஈழத்தமிழன் பாடுகிறேன்

பொங்கும் கண்ணீர் வெள்ளத்தில்
புழுவாய்த் துடித்தே அழுகின்றோம்
மங்கி வருகிறது எம் வாழ்வு
வாழ வழியே தெரியவில்லை.

குருதிப் புனலில் மிதக்கின்றோம்
குண்டு மழையில் நனைகின்றோம்
நிரந்தரத் தீர்வு இல்லையோ?
நிர்க்கதி வாழ்வின் எல்லையோ?

காட்டில் ஒளிந்து திரிந்தாலும்
கடலில் மூழ்கிச் சென்றாலும்
வீட்டில் வெளியில் இருந்தாலும்
வேட்டை ஆடிக் கொல்கின்றார்

அனலின் மேலே மெழுகாக
ஆலையில் சிக்கிய கரும்பாக
தினமும் வாடிச் சாகின்றோம்!
தீர்வது துயரம் எந்நாளோ?

தமிழனாய்ப் பிறந்த தவறன்றி
தவறு வேறு செய்யவில்லை!
சுமைகள் இறங்க வழியில்லை
சுகமும் பெறவும் மருந்தில்லை.

■ யாழ்வேந்தன்

## தொழிற்சங்கப் போராட்டம்

தொழிற்சங்க நடவடிக்கை தோற்றுப் போனால்...
தொடர்வதினி பஞ்சம்பசி பற்றாக் குறையே
பழிபாவப் பூமிக்கும் வதைகள் பட்டு
பாடுபடும் வர்க்கத்தார், பாமரர்க்கும்
வழியேதுங் கிட்டாது துடிது டித்து
வாழ்கின்ற சோதனைகள் சூழ்ந்து எம்மை
இழிநிலைக்குள் தள்ளிவிடும் இருண்ட கண்ட
இந்நாட்டுக் களத்திடையே புறமொ துக்கும்


யாராட்சி கொண்டாலும் யாசிப் போரின்
யாப்புகளில் வரவுக்கதி செலவி னங்கள்
தாராள மாயுயர்ந்து தாங்க வொண்ணாத்
தடுமாறும் நிலைதோன்றின் உணர்ச்சி தன்னைப்
போராலும் இயாலாதே தடுக்க, ஆள்வோர்
புரிந்துணர்வோ டெமது மக்கள் குறைகள் நீக்க
நேரான நடமாடும் பணிநு கர்த்தி
நேயமுடன் வேண்டுதலை ஏற்க வேண்டும்!


கட்சிக்குள் விவாதங்கள் பொல்லாப் பூசல்
கண்டபடி விலையேற்றம் பெருஞ்சு மைகள்!
மீட்சிபெறக் கதியற்றுப் புலம்பு வோரின்
மிகைத்திட்ட தாழ்நிலைமாயச் சித்தந் தன்னில்
ஆட்சியமர் பெருந்தலைவர் அமைச்சர் மாரும்
ஆராய்ந்து தீர்க்கவொரு வழியுங் கண்டால்
மாட்சிமைகள் மலரு மினித் தாழ்ச்சி யின்றி
மக்கள் மனந் தளராது செழிக்குமீ மண்ணும்!

ஆர்ப்பாட்டம் போராட்டம் கெ(அ)ஞ்சி வாழும்
அடுக்காத எந்தவொரு சூழ்நி லையும்
வேர்விட்டுச் செங்கோலின் விளிம்பு மீது
வியாபித்து ஆதிக்கம் செலுத்துமானால்...!
ஊர்கெட்டுப் போகுமெந்த முன்னெ டுப்பும்
ஊனமுற்றுப் பேறாமே ஊழ்வி னைகள்
சீர்குலைக்கும் சமூகத்தைச் சிதற டிக்கும்!
செயற்பாட்டின் திறன்சரிந்து அழிந்தே போகும்!

■ கவிஞர் எ.ஜி. நாகூர் நிஜாமலை.

# விபரீத எண்ணங்களால் எதிர்மறை உணர்வு விளையுமா?





**கேள்வி:** எனது மகனுக்கு வயது 7. அவருக்கு 9 மாதத்தில் தடுப்பூசி போட்டபோது அன்றிரவு காய்ச்சல் ஏற்பட்டு வலிப்பு உண்டானது. அதன் பின்னர் காய்ச்சல் ஏற்படும் போதெல்லாம் வலிப்பு நோய் வருகின்றது. 5 வயதில் இப்படி காய்ச்சலின் போது வலிப்பு வந்த வேளை - விசேட வைத்தியரிடம் காட்டியபோது அவர் EEG போன்ற பரிசோதனைகளைச் செய்துவிட்டு - தொடர்ந்து உபயோகிக்க சோடியம் வல்போறேட் (SODIUM VALPORATE) மாத்திரைகளைத் தந்தார். இன்று வரை அந்த மாத்திரைகளை உபயோகித்து வருகின்றோம். கடந்த செப்டம்பர் 2007இல்தான் மாத்திரைகளை நிறுத்தும்படி வைத்திய நிபுணர் கூறினார். அதன் பின்னர் எதுவித பிரச்சினையும் ஏற்படவில்லை. இனிகாய்ச்சல் வரும்போது வலிப்பு ஏற்படும் சாத்தியம் உண்டா? வலிப்பு தொடர்ந்து ஏற்பட்டபடியால் குழந்தையின் ஞாபகசக்தி - அறிவு குன்றுமா? இப்பொழுது 7 வயதிலும் மகன் திக்கித் திக்கித்தான் பேசுகின்றார். இந்தக் கோளாறு, வலிப்பினால் ஏற்பட்டிருக்கும் சாத்தியம் உண்டா?


**பதில்:** காய்ச்சலின் போது ஒரு சில குழந்தைகளுக்கு வலிப்புக் குணம் ஏற்படுவதுண்டு. இதனை FEBRILE FITS என்று கூறுவார்கள். காய்ச்சல் உக்கிரமாக இருந்தால்தான் இந்த வலிப்பு ஏற்படும் என்பதற்கில்லை. சில குழந்தைகளுக்கு காய்ச்சல் ஒரு டிகிரி ஏறினால் கூட வலிப்பு ஏற்படுவதுண்டு. இப்படிக் காய்ச்சலின் போது ஏற்படும் வலிப்பு, குழந்தை வளர-மூளை விருத்தியடைய - மெல்ல மெல்லக் குறைவாக ஏற்பட்டு 6, 7 வயதுகளில் இப்படி காய்ச்சலின் போது ஏற்படும் வலிப்பு இல்லாமலே போய்விடுவதுண்டு.

அதேவேளையில், காய்ச்சலின் போது ஏற்படும் வலிப்பு சாதாரணமானது என்று கவலையீனமாக இருக்கக் கூடாது. ஏனென்றால் சில வேளைகளில் - EPILEPSY என்கின்ற காக்கை வலிப்பு நோயும் கூட வலிப்பு நோயைத்தரும். அதனால் தான் உங்கள் மருத்துவர் EEG என்று மருத்துவ பரிசோதனையைச் செய்துள்ளார். இந்தப் பரிசோதனை மூலம் உங்கள் மகனுக்கு ஏற்பட்டுள்ளது சாதாரண வலிப்பா அல்லது EPILEPSYயா என்பதை மருத்துவரால் அறிந்துகொள்ளமுடியும். EPILEPSY என்கின்ற வலிப்பு நோய்க்கோ அல்லது காய்ச்சலின் போது அடிக்கடி வலிப்பு ஏற்பட்டாலோ உபயோகிக்கப்படும் மருந்துகளில் ஒன்றுதான் சோடியம் வல்போறேட். தற்போது உங்கள் மகனுக்கு வலிப்பு ஏற்படுவதில்லை என்பதால் மாத்திரை உபயோகம் நிறுத்தப்பட்டுள்ளது. அநேகமாக காய்ச்சலின் போது ஏற்படும் வலிப்பு இந்த வயதுப் பராயத்தில் நின்றுவிடும் வாய்ப்புள்ளது. எனவே, நீங்கள் அஞ்சுவதற்கு ஒன்றுமில்லை. அப்படி திரும்பவும் வலிப்பு ஏற்பட்டால் நரம்பியல் நிபுணரின் (NEUROLOGIST) ஆலோசனை தேவை. அப்படி ஏற்படும் வலிப்பு சிலவேளை EPILEPSYயின் காரணமாக இருக்கலாம். வலிப்பு ஏற்படுவதால் மூளை மந்தமடையாது. அறிவுத்திறன் குறையாது. ஆனால், உபயோகிக்கும் மருந்துகள், உடல் மனச்சோர்வுகளை ஏற்படுத்துவதால் பிள்ளைகளின் நாட்டம் கல்வியில் குறைய வாய்ப்புண்டு. போதாக்குறைக்கு அடிக்கடி வலிப்பு வரும் குழந்தைகளை, பெற்றோர் மற்றைய குழந்தைகளைப் போல சாதாரணமாக வளர்க்காது 'பொத்தி' பாதுகாத்து (PROTECTED) வளர்ப்பதால் - ஏற்படும் பரிவுணர்வு குழந்தைகளைக் கல்வியில் மட்டுமல்ல, வாழ்க்கையிலும் மந்தமாக்கிவிடும். இது மனோவியல் சம்பந்தப்பட்டதே ஒழிய வலிப்பு நோய் காராணமானது அல்ல. திக்கித் திக்கிப் பேசுவது வலிப்பின் காராணமாக அல்ல. இதற்கு குழந்தைநோய் நிபுணரின் ஆலோசனை, ENT நிபுணரின் ஆலோசனை என்பவை தேவை.

**கேள்வி:** வயது 24. எனது உயரம் 5 அடி 4 அங்குலம், நிறை 51 கி.கிராம். நான் இப்போது இரண்டு மாத கர்ப்பமாக இருக்கின்றேன். எனக்கு சரியான மலச்சிக்கல் உள்ளது. அதுதவிர வயிற்றுக்குள் காற்றிருந்து இரைந்து கொண்டிருப்பது போலவும் வயிறும் பொருமிக் கொண்டிருக்கின்றது. இதனால் எனக்கு பசி இருந்தாலும் சாப்பிடமுடியாமல் இருக்கின்றது. எனக்கு உரிய சரியான உணவு முறையை தருக. எனது நிறை எனக்கு பொருத்தமானதா என்பதையும் கூறவும்?

**பதில்:** உங்களுக்கு ஏற்பட்டுள்ளது அநேகமான பெண்களுக்கு கர்ப்பகாலத்தில் ஏற்படும் பிரச்சினைதான். இரண்டு மாத கர்ப்ப காலத்தில் - சுரக்கப்படும் ஹோர்மோன்களால் - ஒரு சிலருக்கு வாந்தி, பசியின்மை, உணவில் வெறுப்பு, வாய்வுக்கோளாறு, மலச்சிக்கல் என்பவை ஏற்படும். இந்தக் கோளாறுகள் ஒன்றுக்கொன்று சம்பந்தப்பட்டவை. பசியின்மை, வாந்தி என்பவற்றால் சரியான உணவு உண்ணப்படாததால் - மலச்சிக்கல், வாய்வுக்கோளாறுகள் ஏற்படுகின்றன. இந்தப் பிரச்சனைகள் நான்கு மாத கர்ப்ப காலத்தில் மெல்ல மெல்லக் குறைந்து - காலகெதியில் மறைந்து போய் விடும். எனவே கவலை வேண்டாம். இந்தக் காலப்பகுதியில் நிறையவே பழங்களையும் காய்கறி கீரை வகைகளையும் உணவில் சேர்த்துக்கொள்ளவும். நிறைய நீர்ப்பதார்த்தங்கள், பழரசங்கள் அருந்தவும். செயற்கை பழரசங்களை விட இயற்கைப் பழரசங்கள் மேலானவை. ஒரு சிலவேளை மலச்சிக்கல் அதிகமாக இருந்தால் CREMAFFIN என்ற மருந்தை இரவில் இரண்டு மேசைக்கரண்டி தினமும் அருந்திவரலாம். இந்த மருந்தால் கருப்பையில் உள்ள சிசுவுக்கு பாதிப்பு எதுவும் ஏற்படாது என்றாலும் இது பழக்கத்திற்கு கொண்டுவராமல் இருப்பது நல்லது. ஒருசில மென்மையான உடற்பயிற்சிகளும் மலச்சிக்கலைத் தவிர்க்கும். கர்ப்ப காலத்தில் நிறை அதிகரிப்பது சாதாரணமானதே. உங்கள் நிறை சற்று அதிகம் என்றாலும் இது எதிர்பார்க்கப்படுவதே. ஒன்பது மாத காலத்தில் கர்ப்பிணிப்பெண்கள் 10 - 12 கிலோ கிராம் நிறை அதிகரிப்பு எதிர்பார்க்கமுடியும்.

**கேள்வி:** ஆண். வயது 48 பட்டம் பெற்று, பெரும் பதவியில் உள்ளேன். கடந்த சில வருடங்களாக, எனது தொழில் நிமித்தம் குடும்பத்தை பிரிந்து வெளிநாட்டில் வாழ்கின்றேன். அவ்வப்போது எனது தூதரகத்திற்கு வரும் 'சுடர்ஒளி' வார சஞ்சிகையில் டாக்டரின் மருத்துவ ஆலோசனைகளைப் படிக்கும் வாய்ப்பு கிடைத்துள்ளது. இதனால் எனது பிரச்சினைக்கு உங்கள் தீர்வை காண விரும்புகின்றேன். நான் இருக்கும் இடத்தில் - எனது பிரச்சினை பற்றி டாக்டரிடம் கலந்தாலோசித்தால் - என்னை மனோநல வைத்தியரின் ஆலோசனைக்கு அனுப்பிவிடுவார்களோ, அதனால் எனது பதவிக்கு ஊறு ஏற்பட்டு விடுமோ என்று பயந்துதான் உங்களிடம் இந்த பிரச்சினைக்கு தீர்வுகாண விழைகின்றேன். எனக்கு சமூகத்தில் ஏற்றுக்கொள்ளப்படாத விபரீதமான பால் உறவு சம்பந்தப்பட்ட எண்ணங்கள் ஏற்படுகின்றன. மனைவியைத் தவிர்ந்த வயதான பெண்கள், சிறுபெண்கள் என்போருடன் உடலுறவு கொள்வதுபோல் எண்ணங்களில் திளைத்துவிடுகின்றேன். இந்த எண்ணங்களுடன் சுய இன்பம் அனுபவிக்கின்றேன். இதனால் எனக்கு எதிர்மறை உணர்வுகள் (NEGATIVE FEELINGS) ஏற்பட்டு உடல் நிலை பாதிக்கப்படுமா? எனது மனதின் சமநிலை பாதிக்கப்படுமா? இப்படி எண்ணங்கள் ஏற்படுவது பாவமா? மனைவியைத் தவிர, மற்றப் பெண்களைப் பற்றி விகாரமாக பால் உணர்வு ஏற்படுவது எனது எதிர்கால குடும்ப வாழ்க்கையை பாதிக்குமா? எனக்கு மனநோய்கள் ஏற்பட வாய்ப்புண்டா?




**பதில்:** உங்களுக்கு ஏற்படும் இத்தகைய எண்ணங்களை SEXUAL FANTASY என்று அழைப்பார்கள். இந்தத் துறையில் எனக்கு அதிக அனுபவம் இல்லாதபடியால் எனது சக மனோ வைத்திய நிபுணருடன் கலந்தாலோசித்து அவரது கருத்துடன் உங்கள் கேள்விக்குப் பதிலளிக்கின்றேன்.

ஒவ்வொருவரின் எணணங்களால் உருவாக்கப்பட்ட கற்பனைகள் (IMAGINA-TION) இந்த FANTASIES ஐ தருகின்றன. இந்தக் கற்பனைகள் நிதர்சனமான (REALITY) வை அல்ல. எனினும் அவை உள்மனதின் எதிர்பார்ப்புகளை, விருப்பங்களை பிரதிபலிக்கின்றன. இன்பகரமான விளைவுகளை உங்களுக்கு தரும் இந்த எண்ணங்கள் நிச்சயமாக எதிர்மறை உணர்வுகளை ஏற்படுத்தா. ஆனால், நீங்களாகவே இந்த உணர்வுகளைக் குற்றமாக, பிழையாக, தப்பாகக் கருதி - வருந்தினால் (REPENT) அவை எதிர்மறை விளைவுகளை ஏற்படுத்தும். இவை தப்பா, சரியா என்ற முடிவு - ஒவ்வொருவரதும் தனிப்பட்ட முடிவுதான். எப்படி மது அருந்துவது, புகை பிடிப்பது, ஏன் விவாகரத்து செய்வது என்பவை ஒவ்வொருவரின் எண்ணத்தை பொறுத்தவரை சரியாகவோ, தப்பாகவோ தெரிகின்றனவோ - அதுபோலவே இந்த எண்ணங்களும் சரியோ தப்போ என்பது, அவரவர் மனத்தை பொறுத்தது. இத்தகைய எண்ணங்களால் ஒருவரது தனிப்பட்ட வாழ்க்கைக்கு, மனவியலாகவோ, சமூகவியலாகவோ, தொழில் முறையாகவோ பிரச்சினைகள் ஏற்படாதவிடத்து - இதனைப் பாவம் என்றோ, தப்பு என்றோ கூற எதுவித காரணங்களும் இல்லை. உண்மையில் பெண்களோடு - உங்கள் மனைவியைத் தவிர - உடல் உறவு நேரடியாக இல்லாதிருக்கும் போது, இது பாவம் என்று எண்ணுவது தவறு. நீங்கள் திருப்பிக் கேட்கலாம். பைபிளில் 'மனதால் கூட விபச்சாரம் செய்யாதிருப்பாய்' என்று கூறப்பட்டிருக்கின்றதே - இது அப்படிப்பட்ட செயலல்லவா என்று. இங்குதான் உங்கள் குற்ற உணர்வு தலைகாட்டுகின்றது. இதனை குற்றமாக நீங்கள் கருதினால் நிச்சயம் இது உங்கள் மனோநிலையைப் பாதிக்கும். மனோநிலை பாதிப்பு உங்கள் சொந்த வாழ்க்கை - தொழில் சமூக வாழ்க்கை என்பவற்றை பாதிக்கும். மனித மனமே - தனக்கு கிட்டாத கனிக்கு (FORBIDDEN FRUITS) ஏங்குவது வழக்கம். கிட்டாத பொருளுக்கு ஏங்கும்போது கிடைக்கும் அனுபவம், மகிழ்வு, விறுவிறுப்பு என்பவை ஒரு திருப்தியை மனிதனுக்கு அளிக்கின்றன. எனவே உங்கள் பிரச்சினை மிக சாதாரணமானது. இதனால் உங்கள் உடல் நிலை, மனநிலை பாதிக்கப்படாது. இது பற்றி எதுவித குற்ற உணர்வுகளுக்கும் இடம் கொடுக்காமல் வாழுங்கள்.

**கேள்வி:** வயது 46. ஆண். நீரிழிவு நோயினால் பாதிக்கப்பட்டுள்ளேன். 'பீட்ருட்' கிழங்கு எனக்கு உகந்ததா? 'பீட்ருட்' எவ்வளவு சாப்பிடலாம்?

**பதில்:** நீரிழிவு நோய்க்காரர்கள் எந்தவிதமான இயற்கையான உணவுகளையும் உணவில் சேர்த்துக் கொள்ளலாம். 'பீட்ருட் கிழங்கிலிருந்து - சர்க்கரை தயாரிப்பதால் - பீட்ருட்' கிழங்கு நீரழிவு நோயாளிகள் சேர்க்கக்கூடாது என்று ஒரு கருத்து உள்ளது. 'பீட்ருட்' கிழங்கில் - மற்றைய காய்கறிகளை விட சற்று அதிகமாகவே சர்க்கரைச் சத்து இருப்பது என்னவோ உண்மைதான். என்றாலும் - அளவாக சாப்பிட்டால் பிரச்சினை இல்லை. 100 கிராம் பீட்ருட்டில் 36 கலோரிகள் உள்ளன. இது தவிர FOLATE, பொட்டாசியம், மங்கனீஸ் போன்ற கனியுப்புகள் உள்ளன. பீட்ருட் இலைகளை அநேகர் ஒதுக்கி விடுவதுண்டு. இந்த இலைகளில், தண்டில், கல்சியம், இரும்பு, பீட்டா கரட்டின் என்கின்ற விட்டமின் சத்துக்கள் நிறைய உள்ளன. சில உணவியல் நிபுணர்கள் பீட்ருட்டின் சிவப்பு நிறத்தை தரும் பொருளில் - புற்றுநோய்களுக்கு எதிரான சத்து இருப்பதாகத் தெரிவிக்கின்றார்கள். அதேவேளையில், 100 கிராம் கரட்டில் (CARROT) 32 கலோரிகளும் 100 கிராம் வெங்காயத்தில் 28 கலோரிகளும் இருக்கும் போது பாவம் - சீனி தயாரிப்புக்கு பீட்ருட் உபயோகமாவதால் நீரிழிவு நோயாளருக்கு பீட்ருட் கூடாது என்று தவறாக கருதப்படுகின்றது. உங்களுக்கு இன்னும் சந்தேகமிருந்தால் பீட்ருட் உட்கொள்ளமுன்னர் உங்கள் இரத்தத்தின் சர்க்கரை அளவைப் பரிசோதியுங்கள். பின்னர் பீட்ருட் உட்கொண்டு இரண்டு மணிநேரத்தின் பின்னர் சர்க்கரை முடிவுகளையும் வைத்துக்கொண்டு நீங்கள் உட்கொள்ளவேண்டிய பீட்ருட் அளவை நீங்களே அறிந்துகொள்ளமுடியும்.




சுடர் சிந்தனை :- "தொடர்ச்சியான பயிற்சியே வெற்றிக்கு வழி"

# தரம்-05 புலமைப்பரிசில்

## விசேட மாதிரி வினாத்தாள் - 07

மாணவர் பெயர் : .................................................
முகவரி : .................................................
பாடசாலை/கல்வி நிலையம் : .................................................
மாவட்டம் : .................................................
தொலைபேசி இலக்கம் : .................................................

### எல்லா வினாக்களுக்கும் விடை தருக.

### பகுதி - I I

01. கீழே தரப்பட்டுள்ள பாடலை வாசிக்க.

**காரிருள் அகத்தில் நல்ல**
**கதிரொளி நீதான் இந்தப்**
**பாரிடைத் துயில்வோர் கண்ணிற்**
**பாய்ந்திடும் எழுச்சி நீதான்**
**ஊரினை நாட்ட இந்த**
**உலகினை ஒன்று சேர்க்கப்**
**பேரறிவாளர் நெஞ்சிற்**
**பிறந்த பத்திரிகைப் பெண்ணே.**

பாடலடிகளைக்கொண்டு 1-10 வரையுள்ள வினாக்களுக்கு விடை எழுதுக.

1) பாடலில் எதைப்பற்றி விபரிக்கப்பட்டுள்ளது?
.................................................

பின்வருவனவற்றின் ஒத்த சொல்லை எழுதுக.
2) அகம் - .................................................
3) துயில் - .................................................

பின்வருவனவற்றின் எதிர்சொல்லை எழுதுக.
4) நல்ல - .................................................
5) எழுச்சி - .................................................

6) "ஊரினை" என்பதனைப் பன்மையில் எழுதுக.
.................................................

7) "கதிரொளி" என்பதை பிரித்தெழுதுக.
.................................................

8) "பத்திரிகை" என்பது குறிக்கும் பால் வகை எது?
.................................................

9) பாடலில் உள்ள பெயரெச்ச சொல் ஒன்று எழுதுக.
.................................................

10) பாடலில் உள்ள முன்னிலை ஒருமைச் சொல்லை எழுதுக.
.................................................

02. பின்வரும் சொற்களை பொருத்தமாக ஒழுங்குபடுத்தி கருத்துள்ள வாக்கியமாக எழுதுக.
1) சிந்தித்துச/தரும்/காரியம்/நிதானமாச/செய்யும்/நன்மையே
.................................................
2) சிறந்த/கல்வி/இளவயதுப்/காலமாகும்/கற்க/பருவமே
.................................................

03. பின்வரும் பழமொழிகளின் கருத்தினை எழுதுக.
1) நிறைகுடம் தளம்பாது.
.................................................
2) அவசரம் அல்லல் தரும்.
.................................................

04. வெற்றிடத்திற்குப் பொருத்தமான எழுத்துப் பிழையற்ற சொல்லை அடைப்புக்குள்ளிருந்து தெரிவுசெய்து எழுதுக.
1) வாழைக்............. யில் அதிகளவு பழங்கள் காணப்பட்டன. (குழை/குலை/குளை)
2) மழை பெய்ததால் தாவரங்கள் ......................... வளர்ந்திருந்தன. (செழித்து/செலித்து/செளித்து)
3) மாணவர்கள் ................... காலையில் உடற்பயிற்சியில் ஈடுபடுவர். (வளமையாக/வலமையாக/வழமையாக)

05. பின்வரும் படங்களுக்குரிய ஆங்கிலச் சொற்களை எழுதுக.





.............................. .............................. ..............................

06. பின்வரும் ஆங்கில வசனத்திற்குரிய தமிழ்க் கருத்தினை எழுதுக.
1) Clap your hands - .................................................
2) Listen to me please - .................................................
3) Please give me a pencil - .................................................

07. பின்வரும் சிங்களச் சொற்களின் கருத்தை தமிழில் புள்ளிக் கோட்டின் மீது எழுதுக.



ஒபே வயச கீயத?
.................................................

மகே வயச தஹயய்.
.................................................



இல. 08 தொடக்கம் 29 வரையுள்ள வினாக்கள் ஒவ்வொன்றுக்கும் மிகப பொருத்தமான விடையின் கீழ்க் கோடிடுக.

08. பின்வருவனவற்றுள் பூச்சி இனம் அல்லாதது எது?
1) கரப்பான் 2) எறும்பு 3) நுளம்பு 4) தேரை

09. மிக வேகமாக தரையில் ஓடும் விலங்கு எது?
1) சிறுத்தைப்புலி 2) சிங்கம் 3) ஒட்டகம் 4) முயல்

10. பின்வருவனவற்றுள் மேலொட்டித் தாவரம் எது?
1) வெள்ளரி 2) குருவிச்சை 3) பூசணி 4) கத்தரி

11. கிளிகள் விரும்பி உண்ணும் பழத்தை கொண்ட தாவரம் எது?
1) முந்திரி 2) திராட்சை 3) பலா 4) கொவ்வை

12. தொட்டால் அதிகளவு சுணையையும், கடியையும் ஏற்படுத்தும் தாவரம் எது?
1) தொட்டாற் சுருங்கி 2) காஞ்சோண்டி
3) தூதுவளை 4) அறுகு

13. இலையிலும் தண்டிலும் முட்களைக் கொண்ட மூலிகைத்தாவரம் எது?
1) தூதுவளை 2) குறிஞ்சா 3) கற்பூரவள்ளி 4) குப்பைமேனி

14. காற்றின் மூலம் பரவிப் பெருகும் தாவரம் அல்லாதது எது?
1) மூக்குத்திப் பூண்டு 2) எருக்கலை
3) முருங்கை 4) நெருஞ்சி

15. கடுமையான காய்ச்சலுடன் தோலில் சிவப்புப் புள்ளிகள் ஏற்படுதல் எந் நோயின் அறிகுறியாகும்?
1) டெங்கு 2) மலேரியா
3) நெருப்புக்காய்ச்சல் 4) யானைக்கால்

16. இலங்கையின் பிரதானமான இயற்கைத் துறைமுகமாக அமைவது எது?
1) கொழும்பு 2) காலி
3) திருகோணமலை 4) காங்கேசன்துறை

17. இலங்கையில் கடவுச் சீட்டுக்களை வழங்கும் திணைக்களம் எது?
1) சுங்கத் திணைக்களம் 2) ஆட்பதிவுத் திணைக்களம்
3) பொலிஸ் திணைக்களம் 4) குடிவரவு, குடியகல்வு திணைக்களம்

18. இலங்கை அரச இலச்சினையில் தூய்மையை குறிக்கும் அடையாளம் எது?
1)  2)  3)  4) 

19. இலங்கையில் சிறந்த நுட்பங்களுடன் கூடிய வியாபார நிலையங்களுக்கு வழங்கப்படும் சான்றிதழ் எது?
1) SLS 2) ISBN 3) SLIM 4) ISO

20. சுவாசத்திற்கு அதிக தீங்கு விளைவிக்கும் தாவரம் எது?
1) பாத்தீனியம். 2) கிடைச்சி. 3) நாயுருவி. 4) ஆமணக்கு

21. 

இவ்வீதிச் சமிக்ஞை குறிப்பது,
1) முன்னால் மூன்று வீதிகள் சந்திக்கின்றன.
2) முன்னால் சுற்று வளைவுச் சந்தி உள்ளது.
3) வலப்பக்கமாக வளைந்து செல்லவும்.
4) இடப்பக்கமாக வளைந்து செல்லவும்.

22. பின்வருவனவற்றுள் நீண்ட அலகைக் கொண்ட பறவை எது?
1) கழுகு 2) காகம் 3) கொக்கு 4) கிளி

23. நெற் களஞ்சியங்களில் அதிகளவு காணப்படும் பூச்சி எது?
1) அந்துப்பூச்சி 2) வண்ணத்துப்பூச்சி
3) கரப்பான் பூச்சி 4) மூட்டுப்பூச்சி

# இருளே ஒளியாய்...!

யாழ்ப்பாணத்திலுள்ள 'வாழ்வகம்' கட்புல வலுவற்றோருக்கான ஒரு கலங்கரை விளக்கம். விழியிழத்தலால், வாழ்வின் வழி தொலைத்து, சூனிய இருளுக்குள் மூழ்கிக்கிடந்த விழிப் புலனற்றோருக்கு, இருளையே ஒளியாகக் கொண்டு அவர்களும் சமூகத்தின் பிரஜைகளே என்ற அடையாளத்தை - அங்கிகாரத்தை - 'வாழ்வகம்' ஏற்படுத்திக் கொடுத்துள்ளது. வாழ்வகத்தின் ஸ்தாபகரும், முன்னாள் தலைவருமான திருமதி. அன்னலட்சுமி சின்னத்தம்பி அவர்களின் மறைவைத் தொடர்ந்து, வாழ்வகத்தின் தலைவராக திரு.ஆறுமுகம் ரவீந்திரன் (B.A. Dip.in.Ed. M.Ed) செயற்பாட்டு வருகின்றார். இயற்கையிலேயே விழிவலுவற்ற இவர் இன்று யாழ்.தேசிய கல்வியற் கல்லூரியிலே விரிவுரையாளராகுமளவிற்கு கல்வியில் ஆழ்ந்த புலமையாளராகவுள்ளார். கூடவே சிறுகதை, கவிதை, கட்டுரை என இலக்கியத் தளத்திலும் தீவிரமாக இயங்கி வருபவர். தன்னுடைய பிள்ளைகளைப் போலவே, வாழ்வகத்திலுள்ள கட்புல வலுவற்ற பிள்ளைகளையும் நேசிக்கும் ஆ.ரவீந்திரனுடன் 'சுடர்ஒளி' நிகழ்த்திய நேர்காணல் இங்கு பிரசுரமாகிறது.

*கேள்வி:-* வாழ்வகம் உருவாவதற்கான 'கருக்கொள்ளல்' எவ்வாறு நிகழ்ந்தது?

*பதில்:-* கண் பார்வையற்றவர்களின் கல்வி மேம்பாடு தொடர்பான சிந்தனை மிகவும் பிற்பட்ட காலத்திலேயே கருக்கொண்டிருப்பதை நாம் காண முடியும். அதிலும் இலங்கைவாழ் தமிழ்ப் பேசும் பார்வையற்றோரின் கல்வி தொடர்பாக மிகவும் தாமதமாகவே சிந்திக்கப்பட்டிருக்கின்றது. இத் தமிழ்பேசும் பார்வையற்றோரின் கல்வி வரலாறு 1956ஆம் ஆண்டு கைதடி நவீல்ட் பாடசாலை ஆரம்பிக்கப் பட்டதுடனேயே ஆரம்பிக்கின்றது என நாம் ஒருவாறு கூறமுடியும். நவீல்ட் பாடசாலையில் பார்வையற்றவர்களுக்கு ஆரம்பக்கல்வி மட்டுமே அளிக்கப் பட்டது. அதன் பின் இவர்கள் எவ்வாறு தமது கல்வியைத் தொடர்வது என்பது தொடர்பாக அப்போது யாருமே சிந்திக்கவில்லை. இந்நிலையில் அங்கு கற்றவர்கள் கல்வியால் பெறக்கூடிய பயன் எதையும் பெற முடியாதவர்களாக இருந்தார்கள். இங்கு கற்றதன் பிற்பாடு இவர்கள் தமது வீடுகளுக்குச் சென்று ஆரம் பத்தில் எவ்வாறு இருந்தார்களோ அது போலவே மீண்டும் வீணே முடங்கியிருக்க வேண்டிய துர்ப்பாகிய நிலைக்குள்ளானார் கள்.

இவ்விழி நிலைக்கு முடிவுகட்டும்முகமாக 1972இல் இலங்கை ஒருமுகப்படுத்தப்பட்ட கல்வித்திட்டம் அரசாங்கத்தால் அறிமுகப் படுத்தப்பட்டது. இதன் பயனாக பார்வையற்ற மாணவர்களுக்கு சாதாரண பாடசாலைகளில் சாதாரண மாணவர்களோடு இணைந்து கல்வி கற்கும் வாய்ப்புக் கிட்டியது. எமது வாழ்வகத்தின் ஸ்தாபகரும் முன்னைநாள் தலைவருமான அமரர் செல்வி. அன்னலட்சுமி சின்னத்தம்பி அவர்கள் மனமுவந்து இப் பணியைப் பொறுப்பேற்க முன்வந்தார். இதுவே இங்கு பார்வையற்றவர்களின் கல்வி வரலாற்றில் ஒரு பாரிய புரட்சிக்கு வழிகோலிற்று. இதன் பயனாகப் பலர் கல்வியால் பெறக்கூடிய பயன்களைப் பெற்று வாழ்வில் வளங்கண்டனர்.

பார்வையற்ற மாணவர்கள் ஆரோக்கியமான ஒரு சூழலில் தங்கியிருந்து தமது பாடசாலைக் கல்வியை மேற்கொள்ள வகைசெய்யக்கூடிய ஓர் இல்லத்தை அமைக்கவேண்டும் என்னும் எண்ணம் அவர் மனதில் உதித்தது. அதன் பயனாய் 1988 ஆம் ஆண்டு தெல்லிப்பழையில் வாழ்வகம் உதயமாயிற்று.

*கேள்வி:-* எவ்வாறான வழிகளில் வாழ்வகத்துக்கு மாணவர்கள் உள்வாங்கப்படுகிறார்கள்?

*பதில்:-* இன்றுங்கூட பார்வையற்ற பிள்ளைகளின் கல்வி தொடர்பான விழிப்புணர்வு சமூகத்தில் மிகவும் குறைவாகவே காணப்படுகின்றது. தமது பிள்ளைகளாலும் ஏனைய பிள்ளைகளைப் போல் கல்வி கற்க முடியும்: எல்லோரையும் போல கௌரவமாக வாழமுடியும் என்பதை இன்றும் பல பெற்றோர்கள் அறியாதவர்களாகவே இருக்கின்றனர். இந்நிலையில், தமது பிள்ளைகளைத் தாமாக முன்வந்து வாழ்வகத்துக்கு அழைத்துவருகின்ற பெற்றோர்கள் மிக மிகக் குறைவாகவே காணப்படுகின்றனர். பல சந்தர்ப்பங்களில் நாமே பிள்ளைகளின் வீடுகளுக்குச் சென்று அவர்களுக்கும் பெற்றோர்களுக்கும் போதிய அறிவுரைகளை வழங்கி அவர்களை வாழ்வகத்திற்கு அழைத்துவரவேண்டியுள்ளது. தற்போது வாழ்வகத்தில் முப்பத்தைந்து மாணவர்கள் உள்ளனர். ஆனால், இவர்களைவிட இன்னும் பன்மடங்கு அதிகமானவர்கள் வாழ்வகத்துக்கு வெளியே - எவ்வித வாய்ப்புக்களுமற்றவர்களாய் - வீணே தமது வீடுகளில் முடங்கிக்கிடக்கிறார்கள். இவர்களையும் கல்வி நீரோட்டத்துக்குள் கொண்டுவரவேண்டிய சவால் நிறைந்த பொறுப்பும் கடப்பாடும் எம்முன்னே விரிந்து கிடக்கின்றது.

*கேள்வி:-* கட்புல வலுவிழந்தோருக்கு வாழ்வகம் மூலம் கிடைக்கின்ற வலுவூட்டல்கள் மற்றும், வாழ்வியல் தகைமைசார் பயிற்சிகள் எவையெவை?

*பதில்:-* இப்பிள்ளைகளுக்கு வாழ்வகத்தால் உணவு, உடை, உறையுள் உட்பட சகல வசதிகளும் இலவசமாக வழங்கப்படுகின்றன. ஆரோக்கியமான ஒரு


வாழ்வகத்தலைவர் ஆ.ரவீந்திரன்

சூழலில் தங்கியிருந்து சாதாரண பாடசாலைகளுக்குச் சென்று கல்வி கற்பதற்கான சகல வாய்ப்புக்களும் இவர்களுக்கு அளிக்கப்படுகின்றன. பாடசாலைக்கப்பால் கணிதம், விஞ்ஞானம், ஆங்கிலம், சங்கீதம், கணனி போன்ற துறைகளில் இவர்களுக்கு மேலதிக வகுப்புக்கள் நடத்தப்படுகின்றன. தேவையேற்படுமிடத்து, தனியார் கல்விநிலையங்களுக்குச் சென்று தமது கல்வியை மேற்கொள்வதற்கும் இவர்களுக்கு வசதிசெய்து கொடுக்கப்படுகின்றது. இவற்றுக்குமப்பால், நடமாடுதல், தமது வேலைகளைத் தாமே கவனித்துக்கொள்ளுதல், அன்றாடப் பணிகளைச் சுயமாக மேற்கொள்ளுதல் போன்றவற்றிலும் இவர்களுக்குப் போதிய பயிற்சிகள் வழங்கப்படுகின்றன.

*கேள்வி:-* வாழ்வகப் பயனாளிகளின் சாதனைகள், விசேட செயற்பாடுகள் பற்றி?

*பதில்:-* வாழ்வகத்தில் கல்வி கற்ற மாணவர்களில் பலர் இன்று சிறப்பாக வாழ்ந்துகொண்டிருக்கின்றனர். செல்வி.க.நகுலாம்பிகை, திரு.து.யசிந்தன் ஆகியோர் சமூகசேவை உத்தியோகத்தர்களாகப் பணியாற்றுகின்றனர். திரு.க.தருமசேகரம் யாழ் பல்கலைக்கழகத்தில் தற்காலிக விரிவுரையாளராகப் பணியாற்றியுள்ளார். திரு.கமிலஸ் பட்டப்படிப்பை முடித்து தற்போது விழிப்புலனற்றோருக்கான அபிவிருத்தி உத்தியோகத்தராகப் பணியாற்றி வருகின்றார். திரு.அல்போன்ஸ் ஸ்ரனிஸ் அற்புதராஜ் கொழும்புப் பல்கலைக்கழகத்திலே தனது சட்டமாணிக் கற்கை நெறியினைப் பூர்த்திசெய்து தமிழ்பேசும் விழிப்புலனற்றோரில் முதலாவது சட்டத்தரணி என்ற பெருமையைத் தனதாக்கிக்கொண்டுள்ளார். செல்வி.தே.டயானி யாழ் பல்கலைக்கழகத்தில் கலைப்பிரிவு இரண்டாம் ஆண்டில் பயில்கின்றார். திரு.க.ஆனந்தராஜா(பட்டதாரி) கிளிநொச்சியில் ஆசிரியராகப் பணியாற்றுகின்றார். திரு.ஆ.பரமேஸ்வரன் மட்டக்களப்பில் கலாசார உத்தியோகத்தராகப் பணியாற்றுகின்றார். திரு.நா.இதயராஜன் (கல்வி முதுமாணி) மட்டக்களப்பில் ஆசிரியராகப் பணியாற்றுகின்றார். திரு.ர.கௌரீசன் இங்கிலாந்திலே தொழில்சார் பயிற்சிநெறியொன்றைப் பூர்த்திசெய்து தற்போது தனியாக நிறுவனமொன்றை நடத்திவருகின்றார். அத்தோடு வாழ்வகத்துக்கும் பல்வழிகளில் உதவி வருகின்றார்.

திரு.யோ.சுதாகரன், செல்வி.கி.ரேகா ஆகியோர் க.பொ.த. உயர்தரத்தில் சித்திபெற்று பல்கலைக்கழகம் செல்ல உள்ளனர். ஓகஸ்ட்மாதம் நடைபெற உள்ள க.பொ.த. உயர்தரப் பரீட்சைக்கு மூன்று மாணவர்கள் தோற்ற உள்ளனர். இவர்களைவிட மேலும் பலர் பல்வேறு நிலைகளில் கல்வி கற்றுப் பயனடைந் துள்ளனர்.

*கேள்வி:-* நவீன தொழில்நுட்ப உலகத்தோடு கட்புல வலுவற்றோரையும் ஒன்றிணைக்க வாழ்வகம் மேற்கொள்ளும் நடவடிக்கைகள்?

*பதில்:-* வாழ்வகமானது தனது மாணவர்களை நவீன உலகுக்குப் பொருத்தப்பாடுடையவர்களாக ஆக்குவதில் முன்னின்று பாடுபட்டு வருகின்றது. இவ்வாண்டினைக் கல்வி மேம்பாட்டுக்குரிய ஆண்டாகப் பிரகடனப்படுத்தி, அது தொடர்பான பல்வேறு திட்டங்கள் நடைமுறைப்படுத்தப்பட்டு வருகின்றன. கடந்த 21.03.2008 அன்று கணனி அலகொன்று ஆரம்பிக்கப்பட்டு, தற்போது எமது மாணவர்களுக்கு கணனி வகுப்புக்கள் நடைபெற்று வருகின்றன. ஜோஸ் எனப்படுகின்ற பேசும் மென்பொருளின் துணையோடு எமது பிள்ளைகள் கணனியை


விழியிழந்த குழந்தைகளின் கலைநிகழ்வு

நல்ல முறையில் பயின்றுவருகின்றார்கள். மேலும் இம்மாதம் வாழ்வகத்துக்கான ஓர் இணையத் தளமும் ஆரம்பிக்கப்பட்டுள்ளது. அடுத்த மாதம் சிறுவர் பாதுகாப்பு நிதியத்தினரின் அனுசரணையோடு ஆங்கில அறிவை மேம்படுத்துவதற்கான மூன்று மாதப் பயிற்சி நடத்தப்பட உள்ளது. இந்த வகையில், நவீன உலகத்தோடு இணைந்துகொள்வதில் எமது பிள்ளைகளுக்கு இருக்கக்கூடிய அத்தனை தடைகளையும் களைவதே எமது நோக்கமாக உள்ளது.

*கேள்வி:-* தற்போது வாழ்வகத்தின் இயங்குதலுக்கான நிதி மற்றும் உதவிகளை எங்கிருந்து பெற்றுக்கொள்கின்றீர்கள்?

*பதில்:-* நல்லிதயம்படைத்த உள்நாட்டு, வெளிநாட்டு அன்பர்களிடமிருந்தே நாம் நிதி மற்றும், ஏனைய உதவிகளைப் பெற்றுக்கொள்கின்றோம். அரசிடமிருந்தும் எமக்கு ஓரளவு உதவிகள் அவ்வப்போது கிடைக்கின்றன. எனினும், அவை எமது



செயற்பாடுகளுக்குப் போதுமானவையாக இல்லை.

*கேள்வி:-* சமூகத்திடமிருந்து எவ்விதங்களிலான பங்களிப்புக்களை வாழ்வகம் கோரி நிற்கின்றது?

*பதில்:-* நிதி உதவிகள், பொருளுதவிகள், சரீர உதவிகள் மற்றும் வாழ்வகம் பற்றியும் அதன் பணிகள் பற்றியும் எடுத்துக்கூறி, ஒரு விழிப்புணர்வை ஏற்படுத்துவதும் சமூகத்தில் மறைந்திருக்கக்கூடிய பார்வையற்ற பிள்ளைகளை வாழ்வகத்துக்கு அழைத்துவருவதும் சமூகத்தின் பணியாகும். வாழ்வகம் ஆற்றுவது ஓர் ஒப்பற்ற சமூகப்பணி என்ற வகையில் சமூகத்தின் கரங்கள் எப்போதும் எமது கரங்களோடு இணைந்திருக்கவேண்டும் என்பதே எமது விருப்பமும் அவாவுமாகும்.

*கேள்வி:-* உங்களுக்குத் தேவையான உதவிகள் கிட்டும்பட்சத்தில் என்னென்ன விரிவாக்கங்களை மேற்கொள்ளத் திட்டமிட்டுள்ளீர்கள்?

*பதில்:-* கணனி மற்றும் ஆங்கிலக் கல்வியினை மேன்மேலும் விரிவுபடுத்த எண்ணியுள்ளோம். அத்தோடு எமது மாணவர்களுக்கான நவீன பேசும் நூலகம் ஒன்றினையும் அமைக்க எண்ணியுள்ளோம். மேலும் நவீன கல்வி உபகரணங்களைப் பெற்று எமது பிள்ளைகளின் கல்வியை வளம்படுத்த எண்ணியுள்ளோம். இவற்றைவிட இரு கட்டடங்கள் பூர்த்தியாக்கப்படவேண்டிய நிலையிலுள்ளன. சாப்பாட்டறையொன்று அமைக்கப்படவேண்டியுள்ளது. பிரார்த்தனை மண்டபமொன்று அமைக்கப்பட வேண்டியுள்ளது. உள்ளகத் தொலைபேசி அமைப்பொன்று ஏற்படுத்தப்பட வேண்டியுள்ளது.

**சந்திப்பு:**
**த.பிரபாகரன்**

*கேள்வி:-* வாழ்வகத்தின் தலைவர் என்ற முறையில் இங்குள்ள மாணவர்கள் வாழ்வகத்தினுள் இணைவதற்கு முன்பிருந்த மனநிலைக்கும், இப்போதுள்ள மனநிலைக்குமிடையே ஏதாவது வித்தியாசங்களை உங்களால் இனங் காண முடிகின்றதா?

*பதில்:-* கட்புல வலுவிழந்தோர் எம்மிடம் வருவதற்கு முன்னுள்ள நிலைக்கும் வந்தபின் உள்ள நிலைக்கும் இடையே நாம் பல வேறுபாடுகளைக் காண முடியும். இயலாமையின் மொத்த வடிவங்களாயிருந்த பல பிள்ளைகள் இங்கு வந்து சில மாதங்களிலேயே ஆச்சரியப்படத் தக்க வகையில் முன்னேறியிருக்கின்றமையைக் கண்டு அவர்களின் பெற்றோரே நம்ப முடியாமல் தவிக்கின்ற பல சம்பவங்களை அன்றாடம் கண்டுவருகின்றோம்.



பரத் – பூர்ணா

# முனியாண்டி திரைவிமர்சனம்

கல்லூரியில் படிக்கும் நாயகனுக்கும், நாயகிக்கும் இடையே காதல்... நாயகி பெரிய தாதாவின் மகள். நாயகன் கஷ்டப்பட்ட குடும்பத்தைச் சேர்ந்தவன் என வழக்கமான கதையைத்தான் வடிவேலுவின் வித்தியாசமான காமெடியை கலந்து கொடுத்திருக்கிறார் இயக்குநர் திருமுருகன். ஆனால், எம்டன் மகன் படம்போல இருக்கும் என்று நம்பி போனால் ஏமாற்றம்தான் மிஞ்சுகிறது.

காதலால் மூத்த மகனை இழந்த பொன்வண்ணனின் இரண்டாவது மகன் பரத். தந்தை கண்டன் நடத்தும் கல்லூரியிலேயே பரத் விலங்கியல் மூன்றாமாண்டு மாணவர். அதே கல்லூரிக்கு விலங்கியல் கற்க வருகிறார் அந்த ஊர் தாதாவின் மகள் பூர்ணா. மோதலில் தொடங்கும் இவர்களது நட்பு காதலாக மாறுகிறது. முதல் மகனை காதலால் இழந்த பொன்வண்ணன், பூர்ணாவிடம் சென்று எனது மகனை என்னிடம் இருந்து பிரித்துவிடாதே என்று காலில் விழுந்து கேட்கிறார். இதனால் பரத்தை வெறுப்பது போல் நடிக்கும் பூர்ணாவை, பரத் செருப்பால் அடித்து அவமானப்படுத்துகிறார். தன்னைக் காதலித்துவிட்டு ஏமாற்றியவளை பழிவாங்குவதாக நினைத்துக்கொண்டுஅவரது தென்னந்தோப்பை தீமிட்டுகொளுத்தியிருப்பார் என நினைக்கும் தாதா, ஜாதி எதிரியை விரட்டுகிறார். இதற்கிடையில் பரத்தின் அண்ணன் சாவுக்கு தாதாதான் காரணம் என்று தெரியவருகிறது. அதன்பிறகு பழிவாங்க புறப்படுகிறார். காதலியைக் கரம்பிடித்தாரா, எதிரியைத் தீர்த்துக் கட்டினாரா? என்பதுதான் படத்தின் கிளைமாக்ஸ்.

பரத் வழக்கமான நடிப்புதான். வடிவேலு சொரிமுத் ஐயனார் என்ற கரக்டரில் சாமியார் வேடத்தில் கல்லூரியை வலம்வருகிறார். காவி உடையணிந்து முடிமுதல் அடிவரை சைஸ் வாரியாக மணியைக் கட்டித்தொங்கவிட்டு கலகலக்க வைக்கிறார். பேபியாட்டும் காட்சிகள் நல்ல கலகலப்பு.

புதுமுக நடிகை பூர்ணா முதல் படத்திலேயே பாஸ் மார்க் எடுத்துள்ளார். பரத்திடம் காதலைச் சொல்லி உருகும் காட்சி உருக்கம். தன்னை கெடுக்க வந்தவனை அடித்து துவைத்து ஆடைகளை அவிழ்த்து அதகளம் பண்ணும் காட்சிகள் ரசிக்க வைக்கின்றன.



அகராதி படத்தில் பிரதீப், மோனிகா, சௌந்தர்யா

# மனோரமா, பாலசந்தருக்கு டாக்

நடிகை மனோரமா, இயக்குநர் பாலசந்தர் ஆகியோருக்கு கலிபோர்னியா பல்கலைக்கழகம் டாக்டர் பட்டம் அறிவித்துள்ளது. தமிழ்ச்சினிமாவில் நீண்டகாலம் நிலைத்து சாதனை படைத்துவரும் கலைஞர்களுக்கு டாக்டர் பட்டம் வழங்க கலிபோர்னியா பல்கலைக்கழகம் முடிவுசெய்துள்ளது. ஆயிரக்கணக்கான படங்களில் நடித்து சாதனை படைத்து வரும் நடிகை மனோரமா மற்றும் ரஜனிகாந்த், கமல் ஹாசன் போன்ற சூப்பர் நடிகர்களை உருவாக்கிய இயக்குநர் பாலசந்தர் ஆகியோர் இந்த விருதுக்காக தேர்ந்தெடுக்கப்பட்டுள்ளனர். சென்னையில் இதற்கான விழா விரைவில் நடைபெறும் என்று பல்கலைக்கழகப் பிரதிநிதி செந்தில்குமார் உட்பட, துணைவேந்தர்கள் தெரிவித்துள்ளனர்.



அலையோடு விளையாடு படத்தில் விஜயன், கார்த்திகா

# மீண்டும் தபு

பாலுமகேந்திரா நீண்ட இடைவெளிக்குப் பிறகு இயக்கவுள்ள "அலைகாற்று" என்ற புதிய படத்தில் தபு நடிக்கவுள்ளார். தபு நீண்ட இடைவேளைக்குப் பிறகு தமிழுக்குத் திரும்பி வருகிறார். கடைசியாக அவர் தலைகாட்டிய படம் "கண்டுகொண்டேன் கண்டுகொண்டேன்". அந்தப் படத்தோடு தமிழை விட்டுப்போனார். படத்தின் கதையை பாலுமகேந்திரா கூறியதுமே நடிக்க ஒப்புக்கொண்டு விட்டாராம் தபு. இப்படத்திற்கு இளையராஜா இசையமைக்கிறார். கடந்த 30 ஆண்டுகளாக பாலு மகேந்திராவின் முதல் படமான 'கோகிலா'வில்இருந்து 'அலைகாற்று' வரை பாலு – ராஜா கூட்டணி தொடர்ந்து வருவது குறிப்பிடத்தக்கது.





நயன்தாரா

டர் பட்டம்



## குசேலனுக்கு வித்தியாசமான விளம்பரம்

பூக்கடைக்கே விளம்பரம் தேவைப்படும் காலம் இது. ரஜனி படம் என்றாலும் ரசிகர்களை ஈர்க்கவைக்க ஸ்பெஷலாகத் தயாராகிறது குசேலன் பேருந்து. இந்தப் பேருந்தில் ரஜனியின் வித்தியாசமான கெட்டப்புகளில் அமைந்த படங்கள் ஒட்டப்பட்டிருக்கும். [illegible] வசதிகள் நிறைந்த இதில் காதை உறுத்தாத ஸ்பீக்கர்கள் உண்டு. குசேலன் பாடல்கள் இதில் கசிந்துகொண்டிருக்கும். சென்னை மாநகரில் ஓடும் இந்தப் பேருந்து சில இடங்களில் மட்டுமே நிற்கும். நிற்கும் இடங்களில் பேருந்திலுள் ஏறினால் ரஜனியின் அபூர்வமான படங்களை கண்டுகளிக்கலாம்.

## தடை தாண்டிய நாயகன்

ஜே.கே.ரித்தீஷ், ஆனித்ரா நடிப்பில் விஜயகுமார் ரெட்டி தயாரித்திருக்கும் படம், 'நாயகன்'. ஓகஸ்ட் ஏழாம் திகதி படத்தை வெளியிட திட்டமிட்டிருந்தனர். இதனை அறிந்த பைனான்சியர் பாப்னா படத்துக்கு தடைகோரி வழக்குத் தொடர்ந்தார். விஜயகுமார் தனக்கு ஒருகோடியே 28 லட்சம் ரூபா தரவேண்டும், அதை செட்டில் செய்த பிறகே படத்தை வெளியிட அனுமதிக்க வேண்டும் என தனது மனுவில் கூறியிருந்தார் பாப்னா. நீதிபதி விசாரணை முடிவில் 'நாயகன் படத்துக்கு தடை விதிக்கத் தேவையில்லை எனத் தீர்ப்பளித்தார். 'நாயகன்' படம் ஹொலிவுட்டில் வெளியான 'செல்போன்' திரைப்படத்தின் தழுவல். இதே படத்தைத் தழுவி எஸ்.ஏ.சேகர் தனது மகன் அஸ்வின் சேகரை வைத்து 'வேகம்' படத்தை எடுத்தார். வேகம் முதலில் வெளியானதால் படம் தயாரான பிறகும் பல மாதங்கள் தாமதமாக 'நாயகனை' வெளியிடுகின்றனர்.



ஆகாஷ், நிக்கோல்



## சரோஜா படத்தில் காஜல் அகர்வால்



## சூர்யா - சிம்ரன் பாடல் காட்சி

கௌதம் வாசுதேவ மேனன் இயக்கும் 'வாரணம் ஆயிரம்' படத்தில் சூர்யா, சிம்ரன் இடம்பெறும் பாடல்காட்சி ஒன்று இடம்பெறுகிறது.
'வாரணம் ஆயிரம்' தந்தை - மகன் உறவைச் சொல்லும் படம். இளைஞன் முதல் முதியவர் வரை பல்வேறு வயது தோற்றங்களில் சூர்யா நடித்துள்ளார். மிகுந்த பொருட்செலவில் ஆஸ்கார் பிலிம்ஸ் தயாரித்துள்ள இப்படத்துக்கு இசை ஹாரிஸ் ஜெயராஜ்.
ரம்யா மற்றும் சமீரா ரெட்டி இருவரும் சூர்யாவுக்கு ஜோடியாக நடித்துள்ளனர். இன்னொரு ஜோடி சிம்ரன். இவருக்கு வயதான கெட்டப் என்கிறார்கள். படத்தின் முக்கியமான காட்சிகள் அனைத்தும் படமாக்கப்பட்டுவிட்டதால் ஒரேயொரு பாடல் காட்சி மட்டும் மீதி. சூர்யா - சிம்ரன் இடம்பெறும் இப்பாடல்காட்சி இளமை நினைவுகளின் தொகுப்பாக எடுக்கப்பட உள்ளது. 'வாரணம் ஆயிரம்' ஓகஸ்டில் திரைக்கு வர கௌதமின் இன்னொரு தயாரிப்பான 'சென்னையில் ஒரு மழைக்காலம்' படத்தை ஒக்ரோபர், நவம்பரில் திரையிட திட்டமிட்டுள்ளனர்.

கௌசா ராச்



காதலனா சும்மா இல்ல படத்தில் ரவிகிருஷ்ணாவும் சர்வானந்தும்

## கொள்கையைத் தளர்த்திய தேஜாஸ்ரீ

16 நாட்களில் முக்கால்வாசி படத்தை எடுத்து முடித்துவிட்ட இயக்குநர் இளங்கண்ணனை உச்சி முகர்ந்து பாராட்டுகின்றனர் ராஜ் டெலிவிஷன் நெட்வொர்க் நிறுவனத்தினர். இந்நிறுவனம் தயாரித்து வரும் 'காதலனா சும்மா இல்ல' படத்தைத்தான் இளங்கண்ணன் இயக்கிவருகிறார்.
இப்படத்தில் கதாநாயகர்களாக ரவிகிருஷ்ணாவும், சர்வானந்தும் நடிக்க 'வேட்டையாடு விளையாடு' புகழ் கமாலினி முகர்ஜிதான் நாயகி.
படத்தில் ரவிகிருஷ்ணாவுடன் தேஜாஸ்ரீ ஆடும் குத்துப்பாடல் ஒன்று இடம்பெறுகிறது. 'ஒரு பாடலுக்கெல்லாம் நடனமாடமாட்டேன்' என சமீபத்தில் புதிய கொள்கையை அறிவித்த தேஜாஸ்ரீ தன்னை அறிமுகப்படுத்திய இளங்கண்ணனுக்காகத் தனது கொள்கையைத் தளர்த்தி குத்துப்பாட்டுக்கு ஆட்டம் போட்டார்.
ஆட்டம்போட்ட அசதியில் வந்த ரவிகிருஷ்ணா மூச்சுவாங்கியபடி, 'காதல்', 'பருத்திவீரன்', 'ஆட்டோகிராப்' வரிசையில் இந்தப் படமும் டிரெண்ட் செட்டரை ஏற்படுத்தும் என நம்பிக்கை தெரிவித்தார்.



# நள்ளிரவில் ஒரு நாடகம் 25

றோபோவிற்கு பயம் என்னவென்று தெரியாது. பதற்றப்படும் பழக்கமும் அவனிடம் இல்லை.

ஆனால் இன்று -

இரண்டுமே அவனை ஆட்டிப்படைக்கத் தொடங்கியிருந்தன. முரடன்தான். அதிபலசாலிதான். சிகாகோவின் எங்கோ ஓர் ஏழை விபசாரிக்கு பிறந்து தெருவிலே வளர்ந்தவன். அவனுக்கு நினைவு தெரிந்த நாளிலிருந்தே பெற்றோரை அறியமாட்டான். எப்படியோ ஒரு சேரி நாயைப்போல வளர்ந்து விட்டான். அன்பு, ஆதரவு, பாசம் என்பனவெல்லாம் அவனுககு என்னவென்று தெரியாத சமாச்சாரங்கள்.

கடற்கரை ரெஸ்டோரண்டுகளிலும், கிளப்புகளிலும் எடுபிடி வேலைகள் செய்து றோபோ இயற்கையிலே வலிமையான உடல்வாகு படைத்தவனாகவிருந்தான்.

''டேய்! ஆசாமி, நிச்சயமாக யாரோ ஒரு ஆபிரிக்க பொக்சிங்காரனுக்குப் பிறந்தவன் தான்'' என்று அவனுடன் அங்கே எடுபிடிகளாக இருந்தவர்கள் கிண்டலடிப்பதுண்டு. அது கேட்டு அவன் புன்னகை செய்வான். கோபிக்க மாட்டான். எவரோடும் நட்பாக ஆசைப்படுவான். ஆனால், ஏனோ தெரியவில்லை. எவரும் அவனுடன் நட்பு பாராட்ட விரும்புவதில்லை. ஆசாமி பயங்கரமானவன என்ற வகையில் அவனை ஓரங்கட்டியே வந்தார்கள்.

அனைவரினதும் இந்த அலட்சியம் போக்கு அவனுள் வேதனை நெருப்பை எரியச் செய்திருந்தது. தானுண்டு தன் வேலையுண்டு என்றிருப்பான். கடுமையாக வேலை செய்வதிலும், சளைக்காமல் - முணுமுணுக்காமல் எதையும் கச்சிதமாக செய்து முடிப்பதிலும் அவனுக்கு நிகர் அவன்தான். வேலைகளை முடித்துவிட்டு, எங்காவது ஒரு மூலையில் சுவரில் சாய்ந்து கண்களை மூடிக்கொள்வான்.

'ஆழ்ந்த யோசனையில் இருக்கிறானா?!

'இல்லை தூங்குகிறானோ'

எதையும் தீாமானிக்க முடியாமல் அவனை ஓரககண்ணால் பார்த்து பயந்து கொண்டே செல்வார்கள்.

உடலெங்கும் அடர்ந்த ரோமமுடன் அரைக்காற் சட்டை அணிந்து வெறும் மேனியனாக சுவரில் சாய்ந்து கணகளை மூடிக் கொண்டிருக்கும்போது அவன் ஒரு மிருகம் தூங்குவது போலவே தோன்றுவான், சிலவேளைகளில் றோபோவை எழுப்பவே முடியாது. பேய்த்தூக்கம் தூங்குவான். அந்நேரத்தில் அவனை எழுப்பக் கூடாது. எழும்பினால் பயஙகாமானவனாக மாறிவிடுவான். அதிலும் தன்னை அலட்சியப்படுத்தும் சகபாடிகளில் ஒருவன்தான் அவனை எழுப்பியவனாக இருந்தால் நிலைமை மோசமாகிவிடும். படீலென முகத்தில் விழும் படு பயங்கரமான தாக்குதலில் அவன் சுருண்டு விட வேண்டியதுதான்.

ஒரு நாள் நிலைமை படுமோசமாகிவிட்டது. அவனை மிகவும் அலட்சியப்படுத்தி பேசும் ஒரு வெள்ளையன அவன் தூக்கத்தை கலைக்க விரும்பினான். அவனும் கொஞ்சம் ஆஜானுபாகுவான ஆசாமிதான்.

அவன் அவனுடைய அரைக்காற் சட்டையை நன்றாகவே கீழே இழுத்துவிட்டான். இதனால் றோபோ முழு நிர்வாண கோலம் கொண்டுவிட்டான். அப்போதும் றோபோவின் தூக்கம் கலையவில்லை.

வெள்ளையன் தனது மற்றைய நண்பர்களையும் கூட்டிக்கொண்டு வந்து றோபோவின் நிர்வாண கோலத்தைக் காட்டி கெக்கலிட்டுச் சிரித்தான்; 'டேய்! இங்கே



பாருங்கடா மனிதருபத்திலே ஒரு மிருகம் தூங்குது' என்று தமாசாகக் சொல்லி றோபோவின் மர்ம உறுப்பில் ஒரு கம்பினால் சடா'ரென அடித்தான்; 'இவன் மனிதனே இல்லை' என்று கைகொட்டிச் சிரித்தான்.

றோபோ 'சட்'டென கண்விழித்தான். தன்னுடைய நிர்வாண கோலமும், தன்னைச் சுற்றி சிலர் வேடிக்கை பார்ப்பதும், வெள்ளையன் கைகொட்டிச் சிரிப்பதும் குபீ'ரென அவன் சிரசிற்குள் இரத்தத்தை பாயச் செய்துவிடுகின்றன.

அவன் எழுந்து நின்றான்.

ஒரு பெருமூச்சு விட்டு சிலிர்த்துக் கொண்டான். அப்போதுதான் அவனுடைய முழுமையான உடல்வாகுவையும், வலிமையையும் சகபாடிகள் கண்டார்கள். அவர்களில் அநேகர் நோஞ்சான்களாகவிருந்ததால் அடித்துப் பிரண்டு கொண்டு ஓடிவிட்டு, கொஞ்சம் தொலைவில் நின்று வேடிக்கை பார்த்தார்கள்.

ஆனால், அந்த கிறுக்கு பிடித்த வெள்ளையனோ இன்னும் இரண்டடிகள்




மட்டுமே பின்நகர்ந்து அவனை கிண்டல் பண்ணுவது போல காபரே நடனம் ஆடினான். மிகவும் ஆபாசமாக இடுப்பை வளைத்து நெளித்து நிமிர்த்தி வாவாவென றோபோவை நோக்கி கை சைகைக் காட்டி ஆடினான்.

தூரத்தில் நின்று வேடிக்கைப் பார்த்துக் கொண்டிருந்தவர்கள் நடனத்தை ரொம்பவும் ரசித்தார்கள். கைகொட்டி. றோபோ சிரிக்கவில்லை. கண்களில் வெறுப்பு குமிழியிட்டது; ஆத்திரம் நெருப்பென எழுந்தது. இடுப்பிற்கு கீழ் இறக்கிவிடப்பட்டிருநத அரைக்காற் சட்டையையும் தூக்கி இடுப்பில் நிறுத்திக் கொள்ளாமல் முன்நோக்கி அடியெடுத்து வைத்தான்.

வேடிக்கை பார்த்துக்கொண்டிருந்தவர்கள் குய்யோ முய்யோ'வென அலறியடித்துக் கொண்டு ஓடும் விதத்தில் சம்பவம் சடுதியாக நடந்தேறியது. காபரே நடனமாடிக் கொண்டிருந்த வெள்ளையனை, வேடன் ஒருவன் உடும்பின் வாலைப்பிடித்து சளார் 'சளா'ரென அறைவதைப்போல வெள்ளையனின் கழுத்தை 'சரே'லென அனகொண்டா பாம்பைப் போல சுற்றி வளைத்து, இறுக்கி தூக்கி தரையில் மடார் மடார் மடார்' என அறைந்தான்.

காபரே நடனம் ஓய்ந்து விட்டது.

அந்த இடமே சூன்யமாகிவிட்டது. வேடிக்கைப் பார்த்துக் கொண்டவர்கள் எங்கே ஓடி ஒளித்து கொண்டார்கள் என்று தெரியவில்லை.

றோபோ சிறைக் கம்பிகளின் பின்னே தள்ளப்பட்டான். சிறைச்சாலையில் அவனுக்கு சாதுவானவன் என்ற நல்ல பெயர்தான். ஆனால், எவருமே அவனுடன் சகவாசம் வைததுக் கொள்ளவில்லை. அதறகு காரணம் அவனுடைய கற்சிலைப் போன்ற தோற்றமும், எந்த நேரத்தில் எப்படி நடந்துகொள்வான் என்று அறிந்து கொள்ளமுடியாத தன்மையும் ஆகும்.

சிறை அதிகாரி கிளின்டன் றோபோவை அடிக்கடி தன் வீட்டு வேலைக்'கென அழைத்துச் செல்வது வழக்கம். அந்த விஜயங்களின்போது புளோராவிற்கு அவனைப் பிடித்துவிட்டது. பழங்காலத்து ரோம் நகர வீரனைப் போன்ற தோற்றமுடைய அவனை விழிகளாலே விழுங்கினாள். அவனும் அடிக்கடி அவளைப் பார்ப்பான். கண்களில் நேச பாவம் தென்படும், உதடுகளில் மென்மையான புன்னகை மலரும்.

* * *

பாறை தடுக்கி றோபோ நிலத்தில் விழுந்தும் சடடென எழுந்துவிட்டான். ஆனால், பெட்டியின் பூட்டு உடைந்து கதவு திறநதது. அதனுள் மடக்கிவைக்கப்பட்டிருந்த புளோராவின் சடலம் உருண்டுச் சென்று வீதியில மடிநத நிலையிலே கிடந்தது. ஓடிச் சென்று அதைத தூக்கி முகத்தைப் பார்த்தபோது அது புளோரா என்பதை தெரிந்து கொண்டான். ஒரு வெடிபட்ட சிங்கத்தைப் போன்று அலறினான்.

அப்போதுதான் ரோந்து பொலிஸ்காரனின் மோட்டார் சைக்கிள் வந்து அவன் முன்னே நின்றது.

பொலிஸ்காரனின் அபாய எச்சரிக்கை ஊதுகுழல் அலறியது. ஆங்காங்கே பதுங்கி யிருந்த பொலிஸ்காரர்கள் திடுதிப்'பென துப்பாக்கிகள் சகிதம் தோன்றினார்கள்.

றோபோவை கட்டுப்படுத்துவது பெரிதும் கஷ்டமாகிவிட்டது. புளோராவின் சடலத்தை அவனிடமிருந்து எடுக்கமுடியாத நிலையில் அவன் கால்களை துப்பாக்கிச் சன்னங்கள் பதம்பார்த்தன.

(தொடரும்)

---

## மிஸ்டர்...

(19 பக்கத் தொடர்ச்சி)

அபிப்ராயப்பட்டார். எனக்கும் அப்படியே தோன்றுகிறது.''

''உட்காருங்கள். என்ன விஷயம் சொல்லுங்கள்.''

அவள் ஒரு ஸ்டூலை என் அருகில் இழுத்துப் போட்டுக்கொண்டு உட்கார்ந்தாள். தன் நகத்தைப் பார்த்துக்கொண்டே பேசினாள்.

''முனுசாமி, நான் உங்களுக்கு இந்த ஆபரேஷன் செய்த பின்னணியைச் சொல்லிவிடுகிறேன் முதலில்.''

தயங்கினாள். மறுபடி பேசினாள்.

''சமீபத்தில் அமெரிக்காவில் டானியல் கீஸ் என்பவர் இந்த ஆபரேஷனை ஒரு வெள்ளெலிக்கும் ஒரு மனிதனுக்கும் செய்தார்; செய்து ஆச்சரியப்படத்தக்க முடிவுகளை வெளியிட்டார். கார்டன் என்கிற அந்த மனிதன் உங்களைப் போல எழுதப் படிக்கத் தெரியாத பாமரனாக மிகக் குறைந்த அறிவு மட்டத்தில் இருந்தவன். ஆபரேஷனுக்குப் பிறகு மிகச் சில தினங்களில் அவன் அறிவு சிக்கலான கணக்குகளையும் சிக்கலான புத்தகங்களையும் படித்துப் புரிந்து கொள்ளும் அளவுக்கு விருத்தியாகிவிட்டது என்று ஆபரேஷனின் முழு விவரங்களும் கொடுத்திருந்தார். அந்தச் சிகிச்சையை நாமும் செய்து பார்த்தால் என்ன என்று எனக்கும் டாக்டர் பெர்னாண்டஸுக்கும் தோன்றியது. உங்களைத் தேர்ந்தெடுத்தோம்...''

''அது என் அதிர்ஷ்டம் டாக்டர்! ஆபரேஷனை வெற்றிகரமாகச் செய்துவிட்டீர்களே! சிலப்பதிகாரம் படிக்கிறேனே, உங்களை நாகரிகமாகக் காதலிக்கிறேனே!''

''ஆம் முனுசாமி. ஆனால், இந்த ஆபரேஷனில் ஒரு சிக்கல் இருக்கிறதாக ஸ்ட்ராஸ் என்று ஒரு டாக்டர் அறிவித்திருக்கிறார்.''

''சிக்கலா? அது என்ன? நான் சமாளிக்கிறேன் டாக்டர், என்னால் அது முடியும்.''

''முடியாது மிஸ்டர் முனுசாமி, கவனமாகக் கேளுங்கள். அதிர்ச்சியைத் தாங்கிக்கொள்வீர்கள் என்று எனக்கு நம்பிக்கை இருக்கிறது. அதனால்தான் உங்களிடம் இதைச் சொல்கிறேன்.''

சற்றுத் தயங்கிவிட்டு டாக்டர் லீலா தெளிவாக என்னிடம் சொன்னாள்.

''முனுசாமி, எத்தனை வேகமாக நீங்கள் இந்த அறிவைப் பெற்றீர்களோ, எத்தனை விரைவில் நீங்கள் எல்லாவற்றையும் கற்றுக்கொண்டீர்களோ, அத்தனை விரைவில், ஏன் அதைவிட விரைவில் எல்லாவற்றையும் ஒன்று விடாமல் மறந்துவிடுவீர்கள். அதுதான் இந்த ஆபரேஷனில் சிக்கல்.''

''டாக்டர்!''

''ஆம். இதில் ஒரு மூர்க்கத்தனமான நியாயம் இருக்கிறது. அறிவு எளிதில் வந்துவிட்டது. விஞ்ஞானத்தை வைத்துக்கொண்டு அறிவு பெறும் முறையைச் சுருக்கினால் அதற்கு ஒரு நஷ்டாடு இது. எல்லாவற்றையும் அதே வேகத்தில் மறந்து போய்விடுவீர்கள். சீக்கிரமே, சீக்கிரமே!''

அந்த அறை சட்டென்று இருண்டது எனக்கு...

* * *

''இன்னடா முன்சாமி, கொஞ்ச நாளாக காணோம்? திருத்தணிக்குக் காவடி எடுத்தியா!''ன்னு பின்னாலே சத்தம் கேட்டுது. திரும்பினா இந்த வேம்பம் பய!

''அதை ஏன் கேக்கற வேம்பா. கொஞ்ச நாளா இன்னா ஆச்சுன்னே தெரியலை. சரியாவே யாவகம் இல்லே. யாரைப் பார்த்தாலும் எங்கேயோ பார்த்த மாதிரி தோணுது. அதோ அந்தப் பொண்ணு போவுது பாரு. அதைக்கூட எங்கேயோ பார்த்திருக்கிறேன். வாத்யாரே' என்னவோ போ, ஒண்ணும் செரியாவே இல்லை... பேப்பர் வச்சிருக்கியா? படிச்சிக் காட்டு... இன்னா ஆச்சு சிலோன் லைலா கேஸு?''

* * *

24. இலங்கையின் வரலாற்று தகவல்களை அறிய உதவும் நூல் அல்லாதது எது?
1) தீபவம்சம் 2) மகாவம்சம் 3) திரிபீடகம் 4) சூளவம்சம்



25. பின்வரும் விளையாட்டுக்களில் ஒரு குழுவில் மிகக் குறைவான வீரர்கள் பங்கு பற்றும் விளையாட்டு எது?
1) ஹொக்கி 2) வலைப்பந்து 3) கரப்பந்து 4) கூடைப்பந்து

26. நாயில் நீர்வெறுப்பு நோய் ஏற்படும்போது தென்படும் அறிகுறி எது?
1) ஓரிடத்தில் படுத்திருக்கும். 2) குரைத்துக் கொண்டிருக்கும்.
3) வாலை கீழே தொங்கபோட்டபடி நாக்கில் இருந்து நீர் வடியும்.
4) நீர் நிலைகளைத் தேடி அலையும்.

27. தேசப்படங்களில் ஆறு, குளம் போன்றவற்றைக் காட்ட பயன்படுத்தும் நிறம் எது?
1) பச்சை 2) நீலம் 3) மஞ்சள் 4) கறுப்பு

28. நீண்ட, மெல்லிய வாலைக் கொண்ட மீனினம் எது?
1) சுறா 2) கணவாய் 3) கெளிறு 4) திருக்கை


29. பலகையில் குழி வெட்டுவதற்கு பொருத்தமான உபகரணம் எது?


1) 
2) 
3) 
4) 

கீழே தரப்பட்டுள்ள தாவரங்களின் பெயர்களை எழுதுக.


30. 
31. 
32. 
33. 


பின்வரும் தோல் இசைக்கருவிகளின் பெயர்களை எழுதுக.

34. 
35. 
36. 
37. 

38. 
உருவில் நிழற்றப்பட்ட பகுதியினை தசமத்தில் எழுதுக.
..................................................

39. பை ஒன்றினுள் 4 மாபிள்கள் வீதம் 424 மாபிள்களை இடுவதற்கு எத்தனை பைகள் தேவை? ..................................................

40. 1 சென்ரிமீற்றர் இடைவெளியில் ஆணிகள பொருத்தப்பட்டுள்ள கேத்திரகணிதப் பலகையில அமைக்கப்பட்ட உருவின் பரப்பளவு யாது?

..................................................

41. 

கோட்டுப்படத்தில் சில நகரங்களுக்கு இடையிலான தூரம் ஆங்கில எழுத்துக்களால் தரப்பட்டுள்ளது. A யில் இருந்து D வரை உள்ள தூரம் யாது?
..................................................

42. வெற்று அடைப்பினுள் வரவேண்டிய இலக்கங்களை எழுதுக.


| | | | |
|---|---|---|---|
| | 8 | ☐ | 5 |
| − | 2 | 3 | ☐ |
| | 5 | 7 | 7 |

43. ஒருவர் வேலை ஒன்றினை மு.ப. 8.30 இற்கு ஆரம்பித்து பிற்பகல் 2.15 இற்கு நிறைவுசெய்தார் எனின், அவர் வேலைசெய்த நேரம் யாது?
..................................................

44. 4m.50cm அளவுடைய கம்பியில் இருந்து எத்தனை 25cm அளவுடைய கம்பித்துண்டுகளை வெட்டி எடுக்கலாம்? ..................................................

45. 1 லீற்றர் குளிர்பானப் போத்தலை வாங்குவதன் மூலம் 4 பேரை உபசரிக்க முடியும் எனின், 22 பேரை உபசரிக்க எத்தனை குளிர்பானப் போத்தல்களை வாங்கவேண்டும்? ..................................................

46. 350g சீனியின் விலை 28 ரூபா எனின், 2 கிலோகிராம் 450g சீனியின் விலை யாது? ..................................................

47. 

இவ்வுருவின் சுற்றளவு யாது?
..................................................

48. பாடசாலை ஒன்றில் தரம் 4 வரை உள்ள மாணவர்களின் எண்ணிக்கைகள் பின்வருமாறு:

| தரம் | ஆண் | பெண் |
|---|---|---|
| 1 | 35 | 24 |
| 2 | 26 | 32 |
| 3 | 32 | 22 |
| 4 | 27 | 31 |


1) தரம் 2இல் உள்ள மாணவர்களின் மொத்த எண்ணிக்கை யாது?
..................................................

2) தரம் 1இல் உள்ள மாணவர்களின் எண்ணிக்கைக்கும் தரம் 3இல் உள்ள மாணவர்களின் எண்ணிக்கைக்கும் இடையிலான வித்தியாசம் யாது? ..................................................

3) தரம் 4இல் உள்ள மாணவர் ஒவ்வொருவரும் பரீட்சைக் கட்டணமாக 20 ரூபாவைச் செலுத்தினர் எனின், மொத்தமாகச் செலுத்தப்பட்ட தொகை யாது? ..................................................

4) பாடசாலையில் உள்ள ஆண்களது எண்ணிக்கையை விட குறைவாக உள்ள பெண்களது எண்ணிக்கை யாது? ..................................................

5) பாடசாலையில் உள்ள பெண்களது எண்ணிக்கையினை வரைபில் காட்டுக?




49. ஒரு நாள் மாலை வேளை நான் பூந்தோட்டத்திற்கு நீர் ஊற்றிக் கொண்டிருந்தேன். அப்பொழுது அருகில் இருந்த பலாமரத்தடியில இருந்து குருவிக்குஞ்சுகளின் கீச்சிடும் சத்தம் கேட்டது. நான் உடனே அந்தப் பலாமரத்தடியில் சென்று பார்த்தேன். அங்கே மரப்பொந்தில சிறிய குருவிக்குஞ்சுகளில் ஒன்றைப் பெரிய பாம்பு ஒன்று ......... இச்சம்பவத்தைத் தொடரும் வகையில் எழுவாய் பயனிலைகளுடன் ஆறு வாக்கியங்கள் எழுதுக.

..................................................
..................................................
..................................................
..................................................
..................................................
..................................................
..................................................

**தரம் - 05** மாணவர்களை இறுதிப் பரீட்சைக்குத் தயார்படுத்துவதற்காக வெளியிடப்படும்

## விசேட மாதிரிவினாத்தாள் - 07


ஆசிரியர்:- திரு.எஸ்.தீபன்
( வ/பூந்தோட்டம் மகாவித்தியாலயம், வவுனியா. )

# ஹலோ!

சிறுகதை

பாலா சங்குபிள்ளை



"ஹலோ"

"ஹலோ யார் பேசுறது?"

"நான் சுதாகர் பேசுறேன். அது மணவாளன் வீடுதானே."

"இல்ல... அப்படி யாரும் இங்கே இல்லை..."

"மன்னிக்கணும்... இலக்கம் மாறி போயிடுச்சிப் போல... நீங்க யார் பேசுறதுன்னு தெரிஞ்சிக்கலாமா?"

"அவசியம் தெரிஞ்சிக்கணுமா...?"

"உங்களோட குரல் ரொம்ப இனிமையாயிருக்கு..."

"என் பெயர் மஞ்சுளா... போதுமா..."

"இப்போதைக்கு இவ்வளவு போதும்..."

ஒரு வாரம் சென்றது.

* * *

"ஹலோ நான் சுதாகர் பேசுறேன். மஞ்சுளா இருக்காங்களா?"

"ஆமா மஞ்சுளாதான் பேசுறேன். என்ன விஷயம்...?"

"விஷயம் ஒண்ணுமில்லை. உங்களைப் பத்தி இன்னும் தெரிஞ்சிக்க விரும்புறன்..."

"முன்னப் பின்ன தெரியாதவங்கக் கிட்ட என்னத்தை பேசுறது?"

"ஏற்கனவே நாம அறிமுகமானவங்க தானே...?"

"இல்லையே உங்களைப் பற்றி நீங்க எதுவுமே சொல்லலையே..."

"நான் தனியார் வங்கியொண்ணுல உதவி முகாமையாளனா இருக்கேன். அப்பா, அம்மா இருக்காங்க. தங்கச்சிக்குக் கல்யாணம் முடிஞ்சிடுச்சி. எனக்கு பெண் பார்த்துக் கிட்டிருக்காங்க..."

"நான் ஆசிரியையா தொழில் செய்யிறேன். எனக்கு ஒரு அண்ணன் இருக்காரு. அப்பா ரெயில்வேயில வேலை... இது போதுமா..?."

"நிச்சயமா போதாது... ஆனாலும் பரவாயில்லை..."

இரண்டு வாரம் சென்றது.

* * *

"ஹலோ மஞ்சுளா இருக்காங்களா?"

"நான்தான் பேசுறேன்..."

"நீங்க எனக்கு டெலிபோன் பண்ணுவீங்கன்னு பார்த்தேன். பண்ணலையே..."

"நான் எதுக்குப் பண்ணனும்...?"

"ஆமா... நீங்க எதுக்கு பண்ணனும்? நீங்க டெலிபோன் பண்ணுறளவுக்கு நாம பெரிசா ஒண்ணும் பழகலையே இல்லையா...?"

"என்ன கோவிச்சிட்டிங்க போல... ஆமா... உங்களுக்குப் பொண்ணு பார்க்கிறதா சொன்னீங்களே பார்த்தாச்சா..."

"பார்த்துக்கிட்டிருக்காங்க. ஆனா எனக்குத்தான் பிடிக்கலை..."

"ஏன் என்ன விஷயம்...?"

"எனக்குன்னு சில கொள்கைகள் இருக்கு. நான் மணம் முடிக்கிற பொண்ணுக்கு நல்ல மனம் இருந்தாப் போதும். பணம் தேவையில்லை. அழகு, அறிவு இருக்கணும். அந்தஸ்து தேவையில்லை. இளம் விதவையா யிருந்தாலும் பரவாயில்லை. ஆனா வில்லங்க மில்லாத குடும்பமா இருக்கணும்..."

"அட ரொம்ப நல்ல கொள்கைதான். நானும் உங்களுக்காக முயற்சி செய்யிறேன்..."

ஒரு வாரம் சென்றது.

* * *

"ஹலோ... மஞ்சுளா இருக்காங்களா...?"

"நான் மஞ்சுளாதான் பேசுறேன். நீங்க சுதாகர் தானே... உங்களோட பேச நினைச்சேன்... நல்ல வேளை நீங்களே போன் பண்ணிட்டீங்க..."

"பரவாயில்லையே. இப்பவாவது நீங்களே பேச நினைச்சீங்களே. ரொம்ப சந்தோஷம்... சொல்லுங்க..."

"என்னத்தை சொல்லுறது... மனசுல விஷயம் இருக்கு... ஆனா வெளியே வரமாட்டேன்னுது..."

"நாமதான் ஓரளவு தெரிஞ்சவங்களாயிட்டோமே... பயப்படாம சொல்லுங்க..."

"நீங்க உங்க திருமணம் பத்தி என்கிட்டே சொன்னீங்க..."

"ஆமா சொன்னேன்..."

"பொண்ணுக்கு பணம் தேவையில்லை, அந்தஸ்து தேவையில்லை, அவ விதவையா இருந்தாலும் பரவாயில்லை, ஆனா அழகும் அறிவும் இருந்தாப் போதும்ன்னு சொன்னீங்க..."

"ஆமா சொன்னேன்..."

"கல்யாணமாகி ஒரே மாசத்துல கணவனை இழந்துட்ட ஒரு இளம் பெண் இருக்கா. அவ விதவை தானே தவிர மற்றப்படி நீங்க எதிர்பார்க்கிற எல்லா தகுதியையும் கொண்டவள்."

"அப்படியா அது யார்ன்னு நான் தெரிஞ்சுக்கலாமா?"

"நிச்சயமா... நீங்க அடுத்தவாரமே பெண் பார்க்கவும் வரலாம்..."

"முதல்ல யார்ன்னு சொல்லுங்க..."

"வந்து... அது வேறு யாருமில்ல... நான்தான்..."

"..............................."

"என்ன பதிலைக் காணோம்..."

"ஒண்ணுமில்ல... நான் அப்புறம் பேசுறேன் வச்சிடுறேன்..."

ஆறுமாதம் ஓடியது.

* * *

"ஹலோ மஞ்சுளா இருக்காங்களா...?

"நான் மஞ்சுளாதான் பேசுறேன்..."

"ஏய் மஞ்சுளா என்னடி என் குரல் அதுக்குள்ள மறந்துடுச்சா... நான்தான் காஞ்சனா...?"

"அட காஞ்சனாவா... என்னடி என்னோட கல்யாணத்துக்கு வரல்ல... நீ ரொம்ப மோசம்டி..."

"கோவிச்சிக்காதேடி... உன்னோட கல்யாணப் பத்திரிகையை உன் அப்பா அம்மா கொண்டு வந்தப்போ நான் வீட்ல இல்லை. கொழும்புல இருந்தேன். நான் சமூக சேவை நிறுவனமொன்னுல வேலை செய்யிற விஷயம்தான் உனக்கு தெரியுமே. ஒரு கருத்தரங்கு சம்பந்தமா உடனடியா இந்தியாவுக்கு போக வேண்டியதாயிடுச்சி. மூணுமாசம் கழிச்சி இப்பதான் வீட்டுக்கு வந்தேன். உன் திருமண அழைப்பிதழை பார்த்து அதிர்ச்சியடைஞ்சிட்டேன். நீ யாரோ சுதாகரனை மணம் முடிக்கிறதா சொல்லிக்கிட்டிருந்தே. ஆனா மணமகன் சுகுமார்ன்னு இருக்கு என்ன இது குழப்பம்..."

"அதை ஏண்டி கேட்கிறே... அந்தாளு உத்தமன் மாதிரி டெலிபோன்ல பேசினான். நானும் முதல்ல நம்பினேன். இருந்தாலும் அந்தாளை சோதிச்சு பாக்குறதுக்காக நானொரு இளம் விதவைன்னு பொய் சொன்னேன். அவ்வளவுதான். அவசர அவசரமாக போனை வச்சிட்டான். அதுக்கப்புறம் எந்தத் தகவலும் இல்லை. நல்ல வேளை நான் தப்பினேன். அப்பா அம்மா பார்த்த மாப்பிள்ளைக்கே கழுத்தை நீட்டினேன். சந்தோஷமா இருக்கேன்..."

"அட அப்படியா கதை. இதுக்குத் தான் முன்னப்பின்ன தெரியாதவங்கக் கிட்ட கவனமா இருக்கணும்ன்னு சொல்லுறது... சரி... நாளைக்கு உன்னை வந்து பார்க்கிறேன்..."

மூன்று வாரம் ஓடியது.

* * *

"ஹலோ மஞ்சுளா இருக்காங்களா...?"

"ஆமா நான்தான் பேசுறேன்... நீங்க யாரு...?"

"நான் பால்ராஜ் பேசுறேன்..."

"அப்படி யாரையும் எனக்கு தெரியாது. இது ரோங் நம்பர்ன்னு நினைக்கிறேன்..."

"இல்ல... சரியான நம்பர்தான். உங்களுக்கு சுதாகரை தெரியும்தானே..."

"அந்த அயோக்கியனைப் பத்தி பேச வேணாம். தயவு செஞ்சி தொலைபேசியை வச்சிடுறீங்களா...?"

"தயவு செஞ்சி அவசரப்பட்டு வச்சிடாதீங்க. நான் சுதாகரனோட அண்ணா பால்ராஜ் பேசுறேன்..."

"நீங்க எதுக்காக பேசணும்...?

"தயவு செஞ்சி அவசரப்படாம நிதானமா நான் சொல்றதைக் கேளுங்க. சுமார் ஆறரை மாசத்துக்கு முன்னால என் தம்பி யாரோ ஒரு விதவைப் பெண்ணைக் கல்யாணம் செஞ்சிக்கப் போறதாகவும் பொண்ணுப் பார்க்க போக தயாரா இருக்குமாறும் எங்கக் கிட்ட சொன்னான். ஆனா யார் எவர்ன்னு சரியா சொல்லலை. கொழும்புக்கு சந்தோஷமா போனவனைப் பற்றி எந்தத் தகவலும் இல்லை. நாங்க தேடாத இடமில்லை. போகாத ஆளில்லை. எங்கே தேடியும் அவன் அகப்படலை. நாங்க எல்லாரும் நடைப் பிணமாயிட்டோம். போனவாரம் தான் தகவல் வந்திச்சி. அவன் பூசா முகாம்ல தடுத்து வைக்கப் பட்டிருந்தான். ரொம்ப கஷ்டப்பட்டு நான் பூசா சிறையில அவனை சந்திச்சேன். அவன் கதறிட்டான். அப்போதான் இந்த தொலைபேசி இலக்கத்தையும் உங்க பெயரையும் சொன்னான். அவன் மேல எந்த குத்தமும் இல்லை. உண்மை யிலேயே அவன் தங்கமானவன். போதாதவேளை அவன் சும்மா போய் மாட்டிக் கிட்டான். அவனை வெளியே எடுக்க எல்லா விதமான முயற்சிகளும் எடுத்துக் கிட்டிருக்கோம். அவன் உங்கக் கிட்ட சொல்லச் சொன்னான். இளமை யிலேயே பூவையும் பொட்டையும் இழந்து வேதனையோட இருக்கிற உங்களோட கண்ணீரை சீக்கிரமா வந்து துடைப்பானாம். அதுவரையிலும் பொறுமையா இருக்கணுமாம்... நான் உங்களை நேர்ல பார்த்ததில்ல. என் தம்பியும் பார்த்ததில்ல. நீங்க அவனுக் காக காத்திருக் கணும்... காத்திருப் பீங்களா மஞ்சுளா... ஹலோ... ஹலோ........"

(யாவும் கற்பனை)

கவிஞர் காசி. ஆனந்தன் 48 ஆண்டுகளுக்கு முன்னர் - 1996 இல் - இளைஞனாக இருந்த போது வரைந்த கவிதை இது.

## கள்ளப் பார்வையில்...

கறுப்புக் கண்ணாடியைப் போட்டு - அவள்
கண்ணுக்குத் தெரியாமல் நான் பார்த்த போது
உருப்பட்டு வந்ததோர் பாட்டு! - அதை
ஒழுங்காகச் சொல்லுவேன் ஒன்றும் தப்பாது!

வதனத் தடாகத்தி னூடு... - கயல்
நயனத்தை நான்கண்டு பட்டதோர் பாடு
புவனத்தில் இல்லாததோடு - உடற்
புதுமைக்கு அவளுக்கு இல்லையே ஈடு!

சிறிதுதான் என்றாலும் நுங்கை - வென்ற
சீற்றத்தில் நின்றதோ என்னவோ கொங்கை!
புரியாத புதிரடா மங்கை! - அவள்
புலவர்க்கு வெறியூட்ட உருவான நங்கை!

முத்தென்ற முப்பதி ரெண்டு! - அதை
மூடிற்று வாயென்ற மாம்பழத் துண்டு!
சித்திரம் போலவள் நின்று.... - என்
சிந்தையில் போட்டாளே ஆயிரம் குண்டு!

குனியவும் நிமிரவும் செய்தாள்! - தன்
கூந்தலை மெதுவாகக் கோதினாள் கையால்!
பனியெனும் முறுவலைச் செய்தாள்! - ஒரு
பாய்ச்சலில் உயிர்தனைப் பாவையள் கொய்தாள்!

இடையினால் வெட்டினாள் வெட்டு! - நான்
இடறினேன் மயக்கத்தில் கால்தடுக்குற்று!
உடன்வெளிப் பட்டதென் குட்டு! - கண்டு
ஓடினாள் நாணத்தினால் வதைப்பட்டு!

# மிஸ்டர் முன்சாமி ஒரு 1.2.1

விஞ்ஞானச் சிறுகதை

எம்பேரு முன்சாமி. ஜெனரலாஸ்பத்ரிலே கேட்டாண்டே நின்னிக்கினு பலகாரம் வாங்கிக்கினு வருவேன். அப்புறம் சென்ட்ரல்லே உள்ளே உட்டாங்கன்னா சேட்டுங்களுக்கு மூட்டை தூக்குவேன். ஒரிஜினல் வேல் புஸ்தகம் விப்பேன். என்ன வேணா செய்வேன். திருடமாட்டேன். எனக்கு ஒருத்தரும் கிடையாது. ஏதோ பௌப்பு அங்கே இங்கே ஓடறேன். வாத்யார் படம் மட்டும் பார்ப்பேன். தந்தி பேப்பர் இந்த வெம்பன் பய வந்தான்னா படிச்சுக் காட்டுவான். அர்சியல் பேசறதில்லே. எவன் ஆண்டா எனக்கு என்ன? அன்னன்னிக்குப் பொய்தை ஓட்டி ப்ளேட்பாரத்தில் படுக்கவே நமக்குச் சரியாக்கீது. எப்பவாது கொஞ்சம் ஷோக்கா இருந்தா ராயபுரத்திலே அர்ணாசலம் இல்லை அவனோட போயி... அது ஏன் சாமி உனக்கெல்லாம்...? நான் சொல்ல வந்த விசஷயம் வேற.

திடீர்னு எனக்கு என்ன ஆச்சு, அதான் சொல்ல வந்தேன். ரொம்ப நாளா நான் ஆஸ்பத்ரி கேட்டாண்டே ஒரு அம்மாவைக் கவனிச்சிருக்கேன். அம்மான்னா சின்னப் பொண்ணுதான். டாக்டரு படிச்சுட்டு என்னவோ பெரிய படிப்பு படிக்குது பெஷலா. சும்மா சொல்லக்கூடாது. ஜோதிலச்சுமி மாதிரி ஒடம்பு; சிரிச்ச மொகம். இந்தப் பையனுங்க பல பேர் ரொம்பச் சுத்தினானுக அவளை. ம்? அதுங்கிட்டயா? அது இங்கிலீஷ் பேசினா ஸூம்மா அப்பிடி நாக்கு நுனிலே வெளையாடும். என்னா அலச்சியம்! பெரிய பெரிய டாக்டருங்களைக் காவம் ஆட வெக்கும். ஷ்டெடிய்யா அப்படியே... என்னா சொல்றது வாத்யாரே வார்த்தை வரல்லே!

அந்தப் பொண்ணு வந்து என்னைக் கூப்பிடறான்னா பாத்துக்யேன். எனக்கு எப்படி இருக்கும்? இன்னடான்னு ஆய்டுச்சு. நடந்து போய்க்கினே இருந்தது என்னைத் திரும்பிப் பார்த்து இத பார் இங்கே வான்னு கூப்டுது. என்னையாம்மான்னு நான் திரும்பித் திரும்பிப் பார்த்துக்கினேன். ஆமா, உன்னைத்தான்; உம் பேர் என்னன்னுது. எம்பேர் முன்சாமின்னேன். முன்சாமி, எங்கூட வான்னு கூப்பிட்டுது. எதுக்கம்மான்னேன். ஸும்மா வாயேன்னது. எனக்கு ஒரு விதமாக ஆய்டுச்சு. அது விடுவிடுன்னு நடக்குது. நான் கூடவே ஓடறன். உள்ளே ஆஸ்பத்திரிக்குள்ளே கூட்டிக்கினு போவுது. ஜெனரல் வார்டு? பிரசவ வார்டு எல்லாம் தாண்டிப் புதுக் கட்டிடத்திலே பூந்து அது என்ன 'லிட்'டா, அதுலே ஏறி சர்ருனு மேலே போனோம். அஞ்சாவது, ஆறாவது மாடிலே போய் ரூமுக்குக் கூட்டினு போச்சு. அங்கே ஒரு பெரிய டாக்டரு உக்காந்திருக்காரு. ரங்காராவ் கணக்கா. அவரோட இது ஏதோ இங்கிலிஷ்லே பேசிச்சு. அவரு என்னைப் பார்த்து உட்காருன்னாரு. அந்தப் பொண்ணும் முன்சாமி நாற்காலிலே உக்காருு பயப்படாதேன்னு சொல்லிச்சு. அந்த ரூம்லே ஒரே மிஷினா இருந்திச்சு. எலட்ரி வேலை எல்லாம். அப்புறம் போட்டோ எடுப்பாங்களே அது; அப்புறம் கண்ணாடி சாமான்கள், பளபளன்னு ஆயுதங்கள். எனக்கு ஒண்ணுமே புரியலை வாத்யாரே. இந்த அம்மாவானா கேள்வி மேலே கேள்வியா கேக்கறாங்க. எத்தனாவது வரைக்கும் படிச்சிருக்கேன்னாங்க. இஸ்கோல் பக்கமே போனதில்லை நானுன்னேன். அப்பா, அம்மா எங்கேன்னாங்க. அப்பா ராயப்பேட்டைல ரங்கன்னு, பேட்டை ரவ்டி அடிப்பாரு. காலாவதி ஆய்ட்டாரு. அம்மாவும் சின்ன வயசிலேயே பூட்டாங்கன்னேன். எழுதப் படிக்கத் தெரியுமான்னதுக்குப் பொய்மை பாய்பேன்னேன். கல்யாணம் ஆய்டுச்சான்னு கேட்டதுக்குச் சும்மா சிரிச்சேன். அவங்களும் சிரிச்சுட்டாங்க. அவங்க ரெண்டு பேரும் ஒருத்தரை ஒருத்தர் பார்த்துக்கினு மறுபடி இங்கிலீஷ்லே பேசிக்கினாங்க. அப்புறம் மலையாளத்து நர்சு வந்து என் கைலே ரப்பர் சுத்திச்சு. புஸ்ஸு புஸ்ஸுன்னு பம்ப் அடிக்குது.

ஒரு பொஸ்தவத்தைக் கொண்டாந்து பிரிச்சு முன்சாமி இதிலே என்ன தெரியுது உனக்குன்னாங்க. கலர் கலரா புள்ளி புள்ளியாத் தெரியுதுன்னேன். சட்டையைக் கய்ட்டச் சொன்னாங்க. மார்பிலே வெச்சுப் பாத்தாங்க... பயப்படாதே முன்சாமி. உன்னை ஒண்ணும் செய்யமாட்டோம். முன்சாமி நான் சொல்றதைக் கெவனமா கேளுன்னாங்க. என்ன செய்யப் போறிங்கன்னேன். முன்சாமி உனக்கு என்ன ஆசைன்னாங்க. ஆஸ்பத்ரிலே தொப்பி போட்டு வண்டிலே தள்ளிக்கினே போறானே அந்த வேலை எனக்கு வாங்கிக் கொடுத்துடுங்க, அதான் ஆசைன்னேன். முன்சாமி, உனக்கு எங்களை எல்லாம் போல் படிக்க ஆசையா, பேச ஆசையா? பெரிய பெரிய பொஸ்தகங்கள்ளாம் படிக்கறாப்பலே ஆசை இருக்குதான்னாங்க. அதெல்லாம் நடக்காதும்மான்னேன். நடக்க வெக்கிறோம்னாங்க. எப்படின்னேன். அந்த டெச்சர் தள்றானே அவனைவிட நீ முன்னுக்கு வர முடியும். உன்னாலே தமிள் அப்றம் இங்கிலீஷ் எல்லாம் படிக்க முடியும். பெரிய பெரிய பொஸ்தகங்கள் விஷயங்கள் எல்லாம் உனக்குச் சட்டுன்னு விளங்கும். எல்லாம் ஒரு ரெண்டு மூணு மாசத்திலே நடக்கும். ஆப்ரேசன் பண்ணணிக்கணுங்க.



ஆபரேசனா? இன்னா ஆப்ரேசன்னு கேட்டேன். ஒண்ணும் வலிக்கவே வலிக்காது. கொஞ்சநாழி கம்முனு தூங்குவே. அவ்வளவுதான். அப்புறம் சாதாரணமாக நடமாடுவேன்னாங்க. ஆப்ரேசன் பண்ணிக்கினா பொஸ்தவம் படிக்க முடியுமான்னு கேட்டேன். பொஸ்தவம் மட்டுமில்லே, எழுத முடியும், பேச முடியும். இப்படி ஆயிடுவே, அப்படி ஆய்டுவேன்னு என்னென்னவோ சொன்னாங்க. மொதல்ல பயந்தேன். அந்த அம்மா ரொம்ப நல்லா பேசிச்சு. இதிலே பயப்பட ஒண்ணுமில்லே. உனக்கா இஷ்டமிருந்து பண்ணிக்கிறேன்னு சொன்னாத்தான் உன்னை நாங்க தொடுவோம். ஆனா இதிலே உனக்கு நெறய நல்லது. மறுபடி திருப்பித் திருப்பிச் சொன்னாங்க. அந்த அம்மா சொல்ற விதத்தைப் பார்த்தா இதிலே ஒண்ணும் ராங்கா ஏதும் இருக்காதுன்னு தோணிச்சு. எத்தனை நாள் பிளாட்பாரத்திலே தூங்கப் போறே? எத்தனை நாள் மூட்டை தூக்கப் போற? இந்த மெட்ராஸ்லே ஒன்னை மாதிரி எத்தனை பேரு அடுத்த வேளைச் சோத்துக்கு என்ன செய்கிறதுன்னு தெரியாம ஏதோ எறும்பு போல வாழ்றாங்க தெரியுமான்னு அந்த அம்மா பேசிச்சு. நான் நீங்க சொன்னா சரி, ஆப்ரேசன் செஞ்சுக்கறேன்னு சொல்லிட்டேன். அப்பறம் காயிதம் கொண்டுவந்து கைலே மசி தடவி வாங்கிக்கிட்டாங்க. என்ன என்னவோ டெஸ்டுகளெல்லாம் பண்ணாங்க. மத்தாநா வரச் சொன்னாங்க.

காலையிலே ஆஸ்பத்திரிக்குப் போய்ட்டேன். டாக்டரம்மா காத்திருந்தாங்க. தன் பேர் லீலான்னு சொன்னாங்க. அந்த பெரிய டாக்டர் பேரும் சொன்னாங்க. வாயிலே நுழையலே. கிறிஸ்தவங்க பேருலே. ஜிப்பா மாதிரி கொடுத்தாங்க. தலைலே வெள்ளைத் தொப்பி போட்டாங்க. வெள்ளைலே பனியன் எல்லாம் கொடுத்தாங்க. சௌகரியமா படுக்கச் சொன்னாங்க. அந்த அம்மா என்னைவிட்டு நகரவே இல்லை. என் கூடவே ஷோக்கா பேசிக் கொடுத்துக்கினே சிரிச்சுக்கினே இருந்திச்சு. அப்புறம் நரம்பு ஊசி போட்டாங்க. ஒடம்பெல்லாம் சரியான குடு வாத்யாரே! அப்றம் வண்டி தள்ளிக்கினு உள்ளே கொண்டுபோனாங்க. அப்றம் மறுபடி ஊசி போட்டாங்க. இன்னா சொருகு சொருகிச்சு வாத்யாரே!

* * *

மூன்று மாதங்கள், தொண்ணூறு நாட்கள், நான் இந்த இடத்திற்கு சிகிச்சைக்காக வந்து.

டாக்டர் லீலா இன்று நான் வெளியே உலாவப் போகலாம் என்று சொல்லி இருக்கிறாள். சொல்லும்போது அவள் நெற்றியில் விளையாடிய மெல்லிய கூந்தலின் ஒன்றிரண்டு கற்றைகளைக் கவனித்தேன்... வந்தனம் டாக்டர். நான் அறையிலேயே இருக்கிறேன். புத்தகங்கள் படிக்க வேண்டும். என்றேன். புத்தகங்கள் போதாதா மிஸ்டர் முனுசாமி என்றார். இன்னும் வேண்டும், இன்னும் இன்னும் வேண்டும் என்றேன். மறுபடி அந்தப் புன்முறுவல். பற்கள் தெரியாமல் உதட்டோரத்தில் மட்டும் மெல்ல மலரும் மிக மெல்லிய புன்முறுவல்.

என்னருகே எத்தனைப் புத்தகங்கள்... எத்தனைப் புத்தகங்கள்! படித்துவிட்டேன். என் தூக்கத்தில் என் தலைமாட்டில் டேப் ரெக்கார்டர். அதை மறுபடி செயல்படுத்தினேன். அது மெலிதாக முணுமுணுத்தது. "உறவு, பந்தம், பாசம், அன்பு, பரிவு, ஆசை, நேசம், நட்பு, காதல்..." அணைத்தேன்.

எத்தனை வார்த்தைகள், இரண்டு மனித மனங்களின் ஈடுபாட்டைக் காட்ட?

அந்தக் கடைசி வார்த்தை... காதல்!

டாக்டர் லீலா மறுபடி உள்ளே வந்தாள். "டாக்டர், இன்று உங்களுக்கு ஒரு பரிசு அளிக்கப்போகிறேன்" என்றேன். "அப்படியா?" என்றாள். மாத்திரை சீசாவைப் பார்த்தாள். "8 மணி மாத்திரை இன்னும் சாப்பிடவில்லை நீங்கள்?" என்றாள்.

"டாக்டர், 8 மணி மாத்திரையைச் சற்று மறந்திருக்கலாம். காதல் என்ற வார்த்தைக்கு என்ன அர்த்தம் என்று சொல்லுங்களேன்."

"நீங்கள்தான் சொல்லுங்களேன்."

"டாக்டர், நான் எப்படி மாறிவிட்டேன்! சாக்கடையில் இருந்தவனைக் கதவு திறந்து வண்ணங்கள் நிறைந்த பூங்காவிலே உலவவிட்டிருக்கிறீர்கள். அதுவும் தகுதியுடன் உலவவிட்டிருக்கிறீர்கள்! இது என்ன மாயம்? டாக்டர், நான் எப்படி இருந்தேன்?" என்றேன்.

"ஒன்றும் தெரியாமல்."

"இல்லை. அறிவு, சுத்தம், நாகரிகம் எதுவும் படாத ஓர் உலகத்தில்... இப்பொழுது?"

"நிறைய படிக்கிறீர்கள்."

"படிக்கிறேன். எத்தனை விந்தைகள், எத்தனை வார்த்தைகள்! இரவு பகலாக விஞ்ஞானத்தை வளைத்து எனக்குப் புகட்டிப் புகட்டி என் சிந்தனைக்கு வடிவம் கொடுத்து அதிவேகத்தில் அத்தனை வார்த்தைகளைக் கிரகிக்கவைத்துப் பேச்சு, நடை, இலக்கணம், வாக்கிய அமைப்பு, சொல்லும் விதம், அறிவு எல்லாம் இந்தச் சிறிய காலத்தில் இத்தனைச் சீக்கிரம் இத்தனை வேகத்தில் என்னில் ஏற்றி எனக்குப் புதிய பிறவி அளித்த உங்களுக்கு நான் ஒரு பரிசளிக்க வேண்டும்..."

"மிஸ்டர் முனுசாமி. இந்தப் பரிசோதனை இன்னும் முடிவு பெறவில்லை."

"இனி என்ன டாக்டர்? எனக்கு வழி அமைத்துக் கொடுத்துவிட்டீர்கள். அந்த வழி செல்லும் திக்கையும் காட்டிவிட்டீர்கள். இனி என்ன?"

"இனிமேல்தான்... இனிமேல்தான்!" என்றாள் டாக்டர் லீலா. கண்ணாடி ஜன்னல்களின் ஊடே திரை ஆட, அவள் மேல் வெளிச்சம் விந்துவிதமாகப் பட்டபோது சொல்லிவிடலாமா என்று யோசித்தேன். இந்தப் பெண் புரிந்த விந்தை நான்... இவள் செய்த புதிய சகாப்தம் நான்... இவள் இல்லையேல் இந்தப் புதிய நானில்லை. இன்னமும் எத்தனை பரிவு, எத்தனை ஆதங்கம் என் மேல்! 'அதிகம் படிக்காதீர்கள்' 'வெளிச்சம் பின் பக்கத்திலிருந்து வர வேண்டும்' 'ரத்த அழுத்தத்தை அவ்வப்போது கவனிக்க வேண்டும்.' "நீங்கள் ஒரு விலை உயர்ந்த நகை போல எங்களுக்கு...'

"டாக்டர்" என்றேன்.

"சொல்லுங்கள்."

"இதைப் படியுங்கள்" என்றேன்.

புத்தகத்தைப் பிரித்தாள்.

"டாக்டர் லீலாவுக்கு,

அன்புடன்,

பக்தியுடன்,

பாசத்துடன்,

காதலுடன் முனுசாமி."

என்று எழுதி இருந்தேன். கடைசி வார்த்தையில் சற்று நேரம் அவள் கண்கள் தயங்கின. என்னை நிமிர்ந்து பார்த்தாள். "காஃப் லவ் என்று ஆங்கிலத்தில் ஒரு வார்த்தை இருக்கிறது" என்றாள்.

"டாக்டர், என்னுள் ஜுரம் இருக்கிறது. ஆபரேஷனுக்குப் பிறகு என் ஞாபக சக்தி சாதாரண சக்தியைவிடப் பதினைந்து பதினாறு மடங்கு செயல்படுகிறது. என்னில் தன்னம்பிக்கை ஊறுகிறது. எனக்குக் காட்டப்பட்ட புதிய அறிவுலகத்தில் வெற்றிபெற எனக்கு எல்லாத் தகுதிகளும் ஏற்பட்டுவிட்டன. ஒரு நிமிஷம் அந்தப் புத்தகத்தைக் கொடுங்கள் என்னிடம். ஏதாவது பக்கத்தைக் காட்டுங்கள். ஒரு தடவைப் படிக்கிறேன். மூடுகிறேன். உடனே ஒப்பிக்கிறேன். என் பேச்சு செப்பனிடப்பட்டுவிட்டது. எனக்கு நாகரிகம் ஏற்பட்டு விட்டது. இதற்கெல்லாம் ஒரே காரணம் நீங்களும் டாக்டர் பெர்னாண்டஸும். முக்கியமாக நீங்கள். உங்கள் இனிய குரல், இனிய பேச்சு, பாவனைகள். என் மேல் எப்பொழுதும் விரவி நிற்கிறீர்கள். என் மனதில் என் இரத்த ஓட்டத்தில்! டாக்டர், நான் உங்கள் அடிமை. உங்களை... உங்களை... உங்களை... நான் காதலிக்கிறேன்."

"ஓஹோ!" என்றாள் டாக்டர்.

"ஓ எஸ்!" என்றேன். "ஏன் டாக்டர், நான் அழகாக இல்லையா?"

"அப்படி இல்லை முனுசாமி. உங்களுக்கும் எனக்கும் சென்ற மாதங்களில் ஏற்பட்ட உறவு தனிப்பட்ட டாக்டர் - பேஷண்ட் உறவு. உங்களை வெறும் பேஷண்ட் என்று சொல்ல முடியாது. எங்கள் ஆராய்ச்சிக்கு உதவிய ஒரு முக்கியமான பேஷண்ட். இருந்தும் உங்களுடன் நான் பழகியது பேசியது போதித்தது எல்லாம் மனத்தத்துவ ரீதியில் ஒரு சோதனை செய்வதற்காக."

"காதல் மனத்தத்துவ ரீதியில் ஒரு சோதனை இல்லையா டாக்டர்? நான் உங்களுக்குத் தகுதி இல்லாதவனாக நீங்கள் எண்ணலாம்."

"சேச்சே. அப்படி இல்லை. இன்றைக்கு உங்களுக்குத் தெரிந்திருப்பதில் எனக்குப் பாதிதான் தெரியும்."

"என்னை நீங்கள் ஏற்றுக்கொள்வீர்களா, உங்கள் வேலைக்காரனாகவாவது?"

"தன்னம்பிக்கை இல்லாமல் பேசாதீர்கள்."

"தன்னம்பிக்கை இருப்பதால் நேராக, அப்பட்டமாக உங்களைக் கேட்கிறேன். என்னை மணம் செய்துகொள்வீர்களா?"

"இப்பொழுதே பதில் வேண்டுமா? சற்று யோசிக்க வேண்டாமா?"

"யோசித்துச் சொல்லுங்கள். என் தகுதிகள் என்ன என்பது உங்களுக்குத் தெரியும். நான் எப்படி இருந்தவன் என்பதும் உங்களுக்குத் தெரியும். நான் எப்படி ஆனேன் என்றும், என்னவெல்லாம் சாதிக்க முடியும் என்றும் தெரியும்."

"எல்லாவற்றையும் யோசித்து நாளை பதில் சொல்கிறேனே... அது என்ன புத்தகம்?"

"சிலப்பதிகாரம்."

"அடேயப்பா. நீங்கள் ரொம்ப ஃபாஸ்ட், குட்நைட்" என்று மறுபடி அந்த விசேஷப் புன்னகை செய்துவிட்டுச் சென்றாள்.

அவள் போனபின் அந்தப் புன்னகையை என் கட்டிலுக்கு எதிரே வைக்கப்பட்டிருந்த மலர்களில் மறுபடி பார்த்தேன். நாளைக் காலை, நாளை காலை. பாடினேன் 'மாசில் வீணையும்...'


இரண்டு மணி நேரத்தில், நான் சற்றும் எதிர்பாராத விதத்தில் டாக்டர் லீலா மறுபடி வந்தாள்.

"மிஸ்டர் முனுசாமி, நான் உங்களுடன் பேச வேண்டும்" என்றாள்.

"சொல்லுங்கள் டாக்டர்."

"நீங்கள் சற்றுமுன் என்னிடம் கேட்டதை டாக்டர் ஃபெர்னாண்டஸிடம் சொன்னேன். அவர் உடனே உங்களிடம் விஷயத்தைச் சொல்லி விடுவதுதான் உசிதம் என்று

(16 ஆம் பக்கம் பார்க்க)




# ஊசி வாங்கிய உத்தம சீடர்கள்

பரமார்த்த குருவின் சட்டை கிழிந்து விட்டது. அதைத் தைக்கவேண்டுமென்று ஊசியைத் தேடியபோது அதைக் காணவில்லை. நூல் மட்டும் இருந்தது.

அவர் தன் சீடர்களை அழைத்து, ''நீங்கள் கடைக்குப்போய் ஓர் ஊசி வாங்கி வாருங்கள்'' என்றார். அவர்கள் ஐவரும் மகிழ்ச்சியுடன் புறப்பட்டார்கள். சிறிது தூரம் சென்றதும் மட்டி கேட்டான்.

''ஊசி எங்கே வாங்குவது?''

''கடையில்தான்.''

''எந்தக் கடையில்?''

''இது என்னடா கேள்வி?, எல்லாக் கடைகளிலும் ஊசி கிடைக்கும்.''

''ஊசி எவ்வளவு பெரிதாக இருக்கும்?''

''மிகச் சிறியதாக இருக்கும்''

''மிகச் சிறிய ஊசியை வாங்கி வருவதற்கு நம் ஐந்து பேரையும் குரு ஏன் அனுப்பவேண்டும்? இதில்தான் எனக்குச் சந்தேகமே வருகிறது'' என்று ஒரு போடு போட்டான் முட்டாள்.

''அப்படித்தான் நானும் யோசிக்கிறேன்'' - இது மடையன்.

''நமது புத்திசாலித்தனத்தைப் பரீட்சை செய்து பார்க்கவே ஊசி வாங்கி வரச் சொல்லி இருக்கிறார்'' ஒத்துப் பாடினான் பேதை.

''நீங்கள் சொல்வது சிறிய ஊசி. நான் பெரிய ஊசியையே பார்த்திருக்கிறேன்'' இது மிலேச்சன்.

''பெரிய ஊசி என்றால் எவ்வளவு நீளம்?''

''உன் உயரம் இருக்கும். ஒருநாள் ஒருவர் அந்த ஊசியால் மண்ணைத் தோண்டிக்கொண்டிருப்பதைக் கண்டேன்.''

''அடே மிலேச்சா, அது கடப்பாரை. ஊசி அல்ல.''

''அதுவும் ஊசிதான்.''

''இல்லை. கடப்பாரை.''

''இல்லை ஊசி.''

இருவரும் வாக்குவாதம் செய்தனர். மற்றவர்கள் அவர்களை சமாதானப் படுத்தி அழைத்துச் சென்றார்கள்.

முதலில் சிறிய ஊசியை வாங்குவதென்றும் அது இல்லை என்று குரு சொல்லிவிட்டால் மிலேச்சன் சொல்வதுபோல் பெரிய ஊசியை வாங்கிச் செல்வதென்றும் முடிவுகட்டி ஒரு கடைக்குச் சென்றார்கள்.

இவர்களைப் பார்த்த கடைக்காரர் இந்த ஐந்துபேரும் மூட்டை மூட்டையாக நம் கடையில் ஏதோ வாங்க வந்திருக்கிறார்கள் என்று நினைத்து-

''ஐயா வாருங்கள். உங்களுக்கு என்ன வேண்டும்?'' என மரியாதையாகக் கேட்டார்.

''கடைக்காரரே நாங்கள் ஐந்து பேரும் ஊசி வாங்க வந்தோம். உங்களிடம் ஊசி இருக்கிறதா?''

''எத்தனை ஊசிகள் வேண்டும்?''

''ஒரே ஊசி'' என்றான் மட்டி.

''ஏன் சிரிக்கிறீர்கள் கடைக்காரரே?'' இது பேதை.

''நீங்கள் ஐந்துபேரும் ஓர் ஊசியை எப்படித் தூக்கிக்கொண்டு செல்லப்போகிறீர்கள் என்று நினைத்தபோது சிரிப்பாக வந்தது''

''சரி எடுங்கள் ஊசியை''

கடைக்காரர் ஊசியை எடுத்துக் காண்பித்தார்.

''கடைக்காரரே, இதைவிடப் பெரிய ஊசி இருக்கிறதா?''

''நீங்கள் ஊசியை இதற்கு முன்னால் பார்த்ததே இல்லையா?''

''இல்லை, இல்லை''

இவர்கள் சரியான முட்டாள்களாக இருப்பார்கள் போலும் என்று நினைத்தார் கடைக்காரர்.

''ஊசி ஒன்று பத்துப்பணம்'' என்றார்.

''அடேயப்பா! பத்துப்பணமா? விலை மிகவும் அதிகமாக இருக்கிறதே. கொஞ்சம் குறைத்துக்கொள்ளக்கூடாதா?''

''சரி. ஐந்து பணம்கொடுங்கள்''

ஐந்து பணத்தைக் கொடுத்துவிட்டு ஊசி ஒன்றை வாங்கிக்கொண்டார்கள்.

ஊசியை மடையன் வாங்கிக் கொண்டான்.

சிறிது தூரம் சென்றார்கள்.

''பார்த்தாயா நம் சாமர்த்தியத்தை? பத்துப் பணம் ஊசியை ஐந்து பணத்திற்குக் கொடுத்துவிட்டான்'' என்று கையில் ஊசியை வைத்துக்கொண்டு கூத்தாடினான் மடையன்.

ஊசி கீழே விழுந்து விட்டது.

அது தெரியாமல் சிறிது தொலைவு நடந்தார்கள்.

''எங்கே அந்த ஊசியைக் காட்டு'' மிலேச்சன் கேட்டான்.

மூடியிருந்த கையை விரித் தான் மடையன்.

ஊசியைக் காணவில்லை.

''ஐயய்யோ ஊசி தொலைந்து விட்டதே.''

''இனி நாம் குருவிடம் போய் என்ன சொல்வது?'' கவலைகொண்ட அவர்கள் வழிநெடுகிலும் ஊசியைத் தேட ஆரம்பித்தார்கள்.

வெகு நேரம் தேடியும் ஊசி கிடைக்கவில்லை.

இவர்கள் தேடுவதை வெகுநேரம் வரை பார்த்துக்கொண்டிருந்த பெரியவர் ஒருவர், ''என்ன தேடுகிறீர்கள்? பணத்தைத் தொலைத்துவிட்டீர்களா?''

''இல்லை ஐயா, ஊசியைத் தொலைத்துவிட்டோம்''.

''அரைக்கால் பணத்திற்கு ஐம்பது ஊசிகள் வாங்கலாம். அதைப்போய் இவ்வளவு நேரம் தேடுகிறீர்களே!''

''ஐயா, நாங்கள் வாங்கியது ஐந்து பண ஊசி''

''ஐந்து பணத்திற்கு ஓர் ஊசியா? அது என்ன தங்க ஊசியா?''

''இல்லை. சாதாரண ஊசிதான்''

''எங்கே வாங்கினீர்கள்?''

''அதோ அந்தக் கடையில்''.

''கடைக்காரன் உங்களை வகையாக ஏமாற்றிவிட்டான்'' என்று சொல்லியபடியே நகர்ந்தார். ஐந்து சீடர்களுக்கும் மகாகோபம் வந்துவிட்டது. கடைக்காரனிடம் சென்று சண்டைபோட்டார்கள்.

''அரைக்கால் பணத்திற்கு ஐம்பது ஊசிகள் விற்கிறதாம். நீர் எங்களை ஏமாற்றிவிட்டீர்''

''இப்போது என்ன சொல்கிறீர்கள்?''

''எங்களுக்கு இன்னும் ஓர் ஊசி வேண்டும்''.

''ஒன்றென்ன, இரண்டு தருகிறேன்''.

கடைக்காரர் இரண்டு ஊசிகளை எடுத்து நீட்டினார்.

அவர்களுக்கு மகிழ்ச்சி தாங்கவில்லை.

''கடைக்காரரே! ஊசியைப் பத்திரமாக எடுத்துச்செல்வதற்கு ஓர் உபாயம் சொல்லுங்கள்''.

''பத்திரமாக எடுத்துச்செல்ல அதை ஒரு பனை மரத்தில் குத்தி எடுத்துப்போங்கள்''

''பனை மரத்தை எங்கே தேடுவது?''

''அதோ கிடக்கிறது. பாருங்கள்! அவற்றில் ஒன்றில் குத்தித் தூக்கிச் செல்லுங்கள்'' தன் எதிரில் விழுந்துகிடந்த பனை மரங்களைக் காட்டினான் கடைக்காரன்.



அதை நிஜம் என்று நம்பிய மூடர்கள் பனைமரத்தில் ஊசியைக் குத்தி அதைச் சுமக்க முடியாமல் சுமந்து சென்றார்கள்.

**நீதி:** முட்டாள்களுக்கு சிந்திக்கும் ஆற்றல் இல்லை.

(தொடரும்)

## அழகாக நிறம் தீட்டுங்கள் 58



தம்பி, தங்கைகளே! அருகே உள்ள படத்துக்கு அழகாக நிறம் தீட்டி எமது முகவரிக்கு அனுப்பி வையுங்கள். மிகச் சிறந்த முறையில் நிறம் தீட்டப்பட்டு தெரிவுசெய்யப்படும் படம் உங்கள் பெயர், தரம், பாடசாலை போன்ற விபரங்களுடன் பிரசுரமாகும். எங்கே உங்கள் கைவண்ணத்தைக் காட்டுங்கள் பார்க்கலாம்.

## சிறந்த முறையில் நிறம் தீட்டப்பட்ட படம்

அழகாக நிறம் தீட்டுங்கள் 55



[illegible], தரம் - 01 [illegible], திருக்குடும்ப கன்னியர் மடம், கொழும்பு - 04.

### பாராட்டுப் பெறுவோர்...

1. ஆர். எம். விநோத், தரம் 3, சென் தோமஸ் கல்லூரி, கல்கிஸை.
2. ஜே. எச். பாத்திமா [illegible], தரம் 3, ஸைனம் முஸ்லிம் மகா வித்தியாலயம், போல்ஸ் வீதி, புத்தளம்.
3. [illegible], தரம் 3, ஹைலண்ட்ஸ் கல்லூரி, ஹட்டன்.
4. ஸ்ரீ. [illegible], தரம் 5, கொ/ ஸைரியா முஸ்லிம் மகளிர் மகா வித்தியாலயம், கொழும்பு -09.

## சிறுவர் கைவண்ணம்



அக்ஷா செருதி, ஆ. கே.ஜீ, கிங்ஸ்டன் சர்வதேசக் கல்லூரி, கொழும்பு 15.



ஜெசுதீஸ், கிங்ஸ்டன் சர்வதேசக் கல்லூரி, கொழும்பு 15.



ஹர்சிகா, கிங்ஸ்டன் சர்வதேசக் கல்லூரி, கொழும்பு 15.



விஷாலி, கிங்ஸ்டன் சர்வதேசக் கல்லூரி, வெள்ளவத்தை, கொழும்பு 06.



# கண்ணுக்கு மையிடுங்கள்

உடலில் உஷ்ணம் சேரும்போது - சூடு அதிகரிக்கும் போது - முதலில் பாதிக்கப்படுவது கண்தான்.

சுமார் தொண்ணூறுக்கும் அதிகமான நோய்கள் கண்களைத் தாக்குகின்றன. அவற்றில் பலவற்றுக்கு உஷ்ணமே காரணம்.

நமது வீடுகளில் நமது பெற்றோர்கள், அவர்களுக்கும் முந்தைய தலை முறையினர், கண்களுக்கு மை தீட்டிக் கொள்வதன் மூலம் இம்மாதிரி நோய்கள் கண்களுக்கு வராமல் தடுத்து வந்தார்கள்.

அழகுக்காக மட்டுமல்லாமல் ஆரோக்கியத்தின் அடிப்படையிலும் கண்களுக்கு அஞ்சனமிட்டு வந்தார்கள்.

பழம்பெரும் தமிழ் இலக்கியங்களில் கண்களுக்கு மங்கையர் மைதீட்டி வந்த வழக்கம் பற்றிச் சொல்லப்பட்டிருக்கிறது.

சங்க காலத்தில் வாழ்ந்த பெண்டிர் தங்கள் உடல் அழகைப் பாதுகாத்து வந்தமை போல் கண் அழகையும் பாதுகாத்து வந்தார்கள் என்பதற்குச் சான்றுகள் உள்ளன.

மனித உறுப்புகளில் முக்கியத்துவம் வாய்ந்தவை கண்கள். 'பார்வை யில்லாதவன் பாதி மனிதன்' என்பார்கள்.

தற்கால நாகரீக உலகில் கண்கள் பாதிக்கப்படுவதற்கான வாய்ப்புகள் பெருகிவருகின்றன.

சினிமா, டி.வி. போன்ற ஒளிக்கதிர் வீசும் சாதனங்கள் விரைவில் கண்களைப் பழுதடையச் செய்துவிடும் சக்திகொண்டவை.

வீதியில் எழும் புழுதி, வாகனங்களிலிருந்து வெளிப்படும் எரிபொருள் புகை போன்றவைகளினாலும் கண்கள் விரைவில் பழுதடையக்கூடும்.

கண்களைப் பாதுகாத்துக் குளிர்ச்சியாக வைத்துக்கொள்ளப் பழங்காலம் முதல் நம் பெண்கள் கண்மை - அஞ்சனத்தை - உபயோகித்து வருகிறார்கள். அஞ்சனம் இடுவதன் மூலம் கண்களுக்கு அழகூட்டவும் முடியும்; முகத்தின் அழகிய தோற்றத்தையும் அதிகரிக்கச் செய்யவும் முடியும்.

தற்சமயம் கடைகளில் கண்மை விற்கப்பட்டு வருகின்றது. அழகிய - கவர்ச்சிமிக்க குப்பிகளில் விற்கப்படும் இவை தரமானவை என்றாலும் சற்று விலை கூடியவை.

இதே விலையில் நமக்கு விருப்பப் படும் கண்மையை அதிக அளவில் நம் வீட்டிலேயே நாமே தயாரித்துக் கொள்ளலாம்.

கரிசலாங்கண்ணி மை, வேப்பம்பூ மை, சோற்றுக் கற்றாளை மை, மாதுளம்பழ மை எனப் பலவகையான அஞ்சனங்கள் உண்டு.

இவற்றை எப்படித் தயாரிப்பது?

**கரிசலாங்கண்ணி மை**

கரிசலாங்கண்ணிக் கீரையை வாங்கி, வேர்ப்பகுதியை நீக்கிவிடவேண்டும். சுத்தமான தண்ணீரில் இதைக் கழுவி நிழலில் உலர்த்தவேண்டும். பின் இதை உரலில் இடித்து சாறு எடுக்கவேண்டும். தண்ணீர் விடவே கூடாது.

எடுத்தச் சாற்றை ஒரு சுத்தமான சிறு பாத்திரத்தில் சேர்க்கவேண்டும்.

மெல்லிய சுத்தமான துணியை, விளக்குத் திரிக்கு வரும் அளவில் சிறுதுண்டுகளாகக் கத்தரித்து இந்தச் சாற்றில் ஊறவைக்கவேண்டும். சற்று ஊறியதும் இத்துணியை எடுத்து வெயிலில் காயவைக்கவேண்டும்.

தேங்காய் எண்ணெய் வாங்கி அகல்விளக்கில் நிரப்பி, இத்திரியை அதில் இட்டு, விளக்குப் போல் ஏற்ற வேண்டும். ஒரு புதிய மண் சட்டியை வாங்கி அதன் உட்புறத்தைச் சுத்தப்படுத்தி இந்த அகல்விளக்கின் மேல் கவிழ்த்தபடி வைக்க வேண்டும். விளக்கு எரிவதற்குப் போதுமான காற்று வசதி இருக்கவேண்டும்.

விளக்கு எரியும்போது, சட்டியின் உட்பக்கம் கரிபடிய ஆரம்பிக்கும். இப்படி விளக்கு முழுவதும் எரிந்து போதுமான கரி படிந்ததும் சட்டியை மெதுவாக ஆற வைக்கவேண்டும்.

ஒருசுத்தமான கத்தி அல்லது தட்டையான ஸ்பூன்கொண்டு சட்டியிலிருந்து, இக்கரிப்படலத்தைச் சுரண்டி, சேகரிக்க வேண்டும். இப்படி எடுக்கப்பட்ட கரியை சுத்தமான தேங்காய் எண்ணையில் குழைத்துக்கொள்ளவேண்டும். கைக்கு அடக்கமான, சுத்தமான குப்பிகளில் இதை எடுத்து வைத்துக்கொண்டு, தேவையான சமயம் கண்களுக்கு இட்டுக்கொள்ளலாம்.

கண்களுக்குக் குளிர்ச்சியையும், புத்துணர்ச்சியையும் தரக்கூடியது இந்தக் கண்மை.

**மாதுளம்பழக் கண்மை**

கரிசலாங்கண்ணி மை தயாரிப்பது போன்றே இதையும் செய்யவேண்டும். நன்றாகப் பழுத்த மாதுளம்பழம் வாங்கி, அதன் முத்துக்களை இடித்து, அதன் ரசத்தை எடுத்துக் கொண்டு, வெள்ளைத் துணியை அதில் ஊற வைக்க வேண்டும். பின்னர் இதை வெயிலில் உலர்த்தி திரியாக்கி, முன் சொன்னது போல் மையாகத் தயாரிக்க வேண்டும்.

உஷ்ணத்தால் ஏற்படும் கண் பொங்குதல், கண் எரிச்சல், கண்களில் இருந்து நீர் வடிதல், கண் கூச்சம் போன்றவற்றை இது விலக்கும். விழியோர நரம்புகளுக்கு வலுவூட்டும். சுருக்கங்களை நீக்கிப் பொலிவூட்டும்.

**சோற்றுக்கற்றாளை அஞ்சனம்**

சோற்றுக் கற்றாளையின் உட்பகுதிகளைக் கொண்டு மேலே சொன்ன வகையில் சாறெடுத்து, கண் மை தயாரிக்க வேண்டும்.

இந்த அஞ்சனம் நோய் தடுக்கும் எதிர்ப்புச் சக்தியைக் கொண்டது. எனவே கண் சம்பந்தப்பட்ட பிற நோய்களிலிருந்து இது பாதுகாக்கும். தவிர கண்களுக்குக் குளிர்ச்சியைத் தரக்கூடிய அஞ்சனம் இது.

**வேப்பம்பூ கண் மை**

வேப்பம் பூக்களைப் புதிதாகச் சேகரித்து, வெயிலில் இப்பூக்களை நன்றாகக் காய வைக்க வேண்டும்.

திரிக்கு ஏற்ற வகையில் தாயாரிக்கப்பட்ட வெள்ளைத் துணியில் காய்ந்த வேப்பம் பூவை வைத்து சுருட்டி திரிபோலச் செய்து முன்சொன்னதுபோல அகல் விளக்கேற்றி புகையைப் பிடித்து கண் மை தாயரிக்க வேண்டும்.

இது கண்களுக்கு குளுமையைத் தரும். எதிர்ப்புச் சக்தியை உண்டாக்கும். எரிச்சலை நீக்கும்.

இந்தக் கண் மைகளை வீட்டில் தயாரிப்பது சுலபம். அதிக அளவில் தயாரித்து வைப்பதை விட அவ்வப்போது தயாரித்துக்கொள்வது நல்லது. நாள்பட்டால் இவற்றின் பலன் குறையக்கூடும். *



# மனம் விரும்பும் உடல் வேண்டுமா?

நீலாவுக்குத் திருமணம் செய்ய தீவிரமாக மாப்பிள்ளை பார்த்துக் கொண்டிருந்தனர். அவள் பார்க்க அழகு மட்டுமல்ல, புத்திசாலியும் கூட. ஒரு தனியார் நிறுவனத்தில் நல்ல வேலையில் இருக்கிறாள். ஆனாலும், அவளை ஏனோ மாப்பிள்ளை வீட்டாருக்குப் பிடிக்கவில்லை. இது ஏன் என்று நீலாவுக்குத் தெரியும். ஆனால், அதனை அவளால் தனது வீட்டாரிடம் மனம் திறந்து பேச முடியவில்லை.

ஒரு நாள் இது பற்றி தனது அண்ணியிடம் பேசினாள். தனது சிறிய மார்பகமும் திருமணம் தடைபடக் காரணம் என்ற ஆதங்கத்தைக் கூறினாள். பிறகு அவள் அண்ணியின் ஆலோசனைப்படி மார்பக அறுவை சிகிச்சை செய்துகொள்ளச் சீக்கிரமே திருமணம் நிச்சயமானது.

படிப்பை முடித்துவிட்டு, வேலை தேடிக் கொண்டிருந்தால் பிரியா. ஆனால், அவள் பல நேர்முகத் தேர்வில் கலந்து கொண்டும் வேலை கிடைக்கவில்லை. அவள் வேலை தேடியது விளம்பரத் துறையில். அங்கு படிப்போடு ஆளுமையும் அவசியம். நீலாவுக்கு இருந்த அதே பிரச்சினைதான் பிரியா வுக்கும். அவளும் அறுவை சிகிச்சை செய்து கொள்ள வேலைவாய்ப்பு வந்து அவளது வீட்டுக் கதவைத் தட்டியது.

இப்படி உடலின் பல பகுதிகளையும் அழகாக்க முடியும். அதற்கு வழியுண்டு.

இதற்கென பல புதிய வகை தொழில் நுட்பங்கள் பயன்படுத்தப்பட்டு வருகின்றன. முன்பெல்லாம் உடலின் பிறவிக் குறைபாடுகளை அகற்ற முடியாது. ஆனால், அறிவியல் பெரிதும் வளர்ச்சி அடைந்துள்ள இன்றைய சூழ்நிலையில் உடலின் ஒவ்வொரு பகுதியிலும் விருப்பப்படும் மாற்றத்தைக் கொண்டு வருவது எளிது. இதற்கென அழகியல் ''கொஸ்மெடிக்'' அறுவை சிகிச்சை முறைகள் மேற்கொள்ள படுகின்றன. இதன் மூலம் முகம், மூக்கு, காது, கழுத்து, இடுப்பு, மார்பகம் போன்ற பகுதிகளை மனம் விரும்பும்படி மாற்றிக் கொள்ளலாம்.

புகழ் பெற்ற 'பிளாஸ்டிக் சேர்ஜரி' நிபுணர் ஒருவர் கருத்துக் கூறுகையில், ''உடலின் ஏதாவது ஒரு பகுதியை அழகுபடுத்த, உடலிலுள்ள ஏதாவது ஒரு பொருளே பொருத்தப்படுகிறது. இதனை 'பொடி இம்ப்ளாண்ட்'.என்பர். இதற்கென பயன்படுத்தும் பொருளானது உடலுக்கு எந்தவிதத் தீங்கையும் ஏற்படுத்தாது. இதற்காக சிலிகான், டைட்டானியம் மற்றும் பாலி எத்ரன் ஆகியன பல்வேறு வகைகளில் பயன்படுத்தப்படுகின்றன.

மார்பகம், மூக்கு, கன்னத்தில் செய்யப்படுபவை அழகியல் அறுவை சிகிச்சையின் கீழ் வருகின்றன. இது அல்லாது பின் பக்கம், கண் மற்றும் கன்னங்களிலும் கூட மாற்று அறுவை சிகிச்சை செய்யப்படுகிறது. அதிகளவில் பெண்கள் மார்பகம் மற்றும் மூக்கில்தான் இத்தகைய அறுவை சிகிச்சையைச் செய்கின்றார்கள்.

மார்பக மாற்று அறுவை சிகிச்சை என்பது என்ன? ஒரு சில பெண்களுக்கு சிறிய மார்பகம் என்ற கவலை இருக்கும். ஆனால், இதனை குறைபாடு என்று கூறமுடியாது. இந்த குறைபாட்டைப் போக்க முயற்சி செய்ய வேண்டும். பெரும்பாலும் திருமணம் மற்றும் குழந்தைகள் பிறந்த பிறகு மார்பின் அளவில் மாற்றம் வரும். ஒரு சிலருக்கு இந்த மாற்றம் அதிகளவில் ஏற்படலாம். இத்தகைய சூழ்நிலையில் அழகியல் அறுவை சிகிச்சை மூலம் மனம் விரும்பும் வடிவத்தை பெறலாம். இது மட்டுமல்ல ஒரு சிலருக்கு ஒரு மார்பகம் சிறியதாகவும், ஒரு மார்பகம் பெரியதாகவும் இருக்கும். இந்த வித்தியாசம் தெரியாது. இருப்பினும், விருப்பப்பட்டால் இரு மார்பகங்களின் அளவையும் சரிசமமாக மாற்ற முடியும்.

மார்பக மாற்று அறுவை சிகிச்சை செய்ய சிலிகானே கையாளப்படுகிறது. அதி நவீன தொழில் நுட்பத்தால் மார்பக மாற்று அறுவை சிகிச்சையில் பல மாறுதல்கள் வந்துவிட்டன.

மார்பக மாற்று அறுவை சிகிச்சை செய்த பின் தோன்றும் தழும்பு மெல்ல மெல்ல மறைந்தும் விடும்.

அறுவை சிகிச்சைக்குப் பிறகு சருமத்தில் தளர்ச்சி ஏற்படும் காரணத்தால் சில தினங்கள் வரை வலி ஏற்படும். இதனை அகற்ற மருந்து அளிக்கப்படுகிறது.

**மூக்கு அறுவை சிகிச்சை**

மார்பகத்துக்கு அடுத்து மூக்கை அழகாக்கவே அதிகம் அறுவை கிசிச்சை செய்யப்படுகிறது. ஏனெனில், முகத்துக்கு அழகு சேர்ப்பதே மூக்குதான். குண்டான, தடிமனான மற்றும் அழுத்தப்பட்ட மூக்கு ஆளுமையையே அசிங்கப்படுத்திவிடும். மூக்குக்கான அறுவை சிகிச்சையை 'ரைனோப்ளாஸ்டி' என்பர். இந்த அறுவை சிகிச்சை செய்ய 2 முதல் 3 மணி நேரம் வரை ஆகும். இதில் நோயாளிக்கு லோக்கல் அல்லது ஜெனரல் அனஸ்தீசியா, அதாவது மயக்க மருந்து அளித்து அறுவை சிகிச்சை செய்யப்படுகிறது. மூக்கு குணம் அடைய 2 முதல் 3 வாரங்கள் வரை ஆகலாம். இந்த அறுவை சிகிச்சையக்காக நோயாளி மருத்துவமனையில் தங்க வேண்டிய சூழ்நிலை இல்லை. அதோடு இந்த அறுவை சிகிச்சைக்கு சுமார் 20 ஆயிரம் ரூபாய் வரை செலவாகும்.

**உதட்டு அறுவை சிகிச்சை**

பெண்களின் அழகுக்கு அழகு சேர்ப்பது உதடுகள்தான். இத்தகைய சிறப்பு அம்சம் வாய்ந்த உதடுகள் அதிக மெலிதாகவும், அதிக தடிமனாகவும் இருக்கக் கூடாது. 'கொஸ்மெடிக் சேர்ஜரி' மூலம் உதடுகளுக்குச் சரியான வடிவம் அளித்து அழகாக்க முடியும். இதனைச் சாதாரண அறுவை சிகிச்சை என்றுதான் கூறுவர். இந்த அறுவை சிகிச்சை 2 முதல் 3 மணி நேரத்தில் முடிந்து விடும். அதன் பிறகு நோயாளி வீட்டுக்குச் சென்று விடலாம்.

உதடுகள் மிகவும் மெலிதாக இருந்தால், உடலின் வேறு பகுதியில் இருக்கும் சருமத்தை எடுத்து உதடுகளில் வைத்து தடிமனாக்கி விடலாம். இந்த அறுவை சிகிச்சை உள்ளே செய்யப்படுவதால் வெளியே எந்தவித தழும்பும் இருக்காது. இது அல்லாது செயற்கை ஊசி மூலம் உதடுகளுக்குச் சரியான வடிவம் அளிக்கலாம்.

இதேபோல தாடைக்கும் அறுவை சிகிச்சை உண்டு. கொழுப்பைக் குறைத்து உடலைக் கட்டுக்கோப்பாக வைக்க லைபோசக்ஷன் சிகிச்சை செய்யப்படுகிறது. *






# பித்தன் பதில்கள்

**எஸ்.பிரியா,**
**லிந்துலை.**

**கேள்வி:** பித்தரே! உமக்கு சூடு, சொரணை, வெட்கம், ரோசம், மானம் ஏதேனும் உண்டா...?

**பதில்:** திருமணம் செய்ய முன்னர் இருந்ததாக ஒரு நினைப்புண்டு.

**குமரன்,**
**மடுல்சீமை.**

**கேள்வி:** ஒழுங்காக வேலைக்குச் செல்லாமல் அடிக்கடி 'No Pay' எடுப்பவர்கள் குறித்து...!

**பதில்:** வீட்டில் 'ஓவர்டைம்' வேலை செய்கின்றார்களோ என்னவோ...!

**வி.இராகுலன்,**
**வென்னப்புவ.**

**கேள்வி:** காதலி - கடவுள். ஒப்பிடுக பித்தரே...!

**பதில்:** இரண்டுமே நம்பாச் சாதி. கடைசிவரை சோதிப்பார்கள். தெய்வத்தின் பக்தனுக்கும் காதலின் பித்தனுக்கும் சோதனைகள் அதிகம்.

**எம்.அன்ஸீர்,**
**கொழும்பு.**

**கேள்வி:** 'உனக்காக உயிர் கொடுப்பேன்' என்று சபதமிட்ட என் ஆருயிர்த் தோழன், இப்போது என் இல்லறவாழ்வில் வில்லனாக மாற எத்தனிக்கின்றானே...?



**பதில்:** இட்ட சபதத்தை நிறைவேற்ற முயல்கிறான் போலும். உமக்காக 'உயிர்கொடுக்க' எத்தனிக்கிறான் போலும்!

**கே.குலம்,**
**உப்புவெளி.**

**கேள்வி:** காதலி, மனைவி - இவர்களில் யாரைத் திருப்திப்படுத்துவது கஷ்டம்?

**பதில்:** காதலியைப் 'புன்னகை'யால் சமாளிக்கலாம். ஆனால், அவள் மனைவியானதும் சமாளிக்க 'பொன் நகை' அல்லவா தேவைப்படுகின்றது?

**ஆர்.ராகுல்,**
**மன்னார்.**

**கேள்வி:** காதல் - தேர்தல் ஒப்பிடுக!

**பதில்:** தேர்தல் வாக்குறுதி போல காதலும் ஆரம்பத்தில் கிளர்ச்சி ஊட்டுவதாகவே இருக்கும். ஆனால், தேர்வின் பின் இரண்டுமே சலிப்பூட்டி விடும்.



**கோகுலன்,**
**சிலாபம்.**

**கேள்வி:** ஐம்பதிலும் ஆசை வருமா?

**பதில்:** இங்கு பலருக்கு எண்பதிலும் ஆசை வருகின்றதே...!



**எட்மண்ட்,**
**புதூர்.**

**கேள்வி:** காதல் திருமணத்தின் முடிவு எப்படி இருக்கும்?

**பதில்:** கொள்ளும் வரை கொண்டாட்டம்; கொண்டபின் திண்டாட்டம்!

**சயந்தன்,**
**நல்லூர்.**

**கேள்வி:** இன்பமும் துன்பமும் நீடிக்குமா?

**பதில்:** 'சுக துக்கம் சுழல் சக்கரம்!'

**இ.ரமேஷ்,**
**முள்ளியவளை.**

**கேள்வி:** கிணறுவெட்டப் பூதம் கிளம்பியது என்கிறார்களே. அதை எங்கே பார்க்கலாம்?

**பதில்:** இளைஞனே! திருமணம் செய்துபார். அனுபவத்தில் காண்பாய்!

**எம்.அஞ்சலினா,**
**கந்தானை.**

**கேள்வி:** 'உன்னைப்போல் அழகான பெண் உலகத்தில் இல்லை' என்றார் என் காதலர். அதனால் அவரைத் திருமணம் செய்யத் தீர்மானித்து விட்டேன். இது தப்பா?

**பதில்:** கொஞ்சமாவது உண்மை பேசக்கூடிய ஒருவரை நீங்கள் தேர்ந்தெடுத்திருக்கலாமே...!

**கே.டேவிட்,**
**நீர்கொழும்பு.**

**கேள்வி:** பெண்கள் கணக்கில் சூரப்புலிகளா?

**பதில்:** ஆம். வலு கெட்டிக்காரர்கள். தங்கள் வயதை இரண்டால் வகுப்பார்கள். தங்களின் உடையைப் பாதியாகக் குறைப்பார்கள். கணவனின் சம்பளத்தை இரண்டால் பெருக்குவார்கள். தம்மை ஒத்த சிநேகிதிகளின் வயதை மட்டும் எப்போதுமே ஐந்தைக் கூட்டியே சொல்வார்கள். கழித்தலிலும், கூட்டலிலும், பெருக்கலிலும், பிரித்தலிலும் சந்தர்ப்பத்துக்கேற்ற சமயோசிதப் புத்திக்காரர்கள் அவர்கள்.

**சிவா,**
**நீர்வேலி.**

**கேள்வி:** 'ஆவதும் பெண்ணால், அழிவதும் பெண்ணால்' என்கிறார்களே! ஆனால், உண்மையில் ஆவது ஆணால்தானே...?

**பதில்:** ஆவது ஆணால்தான். ஆனால், அந்த ஆணையையும் (ஆட்டிப்) படைப்பதும் பெண்தானே...!

**கார்த்திக்,**
**யாழ்ப்பாணம்.**

**கேள்வி:** 'எய்ட்ஸ்' நோய்க்குத் தமிழ் மருந்து உண்டா...?

**பதில்:** உண்டே. இரண்டாயிரம் ஆண்டுகளுக்கு முன்னர் திருவள்ளுவரே அதைக் கூறிவிட்டாரே. 'ஒருவனுக்கு - ஒருத்தி' என்பதுதான் அந்த மருந்து.

**சி.வினோ,**
**வெள்ளவத்தை.**

**கேள்வி:** 'அகம்பாவம்' பற்றி உங்கள் கருத்து என்ன?

**பதில்:** அதைக் கொண்டிருப்பவர்களின் 'அகம்...பாவம்'!

**பிரவீண்,**
**களுபோவில.**

**கேள்வி:** அரசியல், சினிமா - இரண்டிலும் பிரகாசிக்க என்ன தேவை...?

**பதில்:** நடிப்பு.

**குமரேசன்,**
**வவுனியா.**



**கேள்வி:** 'நாமமது தமிழரெனக் கொண்டிங்கு வாழ்ந்திடுதல் நன்றோ...?' என்று கோபித்துப் பாடிய பாரதி இன்றிருந்தால்...?

**பதில்:** 'நாமங்களையாவது தமிழிலே கொண்டிருங்கள்' - என்று கெஞ்சிப் பாடியிருப்பான்.

**வி.சதா,**
**ஹட்டன்.**

**கேள்வி:** வீட்டில் என் ஆத்தா செய்யும் கொடுமை தாங்கமுடியவில்லையே பித்தரே...!

**பதில்:** இதுதான் ஆற்றாக் கொடுமையோ...!

**பி.வரன்,**
**நாயன்மார்கட்டு.**



**கேள்வி:** 'கண்டது கற்கப் பண்டிதன் ஆவான்' என்கின்றார்கள். கண்டது தின்பவன்...?

**பதில்:** 'வண்டியன்' ஆவான்!

**குணா,**
**கொழும்பு.**

**கேள்வி:** கணவனுக்காக நேரத்தைச் செலவிடும் மனைவியர் உள்ளனரா?



**பதில்:** அதிகம் உள்ளனரே. 'கணவனுக்காக' தொலைக்காட்சித் தொடரைப் பார்ப்பதற்காகவே வீட்டு வேலைகளை ஒதுக்கி வைத்து விட்டு வீட்டுக்கு வீடு மகளிர் கூட்டம் காத்திருக்கின்றதே...!

---

## சொற்சிலம்பம் போட்டி இல. 324

சொற்சிலம்பம் 324 போட்டிக்கான விடைகளை எழுதி அனுப்பி வைக்கவேண்டிய கடைசித்தினம் ஓகஸ்ட் 03 ஆம் திகதி ஆகும். விடைகள், வெற்றி பெற்றவர்களின் பெயர்கள் ஓகஸ்ட் 09 ஆம் திகதி சுடர் ஒளியில் பிரசுரமாகும். சொற்சிலம்பம் போட்டி இல.322 இற்கான விடைகள் அருகே தரப்பட்டுள்ளன.

தபாலட்டையில் ஒட்டப்பட்டு அனுப்பப்படும் விண்ணப்பங்கள் மட்டுமே ஏற்றுக்கொள்ளப்படும். தபாலட்டை கிடைக்காத பட்சத்தில் தபால் அட்டையின் அளவில் ஒரு கடதாசி அட்டையை வெட்டி, அதில் கூப்பனை ஒட்டி அனுப்புங்கள். முதலாவது பரிசாக 250ரூபாவும், இரண்டாவது பரிசாக 150 ரூபாவும், மூன்றாவது பரிசாக 100ரூபாவும் வழங்கப்படும். பலர் விடைகளைச் சரியாக எழுதியிருப்பின் அதிர்ஷ்டக் குலுக்கல்மூலம் பரிசுக்குரியவர்கள் தேர்ந்தெடுக்கப்படுவார்கள்.

அனுப்பவேண்டிய முகவரி:
'சுடர் ஒளி'
85, ஜெயந்த மல்லிமாராச்சி மாவத்தை,
கொழும்பு-14.

## சொற்சிலம்பம் போட்டி இல.324

| | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|
| 1 | | 2 | 3 | | ■ | 4 | 5 |
| | ■ | 6 | | ■ | 7 | | |
| 8 | 9 | | ■ | 10 | | | |
| 11 | | | 12 | | | ■ | |
| | ■ | 13 | | | ■ | 14 | |
| ■ | 15 | | | ■ | 16 | | ■ |
| 17 | | ■ | 18 | | | ■ | 19 |
| 20 | | | ■ | 21 | | | |

## சொற்சிலம்பம் போட்டி இல.322

| | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|
| 1 ஒ | 2 பா | 3 மா | ■ | 4 ச | ந் | 5 த | 6 தி |
| 7 சா | வி | த் | 8 தி | ரி | ■ | 9 க | சை |
| 10 மா | த் | த | றை | ■ | 11 க | ன | ■ |
| ■ | 12 த | ளை | ■ | 13 வ | ர | ம் | 14 பு |
| 15 நி | ல் | ■ | 16 உ | ள | ம் | ■ | ல |
| ம் | ■ | 17 க | ட | ம் | ■ | 18 ஏ | ர் |
| 19 ம | 20 கு | ட | ம் | ■ | 21 மா | ந் | த |
| 22 தி | ரு | ■ | 23 பு | ண | ர் | த | ல் |

## சொற்சிலம்பம் போட்டி இல. 324

### இடமிருந்து வலம்

1. குழந்தைப் பேறு.
4. எந்நேரமும்.
6. மேரு.
7. காவலாக, பாதுகாப்பாக அமைவது.
8. பெண்கள்.
10. விசாலமான/பரந்த.
11. மிடி/வறுமை.
13. விளையா நிலம்.
14. சம்மதச் சொல்.
15. இதுவே இன்ப ஊற்று. இதற்கு அடைக்கும் தாழ் இல்லை.
16. இது ஓயாது.
17. முகத்தில் அதிகம் வரும்.
18. இசையுடன் தொடர்புடையது.
20. பல்லக்கு.
21. பறப்பது.

### மேலிருந்து கீழ்

1. சிறந்த / உயர்ந்த செயற்பாடு.
2. சாமர்த்தியசாலி.
3. ஒன்றை சிக்க வைக்க விரிப்பது.
4. தஞ்சம் / அடைக்கலம்.
5. சிவ நடனம்.
7. (உள்) வீடு / மனம்.
9. நில் /அணி.
10. ஆட்சியில் இருப்பது.
12. ஓர் இந்திய மாநிலம்.
14. உற்பத்தி பெரியளவில் இடம்பெறும் மையம்.
15. மலையிலிருந்து கொட்டுவது.
16. அன்னை.
17. இது வரப் பத்தும் பறந்திடும்.
19. இத்தாலியின் தலைநகரம்.

## சொற்சிலம்பம் போட்டி இல. 322

1. எம்.ஏ.அத்தாஸ், 'ரஹ்மத் மன்ஸில்' 141/1, குமாரதுங்க மாவத்த, மாத்தறை.
2. திருமதி.சந்திரா ரவீந்திரன் 'திருவேரகம்', 199/57, தும்புறுகிரிய வீதி, ஹட்டன்.
3. ஏ.எம்.அல் - அக்தர், 282, ஓடாவியார் வீதி, ஏறாவூர் - 02.

### பாராட்டுப் பெறுவோர்

1. அ.ஷிரோமி லக்ஷாந்தி, மட்டக்களப்பு.
2. நெல்சன் ஜெபத்துறை, பண்டாரவளை.
3. எஸ்.என்.மணி, நுவரெலியா.
4. ஜே.எச்.பாத்திமா முஹுசாஸ், புத்தளம்.
5. எம்.என்.ரிஸ்னியா, மாவனல்லை.
6. நஸ்லான் ஹரிஸ், பேருவளை.
7. இ.சுதர்சினி, செங்கலடி.
8. நா.சிவலிங்கம், கல்முனை.
9. ஏ.பாத்தும்மா, கடுகண்ணாவ.
10. திருமதி,க.கமலகாந்தன், முரசுமோட்டை.
11. ச.சுரேந்தினி, தெகிவளை.
12. சி.பிரணவகுலன், திருகோணமலை.
13. பா.பொன்நிலவன், கிளிநொச்சி.
14. ச.பாலசூரியன், வவுனியா.
15. ஆர். குழந்தைவேலு, திருகோணமலை.

# பே(ா)ரவலம்!

இடப்பெயர்வு என்பது ஈழத் தமிழர்களுக்கு எழுதி வைக்கப்பட்ட தலைவிதியாகி விட்டது. இன்று நேற்றல்ல, சுமார் இரண்டு தசாப்தங்களுக்கு முன்பிருந்தே இடப்பெயர்வுகளாலும் புலம்பெயர்வுகளாலும் தமிழர்கள் அனுபவித்த - அனுபவித்து வருகின்ற - இன்னல்கள் கொஞ்ச நஞ்சமல்ல. இன்னும் விளக்கமாகச் சொல்வதென்றால் இடப்பெயர்வோடு நகமும் சதையும் போலத் தொடர்பு பட்டிருக்கிறார்கள் ஈழத்தமிழர்கள்.



யாழ்ப்பாணத்தில் - வலிகாமம் வடக்கில் காங்கேசன் துறை, பலாலி போன்ற கேந்திரப் பிரதேசங்கள் உட்பட பல ஊர்களை விட்டு 1990 ஆம் ஆண்டில் இடம்பெயர்ந்து முடை முடிச்சுக் களுடன் வெளியேறிய மக்கள் இன்றைக்கும் கூட தமது சொந்த மண்ணையும் வீட்டையும் பார்க்க முடியாமல் அவல வாழ்க்கை வாழ்ந்து கொண்டிருக்கின்றார்கள்.

1995 ஆம் ஆண்டு ஒக்ரோபர் மாதம் யாழ்.குடா நாட்டில் ஐந்து லட்சம் மக்கள் ஒரே நாளில், ஒரு சிறிய பாலத்தின் ஊடாக இடிபட்டு நசியுண்டு இடம்பெயர்ந்தமையை அந்த மக்கள் மாத்திரமின்றி ஒட்டுமொத்த தமி ழினமும் இலகுவில் மறந்துவிட முடியாது.

1996 ஆம் ஆண்டின் நடுப்பகுதியுடன் யுத்தம் வன்னியில் மையம் கொள்ளத் தொடங்கிய போது வன்னி மக்களைப் படாதபாடு படுத்தியது இந்த இடப்பெயர்வு. அரசின் பொருளாதாரத் தடை, மருந்துத் தடை, எரிபொருள் தடை என்பவற்றால் நலிவடைந்து போய் - ஓலைக் குடிசைகளுக்குள் ஒரு வேளை சோற்றுக்கே அல்லாடிக் கொண்டிருந்த வன்னி மக்களை அரச படைகளின் பீரங்கிக் குண்டுகளும் ஆகாய விமானங்களும் ஓட ஓட விரட்டின.

கொட்டும் மழைக்கு மத்தியிலும் கொளுத்தியெறிந்த வெய்யிலுக்கு இடையேயும் சிக்கி, அடிப்படை வசதிகள் எவையுமின்றி அல்லற்பட்டுக் கொண்டு, வீதி ஓரங்களிலும் மர நிழல்களிலும் பிழைப்பு நடத்திய வன்னி மக்களை 1998, 99 ஆம் ஆண்டு காலப் பகுதியில் மலேரியா, டெங்கு போன்ற தொற்று நோய்களும் உருக்குலைத்தன. பள்ளிகளும் கோயில்களும் அகதி முகாம்களாக மாறத் தொடங்க, குழந்தைகளின் கல்வியும் பாழாய்ப்போனது. ஒரே குடும்பங்கள் ஒன்றுக்கு மேற்பட்ட தடவைகள் திரும்பத் திரும்ப இடம்பெயர்ந்த கொடூரங்களும் தாராளமாக நடந்தேறின.

இப்படியெல்லாம் அல்லாடிய மக்கள் கடந்த 2002 ஆம் ஆண்டின் சமாதான ஒப்பந்தத்துடன், போரின் வெம்மை தணிந்து சற்று ஆசுவாசப்பட்டுக்கொண்டார்கள். அந்த நிம்மதிப் பெருமூச்சுடன் - கடந்த கால இடம்பெயர்வுகளால் இழந்தவைகளை மெல்ல மெல்ல மீளக் கட்டியெழும்பிக் கொண்டிருந்த மக்களின் தலையில் மீண்டும் போர் அரக்கனின் சவாரி தொடங்கியிருக்கின்றது. திரும்பவும் பழையபடி கையில் அகப்பட்ட தட்டுமுட்டுச் சாமான்களையும் எடுத்துக்கொண்டு ஊன் உறக்கம் இன்றி நாடோடிகளாக அலையும் இக்கட்டு வன்னி மக்களுக்கு ஏற்பட்டிருக்கின்றது.

வவுனியா மன்னார் மாவட்டங்களின் எல்லையோரக் கிராமங்களைச் சேர்ந்த மக்கள் கடந்த சில தினங்களாக, கிளிநொச்சி நோக்கி தமது பயணத்தை தொடங்கியிருக்கின்றார்கள்.

கடந்த மாதம் மடுத்தேவாலயப் பகுதி நோக்கி இராணுவத்தினர் முன்னேறிய போது, மடு உதவி அரச அதிபர் பிரிவைச் சேர்ந்த அனைத்து மக்களுமே இடம்பெயர்ந்தனர். மாந்தை மேற்கு பிரிவில் சுமார் 75 வீதத்துக்கு மேற்பட்ட மக்கள் அகதிகளாகினர். எல்லாமாகச் சேர்த்து சுமார் 25 ஆயிரத்துக்கும் அதிகமானோர், வெள்ளாங்குளம், தேவன்பிட்டி போன்ற பகுதிகளில் தஞ்சம் புகுந்தனர்.

தென்னோலைகளாலும், தொண்டர் அமைப்புகள் கொடுத்த தரப்பாழ்களாலும் வேயப்பட்ட சிறு குடிசைகளில் வாழ்ந்து கொண்டிருந்த மக்களுக்கு இயற்கை கூட வஞ்சகம் செய்தது. அதாவது கடந்த மாதத்தின் பிற்பகுதியில், அகதிகள் தஞ்சம் அடைந்திருந்த பகுதிகளில் கிணறுகள், குளங்கள் வத்திப் போனதால் குடி தண்ணீருக்கும் பஞ்சம் ஏற்பட்டது. தண்ணீருக்குக் கூட தட்டுப்பாடு ஏற்பட்டதால் மக்கள் இடறுப்பட்டுக் கொண்டிருந்த் வேளையில்தான், இப்போது மீண்டும் இடம் பெயரவேண்டிய துர்ப்பாக்கிய நிலைமை அவர்களுக்கு ஏற்பட்டிருக்கிறது. குறிப்பாக கடந்த ஒரு வாரத்தில் மட்டும் ஒரு லட்சத்துக்கும் மேற்பட்டவார்கள் அகதிகளாகியிருக்கின்றனர் என்று புள்ளிவிவரங்கள் தெரிவிக்கின்றன.

மன்னாரில் நடந்த சண்டைகளின் போது இராணுவத்தினர் தமது பின்னரங்குகளில் இருந்துகொண்டு பொதுமக்களின் குடியிருப்புப் பகுதிகள் நோக்கி பல்குழல் மற்றும் ஆட்லறி ஏவுகணை தாக்குதல்களை நடத்துவதால் பண்டிவிரிச்சான், சின்னப்பண்டிவிரிச்சான், மடு, தட்சணாமருதமடு, பாலம்பிட்டி, பெரியமடு, அடம்பன், பன்னமடு, விடத்தல் தீவு, இலுப்பக்கடவை போன்ற இடங்களைச் சேர்ந்த மக்களே அதிகளவில் பாதிக்கப்பட்டு இடம்பெயர்கின்றார்கள். இவர்கள் ஏற்கனவேயும் பலதடவைகள் இடம்பெயர்ந்து துன்பப்பட்டுக்கொண்டிருந்த வேளையிலேயே மீண்டும் இடம்பெயரும் நிலைக்கு தள்ளப்பட்டிருக்கின்றனர். மன்னாரில் இருந்து இடம்பெயரும் மக்கள் கிளிநொச்சி, ஆனைவிழுந்தான், அக்கராயன், ஜெயபுரம் மற்றும் அதனை அண்டிய பகுதிகளுக்குச் செல்கின்றனர்.

குறிப்பிட்ட சில குடும்பங்கள் தமது உறவினர்கள், நண்பர்களின் வீடுகளில் தங்கியிருக்கின்றன. ஏனைய அனைவரும் பாடசாலைகளிலும் பொதுஇடங்களிலும் தஞ்சம் புகுந்துள்ளனர். வீதியோரங்களிலும் காடுகளிலும் மரங்களுக்குக் கீழேயும் கணிசமான குடும்பங்கள் பொழுதைக் கழிக்கின்றன. இந்த மக்களுக்கான தற்காலிக குடிமனைகள், மலசலகூட வசதிகள், குடிதண்ணீர், மருத்துவ வசதிகள், சுகாதார சேவைகள் என்பவற்றை ஏற்படுத்திக் கொடுக்க முடியாமல் தொண்டர் அமைப்புகள் திண்டாடிக்கொண்டிருக்கின்றன.

குறிப்பாக மக்களுக்கான தங்குமிட வசதிகள், உணவு மற்றும் சிறுவர்கள், முதியோர்கள், கர்ப்பிணித் தாய்மார்களுக்கான போசாக்கு உட்பட அத்தியாவசிய சேவைகள் அங்கு சாத்தியப்பாடற்றவையாகி விட்டிருக்கின்றன.

அரச சார்பற்ற நிறுவனங்கள் சில வன்னியில் தொண்டுப்பணிகளைச் செய்து வந்தலும் கூட அரசின் பொருளாதாரத் தடைகள் என்ற முட்டுக்கட்டை அவர்களது பணிகளையும் முடக்கியிருக்கின்றது. ஓமந்தைச் சாவடி ஊடாக சாதாரண பொதுமக்கள் மாத்திரமல்லாமல், வெளிநாட்டு தொண்டர் அமைப்புகளும் கூட உதவிப் பொருட்களைக் கொண்டு செல்லமுடியாமல் திண்டாடுகின்றனர்.

தமிழர் புனர்வாழ்வுக் கழகம் மற்றும் உள்ளூர் அமைப்புகள் தம்மாலான உதவிகளை மக்களுக்கு வழங்குகின்றன.

தமிழர் புனர்வாழ்வுக்கழகம் தனது நூற்றுக் கணக்கான பணியாளர்களையும் வாகனங்களையும் இடம்பெயர்ந்து கொண்டிருக்கும் மக்களுக்கான உதவிப்பணிகளில் ஈடுபடுத்தியிருக்கிறது. இந்த மக்களுககான அடிப்படைத் தேவைகளை நிறைவு செய்வதற்காக, உடனடியாக உதவிகளை வழங்குமாறு புலம்பெயர்ந்த தமிழ் மக்களிடம் அவசர வேண்டுகோள் ஒன்றையும் விடுத்திருக்கின்றது.

இனிவரும் நாட்களில் வடபோர் அரங்கில் யுத்தம் எப்படியான மாற்றங்களையும், விஸ்வரூபங்களையும் எடுக்கும் என்று எவராலும் கூற முடியாது. இந்த நிலையில் இடம்பெயரும் மக்களின் எண்ணிக்கை மேலும் பன்மடங்காவதற்குக் கூட சாத்தியப்பாடுகள் இருக்கின்றன.

பெரும்பாலும் அடுத்த மாதமளவில் மாரிகாலம் ஆரம்பித்துவிடும். பெய்யப்போகும் மழையும் அதனால் ஏற்படக்கூடிய வெள்ளப்பெருக்கும் இடம்பெயர்ந்த மக்களை மேலும் மோசமாகப் பாதிக்கக்கூடிய ஏது நிலைகளும் இல்லாமலில்லை.

எனவே மழை காலத்துக்கு முன்னர் வன்னி மக்களுக்கு ஏதேனும் வசதிகளை ஏற்படுத்திக் கொடுப்பதற்கும் அவர்களின் அடிப்படைத் தேவைகளை நிறைவு செய்வதற்கும் தொண்டர் அமைப்புகள் அவசர நடவடிக்கைகளை எடுக்கவேண்டும் என்பதே அனைவரதும் எதிர்பார்ப்பு.

இந்த வாரத்தில் கொழும்பில் நடக்கப்போகும் சார்க் மாநாட்டுக்காக வருகின்ற வெளிநாட்டுத் தலைவர்கள் மற்றும் பிரமுகர்கள், ஊடகவியலாளர்கள் போன்றோருக்கும் வன்னியில் இடம்பெயர்ந்த - இடம்பெயர்ந்து கொண்டிருக்கின்ற - மக்கள் எதிர்நோக்கும் பிரச்சினைகள் மற்றும் அங்குள்ள அவலங்களை தெரியப்படுத்துவதற்கு தமிழ் அரசியல் வாதிகள் மற்றும் சம்பந்தப்பட்ட தரப்புகள் கடும் முயற்சி எடுக்க வேண்டிய தேவையும் உள்ளது.

**அதிசயன்**

'சார்க்' மாநாட்டுக்கு வரும் வெளிநாட்டவர்களுக்கு வன்னி உட்பட நாட்டின் எந்தப் பகுதிகளிலும் நடக்கின்ற அவலங்கள் தெரிந்துவிடக்கூடாது என்பதில் நம்நாட்டு அரசுத் தரப்பினர் மிகுந்த கரிசனையோடு இருக்கின்றார்கள்.

ஆனாலும் அரசின் ஒளிப்பு மறைப்புக்களையும் மீறி வன்னி மக்களின் துயரங்களைப் பிரசாரப்படுத்துவதில் தமிழ்த் தரப்பு வெற்றியடைந்தால்தான் அந்த மக்களுக்கு குறைந்தளவு உதவிகளாவது கிடைக்கும் என எதிர்பார்க்க முடியும். ✱


இலங்கை ஜனநாயக குடியரசின் வைத்தியச் சபையின் அனுமதி பெற்றதும், 70க்கு மேற்பட்ட நாடுகளில் அங்கிகரிக்கப்பட்டதுமான கிழக்கு ஐரோப்பாவின்



சர்வதேசக் கல்வி பெற்று

வைத்தியர் ஆகுங்கள்.

- கடந்த 17 வருடங்களுள் பட்டம்பெற்ற வைத்தியர்கள் பிரதான வைத்தியசாலைகளில் சேவை புரிகிறார்கள்.
- பட்டம்பெற்ற வைத்தியர்களுக்கு EPRM / ACT 16 பரீட்சை ஒரு வருடத்திலுள் பெற்றுக் கொடுகக பட்டுள்ளது.




விசா படிவம் பூரணப்படுத்துதல்.
தூதுவராலயங்களுக்கு செல்லுதல்.
வங்கிகளில் பணம் காட்டுதல்.
சொத்துக்களை காட்டுதல்.
தேவையில்லை.

VISA 100%

உத்தரவாதமளிக்கப்படுகிறது:

கடந்த வாரத்தில் விமானமேறிய முதலாவது மாணவர் குழு




எமது நிறுவனத்தினால் கடந்த 10வருடங்களில் வெளியே அனுப்பட்ட மாணவர்களில் கடந்த இரண்டு வருடங்களில் அனுப்பியவர்களின் பெயர்பட்டியலையும் தொலைபேசி இலக்கங்களையும் எங்களிடம் பார்வையிடலாம்

- விண்ணப்பிக்கத் தேவையான ஆகக்குறைந்த தகமை க.பொ.த. (சா/த) சித்தி
- 2008 க.பொ.த ( உ/த ) தோற்றியவர்கள் அதிபரின் கடிதம் சமர்ப்பித்து விண்ணப்பிக்கலாம்.
- உலக சுகாதார ஸ்தாபனத்தினால் அங்கிகரிக்கப்பட்ட விருப்பமான பல்கலைக்கழகங்களுக்கிடையே மாறலாம்.

கணனிப் பொறியியல்/ பொருளியல் / கணக்கியல் / முகாமைத்துவம் / கட்டிடக்கலை/ இலத்திரனியல் / மோட்டார் தொழில்நுட்பம் / விவசாயம் மற்றும் விசேட பாடநெறிகள்

அனுமதிக்கு தமிழிலும் ஆங்கிலத்திலும் தொடர்பு கொள்ளவும் 077 3017883

விண்ணப்பம் ஏற்கும் இறுதித் தினம் 2008 ஆகஸ்ட் 11ம் திகதியாகும் .

PATHE ACADEMY

PEOPLE'S ACADEMY FOR TERTIARY AND HIGHER EDUCATION

Head Office
17, School Lane, Colombo 03.
Tel:5377753, 2502012, 2591371

Overseas Student Placement Department
111-1/2, Maya Avenue, Colombo 6.
Tel: 0112586418

www.patheacademy.org

# விழிகள் சுவாசிக்கும் இரவுகள்!

## கவிதை தொகுப்பு



அப்துல் மஜீத் முகம்மது ஜாபீர் சம்மாந்துறை அறபா வித்தியாலயத்தில் ஆசிரியராகப் பணிபுரிந்து வருகிறார். பத்திரிகைகளிலும், இலக்கிய சஞ்சிகைகளிலும், வானொலி, தொலைக்காட்சி இலக்கிய நிகழ்வுகளிலும் இடம்பெற்ற தமது கவிதைகளைத் தொகுத்து 'விழிகள் சுவாசிக்கும் இரவுகள்' எனும் தலைப்பில் நூல் வடிவமைத்திருக்கிறார். புரவலர் புத்தகப் பூங்காவின் ஒன்பதாவது மலராக இக்கவிதை தொகுப்பு மலர்ந்துள்ளது.

இந்நூலாசிரியர் ஜாபீரின் இலக்கிய காலடிப் பதிவு 1993 ஆம் ஆண்டில் இடம் பெறுகின்றது. இலங்கையில் வெளிவருகின்ற 'மித்திரன்' வாரமலரில் 'வேஷங்கள்' என்ற தலைப்பிலான கவிதை முதன் முதலாக அச்சுப்பதிவானது.

அதன் பின்னர் கவிதைப் பயணம் தொடர்கிறது. இலங்கையில் வெளிவருகின்ற வார, மாத சஞ்சிகைகளில் இளங்கவிஞரான ஜாபீரின் கவிதை ஆக்கங்கள் பிரசுரமாகின.

2003 ஆம் ஆண்டில் தேசிய இளைஞர் சேவைகள் மன்றம் அகில இலங்கை ரீதியில் நடத்திய இஸ்லாமிய கவிதைப் போட்டியில் இவர் கலந்துகொண்டார். முதலாவது பரிசையும் தட்டிக்கொண்டார்.

'சோகமான இரவுகள்' எனும் தலைப்பிலான அக்கவிதை ஈர்க்கும் புனிதமான வரிகளைக் கொண்டது. அர்த்த புஷ்டி மிக்க ஆழமான வரிகள் அவை.

*''இரவு சோகத்தை மட்டும்*
*கொண்டதல்ல!*
*லைலத்துல் கதிரில்தானே*
*தூதரும் குர்ஆனை சப்தமிட்டார்கள்*
*என்னுடைய இரவோ*
*சோகத்தை அகழ்ந்தெடுக்கிறது.*
*இரவே!*
*உன்னுடைய கண்ணீரை*
*வெளியிட மொழியொன்று*
*தேடினேன்.*
*உணர்வின் மொழியான*
*கவிதையே!*
*என் உள்ளுணர்வின்*
*சூரியனானது!!''*



சமகால மனித வாழ்வின் அவலங்களையும் அதே நேரம் அதன் வெற்றிகளையும் விதந்துரைக்க வேண்டிய தன்மை இன்றைய புதுக்கவிதையின் மரபாகி வருகின்றது. இவர் பேனாவும் மானுடம் பாடுவதுடன் அதன் வேதனைகளையும் சொல்லி அதன் சொல்லொணா சோதனைகளையும் தருகின்றது. நிகழ்கால வாழ்வியலின் கூறுகளை இரத்தம் கசிவு கொண்ட தரிசனமாகக் கண்முன் நிறுத்துகின்றார் இவர்.

*''போரின் சின்னங்களை*
*என் குடும்பத்தின்*
*நகர்வில் காணலாம்.*
*சந்தைக்குச் சென்ற*
*கருவறைச் சகோதரனின்*





*இரத்தம்*
*உம்மாவின்*
*கண்களில் வடிந்தது.''*

உலகை - மனித வாழ்வியலை - கண்முன் நிறுத்துகின்றபோது எழுத்தே பிரம்மாவாகி விடுகின்றது. சிருஷ்டிகர்த்தா பிரம்மன் ஆகிவிடுகின்றான்.

*''ஒரு பேனாவின்*
*குனிவில்*
*மனிதம் சுமக்கப்படுகிறது.''*

ஜாபீரின் கவிதை வரிகளில் கவித்துவமும் கருப்பொருளின் உள்ளடக்கத்தில் முதிர்ச்சியும் துளிர்விடுகின்றன.

''கவிதை உள்ளத்தை பயிர் செய்ய வேண்டும் அது உள்ளத்தின் விளைநிலமாதல் வேண்டும்.''

- என்பதில் பற்றுமிக்கவர் கவிஞர் ஜாபீர். கவிதையின் உள்ளம் கருப்பொருளிலும் அதன் ஆடைகளான சொற்களின் அழகிய சேர்மானங்களிலும் தங்கியுள்ளது என்ற ஜாபீரின் உள்ளக்கோட்பாடானது அவருடைய ஆக்கங்கள் அனைத்திலும் கோலோச்சுகின்றது என்ற ரசநயம் மிகையானதல்ல.

சிரேஷ்ட நாடகக் கலைஞரான கலாபூஷணம் கலைச்செல்வன் இந்தக் கவிதைகளை விழிகளால் சுவாசித்து நயந்து வியந்து அணிந்துரையொன்று வழங்கியிருக்கிறார்.

சில மினிக் கவிதைகளிலும், மின்மினிக் கவிதைகளிலும் கூட கவிஞர் ஜாபீரின் வீச்சையும் வீரியத்தையும் காணமுடிகிறது. அத்தகையதொரு கவிஞருக்கு வித்துக்களை விருட்சங்களாக்கும் புரவலர் புத்தகப் பூங்கா புதிய முகமும் முகவரியும் வழங்கிருக்கிறது என புகழ்மாலை சூடியுள்ளார் கலைச் செல்வன்.

ஆசிரியர் :- ஏ.எம்.எம். ஜாபீர் - 'விழிகள் சுவாசிக்கும் இரவுகள்', சர்மிலா மன்ஷில், 139 /1, பிரதேச சபை வீதி, ஈஸா லேன், சம்மாந்துறை 01 எனும் முகவரியுடன் தொடர்புகொண்டு நூலினைப் பெறலாம். ✱

**கே.வி.**





## கோஷமிடும் ஒரு புரட்சிக்காரர்

''நல்ல நல்ல சமாச்சாரங்களை கதைத்துக் கொண்டிருந்தால் தனிச்சுகம் தான் கண்டியளே. இந்தக் கொஞ்ச நேரத்துக்குள்ளே உலக விவகாரங்களை பேசிப்போட்டோம். குடும்பச் சமாச்சாரங்களிலே ஆரம்பிச்சு அமெரிக்கா, இந்தியா அணுவொப்பந்தத்திற்கு ஓடிப்போய், மன்மோகன் சிங் அரசு தப்பிப் பிழைப்பு விடயம், அதுமட்டுமே? ஆசியா கிரிக்கெட் கோப்பைக்காக இந்தியாவும் இலங்கையும் அடிப்பட்ட விவகாரத்திற்குள்ளே நுழைஞ்சு, எங்கள்ண்ட இலக்கியக்காரர் சினிமாக்காரர்களையும் ஒரு புடி புடிச்சி எண்ட தம்புரானே மாவலி நதியாட்டம் எங்களிண்ட பேச்சு எங்கெல்லாமோ தலைதெறிச்சு ஓடிப் போட்டு வந்துட்டுது கண்டியலே. என்றாலும் பாருங்கோ எங்கள்ண்ட சனம் இதை அறிந்து கொண்டதாகத் தெரியல்லியே. எப்பப் பார்த்தாலும் கண்டறியாத ஒரு ரிவிலே விழுந்து கிடக்கினம். இந்த ரிவிதான் எங்கண்ட சனத்தைக் குட்டிச் சுவராக்கிப் போட்டுது. உதுவிருந்து எங்கள்ண்ட சனத்தை மீட்டெடுக்க வேண்டும். இந்தப் பீடையை ஒரேயடியா தட்டிக் கழிச்சுத் தலை முழுக முடியாதுதான். படிப்படியாகவென்றாலும் ச[illegible]த்தைச் சாதிக்கவேணும்.''

''என்னென்று, சாதிக்க[illegible] போ[illegible]யல்?''

''கஷ்டம்தான்.

முதல்லே குடும்ப லெவல்லே துடங்கி வைக்கவேணும்.''

''அடிசக்கை! நல்ல பிளான் வைச்சிருக்கியள். அவிழ்த்து விடுங்கோவன்.''

''ஹஹ் ஹஹ் ஹா! என்ன நினைச்சியள்? எண்ட சின்னவங்கள் எப்பப் பார்த்தாலும் கார்ட்டூன், கிரிக்கெட் மாட்ச் என்று ஆர்ப்பரிக்க... மனுஷி டெலிடிராமா, சமையல் குறிப்பு, தையல், பெண்ணியம் என்று மூழ்கிக்கிடக்க... வரலாறு படிக்கிற மூத்தவன் அரசியல், இலக்கியம், பட்டி மன்றம், பொதுவிவகாரம், கம்பியூட்டர் என்று மினக்கெட்டுக் கொண்டிருப்பதற்கு ஒரு முற்றுப்புள்ளி போடவேண்டும்.''

''எண்ட தம்புரானே! ஏன் அப்புடிச் சொல்லுறியள்? இத்துணை சமாச் சாரங் களை ஒரு குருவாயிருந்து சொல்லித்தார ரிவியை முடக்கிப் போடவோ சொல்லுறீங்கள்? நாலு எழுத்துப் படியாத நீங்களும் சமையற் கட்டிலிருந்து வெள்ளை மாளிகை வரையான சமாச்சாரங்களை ரிவி பார்த்தல்லோ தெரிஞ்சு கொண்டனீங்கள்? பிறகேன் மோட்டுக்கதை கதைக்கிறியள்?''

''மெய்யே! நான் மோட்டுத்தனமாவே கதைச்சுப்போட்டேன்?

''இல்லே ரொம்ப புத்திசாலித்தனமாத்தான் கதைக்கிறியள். ஆரிட்டச் சொல்லி அழறது எண்டு தெரியல்ல...!'' ✱

## கலையே! என் வாழ்க்கையின் நிலை மாற்றினாய்....

''மோனே! நீ எழுத்தாளன்தான். நல்ல மனம் படைச்ச படைப்பாளி. சமூகத்திலுள்ள பிரச்சினைகளைக் கண்டு போட்டு கண்கலங்குறது ஒன்னும் புதினமான சமாச்சாரம் இல்லே. உதுக்காகத் தெருமுனையிலே நின்று கொண்டு நொண்டி, நொண்டி போற ஒரு சொறி நாய்க்காக சும்மா விசும்பிக் கொண்டி ருக்கிறது நல்லா இல்லே''

''விசர்க் கதை கதையாதீங்கோ. நானொன்றும் அந்த நொண்டி நாய்க்காக விசும்பிக் கொண்டிருக்ககேயில்லே''

''பின்னே?''

''எண்ட கலை உணர்ச்சி இல்லாத மனுஷியை நினைச்சுத்தான் குமுறிக் கொண்டிருக்கிறன்.''

''மெய்யே?''

''எண்ட மனுஷிக்குக் கலையுணர்ச்சி எண்டது துண்டா கிடையாது. கவிதைப் போட்டி எண்டு பரிசை தட்டிக்கொண்டன். அவவிட்ட ஆசையோடு கொண்டு போய் காட்டினனான். கொஞ்சம் கூட பொருட்படுத்தாமல் புண்ணுலே மொய்ச்சுக்கிடக்கிற ஈயைப்போல கோலங்கள் மெகா சீரியலிலே விழுந்துகிடக்கிறாள். சினிமா, டெலிடிராமா உதுகள்தானே அவவிண்ட சொர்க்கம்.''

''கலையுணர்ச்சி இல்லாதவள் எண்டு புலம்புனாய். பார்த்தால் மனுஷி நல்ல கலையுணர்ச்சி கொண்டவளாக இருக்கிறாள். சினிமா, டெலிடிராம வெல்லாம் உயர்ந்த கலைகளடா மோனே!''

''உம் கண்டறியாத கலைகள். நாடகம் முடிஞ்சுதான் என்னை முழுசிப் பார்த்தவள். பரிசுத்தொகை நூறு ரூபாவைப் பார்த்துப் போட்டு இதுக்கு நூறு கிராம் கறுவாடென்றாலும் வாங்க ஏலுமே என்று கேட்டுப் போட்டு 'குபுகுபு' வென்று சிரிச்சவள். எனக்கு நாடி கழன்று போட்டுது''

''அடக்கடவுளே!'' ✱

### காங்கிரஸ்...

(03 ஆம் பக்கத் தொடர்ச்சி)

எழுந்தது. இவர் மாக்ஸிஸ்ட் கம்யூனிஸ்ட் கட்சியை சேர்ந்தவர். இவரது கட்சி அரசுக்கு எதிரியாகி விட்டதால் இவர் பதவிவிலக வேண்டுமென கட்சி கோரியது.

ஆனால் ''சபாநாயகரான பின் எனக்குக் கட்சி பேதமில்லை. இது அரசியல் சாசனப் பதவி எனவே நான் பதவி விலகமுடியாது'' என அவர் கூறிவிட்டார். அவர் சபாநாயகராக இருக்கும் வரை - மேற்படி நாடாளுமன்ற வாக்கெடுப்பின் எண்ணிக்கை முடிவு சரிசமாக அமைந்த நிலைமையைத் தவிர ஏனைய சந்தர்ப்பங்களில் - அவர் வாக்களிக்க முடியாது. அவர் பதவி விலகி இருந்திருந்தால் எதிரணிக்கு இன்னொரு வாக்குக் கிடைத்திருக்கும். எனினும் கட்சியின் உத்தரவுக்குக் கட்டுப்பட்டு இவர் சபாநாயகர் பதவியை இராஜினாமாச் செய்ய மறுத்து விட்டார். நம்பிக்கை வாக்கெடுப்பு முடிந்த பின்னாவது அவர் சபாநாயகர் பதவியை விட்டு விலகுவார் என கட்சி எதிர்பார்த்ததாம். ஆனால், அப்போதும் அவர் அதை செய்யவில்லை.

அதனால், அவரைக் கட்சிலிருந்து விலக்கி விட்டதாக கட்சியின் செயற்குழு கடந்த புதனன்று அறிவித்திருக்கின்றது.

மற்றொரு சுவாரஸ்யமான விடயம் பாரதீய ஜனதாத் தரப்பில் வைத்தியசாலையில் அதிதீவிர சிசிச்சைப் பிரிவில் இருந்த எம்.பிக்கள் கூட விசேட விமானம் மூலம் டெல்லிக்கு தருவிக்கப்பட்டு வாக்களிக்க நாடாளுமன்றத்திற்குக் கூட்டி வரப்பட்டனர். எனினும் கடைசியில் அந்த வாக்கெடுப்பில் அக்கட்சிக்குத் தோல்வியே கிடைத்தது.

இது போல கொலைக்குற்றச்சாட்டின் பேரில் விளக்கமறியலில் இருக்கும் ஓரிரு எம்.பிக்களும் இந்த வாக்கெடுப்பில் பங்குபற்றவதற்காக சிறையிலிருந்து நாடாளுமன்றத்துக்கு அழைத்து வரப்பட்டிருந்தனர்.

இதேசமயம் இந்த நம்பிக்கை வாக்கெடுப்பில் அரசுத் தரப்புக்கு ஆதரவாக வாக்களிப்பதற்காக பாரதீய ஜனதாக் கட்சி எம்.பிக்களுக்கு கோடிக் கணக்கில் ரூபா லஞ்சம் கொடுக்கப்பட்டமையைத் தான் இரகசியமாக வீடியோ கமராவில் பிடித்திருப்பதாகக் கூறும் 'சி.என்.என்.- ஐ. பி. என்' என்ற தனியார் தொலைக்காட்சிச் சேவை அந்த வீடியோப் பிரதியை சபாநாயகரிடம் ஒப்படைக்கப் போவதாகவும் தெரிவித்துள்ளது.

எம்.பிக்களிடம் பேரம் பேசும் ஒட்டுமொத்த சம்பவமும் அந்த வீடியோவில் உள்ளது என்கிறது அந்த நிறுவனம்.

அடுத்த தேர்தலில் நிச்சயமாக வெற்றி பெறும் எனப் பலராலும் எதிர்பார்க்கப்படும் பாரதீய ஜனதாக் கட்சி அதற்கு முன் பல படிகளைக் கடந்து, பல பாடங்களைக் கற்கவேண்டும் என்பதை இவ்விவாதம் அக்கட்சிக்கு எடுத்துக் காட்டியுள்ளது.

இந்தப் பாடத்தை அத்வானியும் கட்சியினரும் வேறு யாரிடமும் சென்று கற்கவேண்டியதில்லை. இந்திய அரசியலின் பிதாமகர் பீஷ்மர் என்று அழைக்கப்படும் - தமது கட்சியின் மூத்த தலைவர் - வாஜ்பாயிடம் கற்றாலே போதுமாகும். ✱


**NEW CLEANING EST. ( NCE ) கம்பனிக்கு**

**DUBAI, ABU DHABI, SHAJAH வில்**

**10** வருடங்கள் அனுபவம் பெற்ற **FAIZ TRAVEL AGENT**

மூலம் இதோ உங்களுக்கு வெளிநாடு செல்ல ஓர் அரிய சந்தர்ப்பம்.

பாதுகாப்பு அமைச்சு வைத்தியசாலை, பல்கலைக்கழகம், பாடசாலை போன்ற இடங்களுக்கு சுத்திகரிப்பாளர்கள் ஆண், பெண் இருபாலாருக்கு வேலை வாய்ப்பு உள்ளது. ஆணகள் 350 பேரும் பெண்கள் 250 பேரும் தேவை. மிக விரைவில் பயணம். சம்பளம் பேசித் தீர்மானிக்கப்படும்.

வேலையின் சட்டதிட்டங்கள்

| | |
|---|---|
| தங்குமிட வசதிகள் | : இலவசம் |
| மேலதிக நேரம் (ஓவர் டயிம்) | : உண்டு |
| வேலை செய்யும் காலம் | : 03 வருடங்கள் |
| வயதெல்லை ஆண்கள் | : 20 முதல் 30 வயது வரை |
| வயதெல்லை பெண்கள் | : 18 முதல் 35 வயது வரை |
| வேலை செய்யும் மணித்தியாலம் | : 08 மணித்தியாலங்கள் |
| சீருடை, போக்குவரத்து | : இலவசம் |
| வேலை செய்யும் கிழமை நாட்கள் | : 06 ( வெள்ளிக்கிழமை விடுமுறை தினம் ) |



**திங்கள் முதல் வியாழன் வரை நேர்முகப் பரீட்சை நடைபெறும்**

**Faiz Travel Agent**

No : 36/3, Price Place( Dias Place), Gunasinghapura, Colombo -12, Sri Lanka.
mob : 0777 396 771 Tel : 0112 43 63 18
Fax : 0112 34 80 34

# சிறு விளம்பரங்கள்

## திருமண சேவை

சுலபமான வாழ்கைத்துணைத் தெரிவுக்கு சுயதெரிவுமுறையே! சுயதெரிவு முறை பற்றிய வரன்முறையைத் தெரிந்திடத் திங்கள். புதன். வெள்ளி மாலை வேளைகளில் சுய தெரிவு முறைமுன்னோடி சர்வதேச சகலருக்குமான திருமண ஆற்றுப்படுத்துநர் குரும்பசிட்டியூர் மாயெழுவேல் அமுதனிடம் தொடர்புகொள்ளுக! தொலைபேசி: 236 0488, 2360694, 4873929.

---

சக்தி திருமண சேவை. யாழ். கொழும்பு இந்திய வம்சாவளி இந்து. RC.உள்ளூர். வெளிநாடு மணமக்களை பெற்றுக் கொள்ளலாம். Shakthi Marriage Service, # 30, Ramani Mawatha, Negombo. 031 2232130, 0777 043138, 031 5674603.

---

Best & Fast இந்து.கிறிஸ்தவர்கள் Service Specially குருகுலம்.பிராமணர்கள் முதல் சகல சமூகப் பிரிவினர்கள் ( உள்நாடு.வெளிநாடு) வெளிநாடுகளில் PR உள்ள. அல்லாத (வயது முக்கியமல்ல ) அனைவருக்குமான துரிதசேவைக்கும் சந்திப்பினை வேண்டுங்கள். எங்களை அழையுங்கள். ஜோதிடர் சேவையும் வழங்குகின்றோம். Sannithiyan Marriage Service, 285 - 1/1, Galle Road, Wellawatte ( பொலிஸ் நிலைய வாயில் எதிரே ) காலை 9 - 1 மாலை 5 - 7. Tel : 060 2172980, 077 3573055

## வீடு விற்பனைக்கு

கலகாவிற்கும் தெல்தோட்டைக்கும் இடையில் சகல வசதிகளும் கொண்ட கடையுடன் வீடு டயில் பதிக்கப்பட்டது. 13 பேர்ச்சஸ் காணி. தொடர்பு : No. 87, Main Street, Deltota. 0777 614485, 077 9721626.

---

வத்தளை சாந்தி ரோட்டில் அமைந்துள்ள வீடு விற்பனைக்குண்டு. தொடர்பு கொள்ளவும்.077 5865202

---

மட்டக்களப்பு மாநகர சபைக்கு உட்பட்ட பிள்ளையாரடி சர்வோதய வீதியில் 27 பேர்ச் காணி விற்பனைக்கு உண்டு தொடர்பு : 077 6340588.

---

உலப்பனவத்தையில். மின்சாரம். தண்ணீர் வசதி கொண்ட வீட்டுடன் 16 பேர்ச்சஸ் காணி விற்பனைக்குண்டு Tel: 072 3693883.

---

குண்டசாலை பஜார் அண்மையில் 20 பேர்ச்சஸ் விற்பனைக்குண்டு. தொடர்பு : 0771555594.0777842604.

## தேவை

கண்டியில் இயங்கி வரும் Shoe Palace க்கு Salesman தேவை. தொடர்புகளுக்கு இலக்கம் : 113. கொழும்பு வீதி. கண்டி. தொலைபேசி : 0777 666441.

---

Ladies hand Bags தைப்பதற்கு பெண்கள் தேவை. நல்ல சம்பளம் கொடுக்கப்படும். தங்குமிட வசதி செய்து தரப்படும். தொடர்பு : 072 6038299.

---

இரும்பு கிறில் கேற் தயாரிக்கத் தெரிந்த பாஸ்மார் உதவியாளர்களும் தேவை. தங்குமிட வசதி உண்டு நேரில் வந்து விசாரிக்கவும். முகவரி. சிறிசிங்க இன்டஸ்றீஸ். 1564. கோட்டே வீதி. ராஜகிரிய.

---

வீட்டு வேலைப் பெண் சமையல்.சுத்தம் செய்ய. தங்கியிருந்து வேலை செய்ய. வேலை அனுபவத்தோடு மற்றும் 55 வயதிற்கு குறைவாயின் விரும்பத்தக்கது. தயவுசெய்து தொடர்பு கொள்ளவும்: 0777399799. 67/2. கிரகரிஸ் வீதி. கொழும்பு - 07.

---

அட்டனில் இயங்கும் பிரபல டயர் நிறுவனமொன்றிற்கு டயர் விற்பனையில் நன்கு அனுபவமுள்ள விற்பனையாளர்.எழுது வினைஞர்(கிளார்க்) அலுவலக வேலை தெரிந்த Correspondence ஒருவரும் தேவை. (அட்டனை வசிப்பிடமாக கொண்டவர்கள்) அசோக டயர் டிரேடர்ஸ். இல.179. கொழும்பு வீதி. அட்டன்.

---

கிழமைக்கு 1500 டீ சேட் துண்டுகள் தைத்துக் கொடுப்பதற்கு அனுபவமுள்ள Sub Agents தேவை. உடனடியாக தொடர்பு கொள்ளவும். Tel : 072 5282839, 25 21086. 7. P.M

---

வைத்தியசாலை வெற்றிடங்கள். உடனடி வெற்றிடங்கள். பெண் வோர்ட் தாதிமார்களுக்கு மாற்று நேரஅடிப்படையில் சேவை செய்ய விண்ணப்பிக்கவும். தொடர்பு தொலைபேசி இலக்கங்களோடு. நியூ லங்கா ஒஸ்பிட்டல். 9. பம்பலப்பிட்டிய டிரைவ். பம்பலப்பிட்டிய. 2594906/7

---

புறக்கோட்டையில் நீண்ட காலமாக நடைப்பெற்றுக் கொண்டிருக்கும் ஸகிரீன் பிரிண் டிங் வேலை செய்வதற்கு பெண் பிள்ளைகள் தேவை Tel :077 6550298

---

பொரளையில் புதிதாக ஆரம்பிக்கப்பட்ட ஆனந்த பவான் சைவ Hotel க்கு அனைத்து வேலைகளுக்கும் வேலை ஆட்கள் தேவை. தொடர்பு : 077 4907900

---

சேட். டவுசர் மற்றும் ஆடைகள் தயாரித்து விநியோகிக்கும் ஸ்தாபனதுக்கு சேல்ஸ் ரெப் தேவை. 'A' வகுப்பு சாரதி அனுமதிப்பத்திரம் இருப்பவருக்கு முன்னுரிமை வழங்கப்படும். தங்குமிட வசதியுடன் தகுந்த சம்பளமும் விற்பனை கமிஷனும் வழங்கப்படும். தொடர்புகளுக்கு : F.T. Point, 305/2A, Ferguson Road, Colombo -15. Tel. 011 4610509. 011 4611207, 077 3635268.

---

Stationery கடையில் நல்ல அனுபவமும் திறமையும் உடைய Store keeper தேவை. மற்றும் கடையில் வேலை செய்யக்கூடிய ஆண்கள் தேவை ( அண்மையில் உள்ளவர்கள் விரும்பத்தக்கது ) தொடர்பு : No. 103 1/2, Maliban Street, Colombo 11. Tel : 011 2331110.

---

" ஜனதிரிய " இலங்கை முழுவதும் உள்ள காரியாலங்களுக்கு சிங்களம் பேசக்கூடியவர்கள் தமிழ் ஆண். பெண் இருபாலார்களும் தேவை. சம்பளம் 13.500/- உணவு. தங்குமிடம் இலவசம். 10 ஆம் வகுப்புக்கு மேல் படித்தவர்கள் விரும்பத்தக்கது. (*HLW திருவுமலை யிலிருந்து100 இரத்தினபுரிக்கு ) இலக்கம் 389 1/1. உடஎல்லப்பொல. பலாங்கொடை. Tel ; 071 2516059.

---

Retired Female Training Clerk who can Handle up to Finel Accounts application and fluent in English & Singhala Application to The Manager 53, Maliban Street, Colombo 11

---

26 Vacancies! ஆசிய நாடுகளில் கிளைகளை கொண்டு இயங்கும் கொழும்பு நிறுவனத்தில் பயிற்சி முகாமையாளராக ஒரு வாய்ப்பு. தகைமைகள் O/L, A/L, பயிற்சி காலத்தில் 15.000/- மேலதிகமாக சம்பாதிக்கலாம். புதன். வியாழக்கிழமைகளில் நேரில் வரவும். Asian Management Services (Pvt) Ltd., 294/3/1, Galle Road, Colombo -4. Tel : 011 2504594.

---

கொழும்பில் உள்ள அரச/அரச சார்பற்ற நிறுவனத்தில் பணியாற்றுவதற்கு கொழும்பில் நன்கு பரிச்சயமான சாரதிகள் இருவர் தேவை. கொழும்பில் உள்ளவர்களுக்கு முன்னுரிமை அளிக்கப்படும். விபரங்களுக்கு: 011 2333696 காரியாலய நாட்களில் தொடர்பு கொள்ளவும்.

---

Nuwaraeliya, Hatton, Kalmunai, Trininco, Puttalam போன்ற இடங்களில் புதிதாக திறக்கப்படவுள்ள சர்வதேச கம்பனிக்கு Supervisor, Assistant Manager தேவை. அனுபவம் தேவையில்லை பயிற்சி காலத்தில் 15.000/- முதல் 20.000/- வரை. பயிற்சியின் பின் 35.000/- முதல் 70.000/- வரை E.P.F, E.T.F உள்ளடக்கப்படும். No. 258A, Puttalam Road, Kurunagala. தொடர்பு: அஸ்ரப் 072 3718775. 077 6478876.

---

கொழும்புக்கு அருகாமையில் உள்ள கடையொன்றுக்கு நன்கு அனுபவமுள்ள KP Bill போடுவதற்கு தேவை. சாப்பாடு. தங்குமிடம் இலவசம். தொடர்பு: மாலை 6.00 மணிக்கு பிறகு தொடர்பு கொள்ளவும். 0712834200.

## வாடகை

குறைந்த செலவில்.வைத்திய வசதி. பொழுது போக்கு. உளவளத்துணை ஆகியவற்றுடன் நெருக்கடியற்ற அமைதியான சூழலில் தங்குமிட வசதி உண்டு. தொடர்பு : 0716194363.0715129387.

---

வெல்லம்பிட்டிய. மெகட கொலன்னாவ வீதியில் புதிதாக அமைக்கப்பட்ட முற்றிலும் Tiles பதிக்கப்பட்ட 4 படுக்கையறைகளுடன் கூடிய வீடு வாடகைக்கு அல்லது விற்பனைக்கு உண்டு. தொடர்புகளுக்கு : 011 2948158. 077 3911297.

---

நாயக்கந்தை 79/B,மாட்டாகொட வீதியில் 6 அறைகள் கொண்ட மாடி வீடு வாடகைக்கு உண்டு.வாகன தரிப்பிடம் உண்டு. தரகர் தேவையில்லை.தொடர்பு : 0777 349 252.

---

வத்தளையில் புத்தம் புதிய மாடி வீடு 5 படுக்கையறைகள்.3 குளியலறைகள். கூரை உச்சி பல்கனி. ஏசி. சுடுநீர். கராஜ் வீடு. லைசியம் சர்வதேச பாடசாலைக்கு சமீபமாக. உடனடியாக வாடகைக்கு. 077 431 5293.077 3563569

---

கிராண்ட்பாஸ் Stace Road இல் மேல் மாடி 4 அறைகளுடன் வாடகைக்கு உண்டு. தொடர்பு : 071 6843378.

---

மட்டக்குளி - பெர்குசன் வீதி.மூன்று படுக்கையறைகள். 3 குளியலறைகள்.பெரிய வீடு வாகன தரிப்பு வசதிகளோடு. தொலைபேசி இல : 0777 662802.

---

தெஹிவளை. Waidiya Road இல் இரண்டு படுக்கை அறைகள் Hall, சமையலறை உட்பட சகல வசதிகளுடன் வீடு வாடகைக் குண்டு. தொடர்பு : No 66, Waidiya Road, Dehiwala. Tel : 2723940.

---

அவிசாவெல்ல வீதி ஒருகோட வத்தையில் இல 179/24A, இல் அட்டாச் பாத்றூம் வசதிகளுடன் ஒரு அறை வாடகைக்கு உண்டு. மாத வாடகை 4.000/- ரூபா. தரகர் தேவையில்லை. தொடர்பு கொள்ளவும். தொலைபேசிஎண் : 077 9058911

---

வீடு வாடகைக்கு கொடுக்கப்படும். கோதமி மாவத்தை. வெல்லம்பிட்டி. 078 55290 23. 0715531713.

---

ரொட்டி வேலை தெரிந்த திறமையான சமையற்காரர் தேவை. சம்பளம் 750/- சான்றிதழ்களுடன் வரவும். தவிந்து கபே. கந்தானை. தொடர்பு: 011 2229046.

---

கொழும்பு 11இல் அலுவலகங்களில் வேலை செய்பவர்களுக்கு தங்குவதற்கு இரண்டாம் மாடியில் வசதியான ரூம் வாடகைக்கு உண்டு. இருவர் தங்கலாம். உடன் தொடர்பு கொள்க : 077 9057766.

---

புறக்கோட்டை 1st Cross Street இல் புதிய கடை வாடகைக்கு உண்டு. கடையின் அளவு 17" X 9.மாத வாடகை 25.000/- அழைக்கவும். Mr.Rizvi 077 5826515.

---

Colombo 10, பஞ்சிகாவத்தையில் 2400sq. ft., Stores, Ground Floor with Access for 40 Containers உடனடி வாடகைக்கு தொடர்பு: Agent 078 5559786.

---

இலக்கம் 514.பேஸ்லைன் ரோட்டில் அமைந்துள்ள கடைத் தொகுதியின் மேல் மாடி வாடகைக்கு கொடுக்கப்படும். சகல வசதிகளும் உண்டு. தொடர்பு : 077 3944223

---

சகல வசதிகளுடன் அறையொன்று வாடகைக்கு உண்டு ரூபா4.500/- ஒரு வருட முற்பணம். தொடர்பு : 077 5802234 / 077 4493501.

---

தனியார் முதியோர் பராமரிப்பு இல்லை பொன்றிற்கு பண முதலீடு செய்யக்கூடிய Partner தேவை. Kind Care Elder's Home, 17/1, George Mawatha, Mabola, Wattala. Mobitel : 071 4819033, Tel : 2942554.

## கல்வி

மாளிகாவத்தையில், தமிழ் மொழி தரம் 5 வரையான மாணவர்களுக்கு ஆங்கிலம் உட்பட அனைத்து பாடங்களும் அனுபவமிக்க ஆசிரியையால் விளக்கமாக கற்பித்துக்கொடுக்கப்படும். தொடர்பு: 011 2380162.

---

Spoken English Classes ( இலகுவான முறையில்) வீடுகளுக்கு வந்து கற்பிக்கப்படும். Course Fees 2,500/- மற்றும் வெளிநாடு செல்லவிருப்போருக்கு Special Classes. Contact : 071 6500919

---

Spoken Singhala, தமிழ் மாணவர்களுக்கு சிங்கள வகுப்புகள் வீடு வந்து கற்பிக் கப்படும். 077 1510058.

---

யாழ். அனுபமிக்க ஆசிரியரால் கொழும்பு வத்தளை பிரதேசங்களில் தரம்அ 5 -11 வரையான தமிழ் மொழி மூலம் கணிதம் விஞ்ஞானம் வீட்டுக்கு வந்து கற்பி க்கப்படும். தொடர்புகட்கு 077 3971663.

---

ஓய்வுபெற்ற யாழ்.பிரபல பாடசாலை ஆசிரியையினால் ( BA (Hons.) Dip-in Ed) GCE O/L, A/L வகுப்பு மாணவர்களுக்கு ஆங்கிலம் கற்பிக்கப்படும். Past Paper Classes will be Conducted தொடர்பு: 011 2559349.

---

IELTS / TOEFL தனிப்பட்ட வகுப்பு. வெளிநாடு செல்வோருக்கு. குடும்பத் தலைவியருக்கு. தொழில் பார்ப்போருக்கு Spoken English மற்றும் English Medium மாணவர்களுக்கு English. தொலைபேசி : 071 6850013.

---

ஜேர்மன் மொழி தனித்து கவனம் எடுத்து கற்பிக்கப்படும். பிரபாகரன். 078 6012 004.4951652.

---

இத்தாலி நாட்டு மொழியினை Italian குறுகிய காலத்தில் எழுத. பேச. வாசிக்க இலக்கணத்துடன் கற்பிக்கப்படுகின்றது. இத்தாலி செல்பவர்களுக்கு மிகவும் பிரயோசனமானது. தமிழிலும் ஆங்கி லத்திலும் விளக்கங்கள். 077 1159606.

---

A/L Physics Com - Maths Chemistry 6 - 11 Maths ஆகிய வகுப்புக்கள் திறமையான ஆசிரியர்களால் வீடுகளுக்கு வந்தும் குழுவாகவும் கற்பிக்கப்படும். தொடர்புகளுக்கு : V.P. Kesan 071 5442627, 077 4707121.

---

யாழ். இந்துக்கல்லூரியில் முன்பு கற்பித்தவரும். தற்பொழுது கொழும்பில் கற்பிப்பவருமாகிய பௌதீகவியல் ஆசிரியரினால் G.C.E. A/L. 2009,2010 Batchக்கு Physicsஉம் Grade 7 - 10க்கு Mathematics ( Tamil / English )இல் தனி/குழுவாக வீடு வந்து கற்பிக்கப்படும். தொடர்பு : 077 5342191. 011 2362359.

---

Personal Class.பல்கலைக்கழக மாணவரால் பௌதீகவியல் பாடம் கற்றுத் தரப்படும். 077 4313588

## சேவை

உங்களால் வங்கியில் அடகு வைக்கப்பட்டு மீட்க முடியாதுள்ள தங்க ஆபரணங்களை நாம் வந்து மீட்டுக் கொடுத்து விலைக்கு வாங்குவோம். தொடர்பு கொள்ளவும். தொலைபேசி : 071 3462691.

---

புதிய வீடுகள் நிர்மாணிக்கவும் பழைய வீடுகள் திருத்தவும் மற்றும் சகல விதமான House Wiring, Painting, Tiling, Plumbing மற்றும் Mason போன்ற வேலைகள் குறைந்த விலையில் உத்தரவாதத்துடன் செய்து தரப்படும். தொடர் : Emerson : 072 2914684, No. 145, Balagalawatte, Hendala, Wattala.

---

கலைஞர். இசையருவி.40 Free Channels, Sun KTV, Raj, Vijay, Max, Sports, Cartoon, Dish Package கட்டணம் செய்து கொள்ள பெரிய சிறிய Dish வேலைகளுக்கும் தொடர்பு: 078 5116522.

---

வங்கிகளில் நகை அடவு கடைகளில் அடகு வைத்த நகைகள் மீட்க முடியாத சந்தர்ப்பங்கள். அல்லது அறுதியாக போகும் சந்தர்ப்பங்களில் அதை நாம் மீட்டெடுத்து வெறுமதிக்கேற்ப பணம் தருகிறோம். அழைக்கவும்.078 5177877.

---

முதியோர் பராமரிப்பு இல்லம் ஆண / பெண் இருபாலருக்கும் எல்லாவித மான வசதிகளுடன் அமைந்துள்ளது. Kind Care Elder Home, 17/1, George Mawatha, Mabola, Wattala. Mobile : 071 4819033. Tel : 2942554.

---

எக்கவுன்ட்ஸ் கிளார்க்ஸ். செயலாளர்கள். விற்பனை பிரதிநிதிகள். நிர்வாகிகள். கணினி இயக்குநர்கள் ஆகிய பதவிகளுக்கான தகுதி வாய்ந்தோர் எம்மிடம் உண்டு. தயவுசெய்து தொடர்பு கொள்ளவும். RF General & Sports Placement (Pvt) Ltd. No. 46, 1/1, Castle Street, Colombo 08. Phone : 4710686. Email: rfasialimited@yahoo.com

---

உங்களுக்கு தேவையான Printing ஓடர்கள். அவசர Certificates, Business Cards, Rubber Stamps,நினைவுமலர்கள் Leaflets, பிறப்பு / இறப்பு சான்றிதழ்கள் மற்றும். ஏனைய மொழிபெயர்ப்புகள். ஆங்கில கடிதங்கள் அனைத்தும் குறுகிய காலத்தில் செய்து கொடுக்கப்படும். Call: 078 6533433, 4851199.

## வைத்திய ஆலோசனை

சித்த ஆயுர்வேத பயிற்சி நெறிகள் ஆரம்பமாகியுள்ளன. இதில் சேர விரும்பும்வோர் உடனடியாக தொடர்பு கொள்ளவும். வைத்திய நிபுணரால் நடத்தப்படுகின்றது. Dr. S. Indiranee, Seewali Road, Mount-lavinia. Tel : 060 2172699.

---

அற்புத வைத்தியம் " இஸ்முல் அஃளம்" எனும் இறையருள் கடாட்சம். 21 நாட்களுள் தீராத நோய்களுக்கும் சுகம். சூனியங்கள். ஜின்ஷைத்தான். கண்ணூறு. மனநோய். பைத்தியம். தலைவலி. உடல் வலிகள். வாத நோய்கள். கொலஸ்ட்ரோல். ஆஸ்த்மா. குடற்புண். ஈரல்பாரம். தொழில் துறை முன்னேற்றம். பொருளாதார செழிப்பும். கறாமத் நிறைந்த இந்த "இஸ்முல் அஃளம்" இறையருளால் 100% ஆண்மை சக்தி பெற அதிவிசேஷ தாது புஷ்டி குங்குமப்பூ லேகியம். 60 நாட்களுக்குரிய ஔஷதம் 5000/- மட்டுமே. இஷ்ஷெய்குல ஹிக்மத் S.M.N. மௌலானா ஹஸ்றமி ஷாதுலி. அரேபிய ஆன்மீக வைத்திய நிலையம். பதிவு இல. WB 1745, No. 201, முதலாம் மாடி ஸ்ரீசத் தர்ம மாவத்தை மாளிகாவத்தை கொழும்பு -10. 071 4952309. 011 2689870. (Opex Agro (Pvt) Ltd. இற்கு அருகாமையில் )

---

நடக்க. இருக்க. மடிக்க முடியாமல் முழங்கால். குதி. தொடை. பாதம். விரல்கள். முள்ளந்தண்டு. தோள். இடுப்பு. கழுத்து போன்ற உறுப்புக்களில் நோ வலி குத்து வேதனை எவ்வளவு நாட்பட்டதாக இருந்தாலும் ஆப்ரேஷன் தேவையில்லை. மூக்கடைப்பு தும்மல். நெஞ்சுச் சளி. இருமல். வாசிக்கும் போது கீ.கீ என்று சத்தம் ஆஸ்துமா இவை அனைத்துக்கும் சிறப்பான மூலி கை மருந்து சிகிச்சை. பக்கவிளைவு எதுவும் இல்லை. குறைந்த பத்தியம். சித்த வைத்தியர் Dr.R. Sivagurunathan. Tel :0777 301669 011 7910679. E mail : vaithiyar@hotmail.com

## பழுதுபார்த்தல்

கேஸ் (Gas) அடுப்பு. மிக்ஸி. கிரைண்டர் (Grinder) ப்ரஷர் குக்கர் (Pressure Cooker) மண்ணெண்ணெய் அடுப்பு போன்ற உங்கள் சமயலறை பொருட்கள் உடன் பழுதுபார்த்து கொடுக்கப்படும். தொடர்புகளுக்கு 060 2077454. 0724694279.

---

Fridge, Washing Machine, Water Motor Fan Grinder, Wiring, Plumbing Etc....... என்பன வத்தளை. தெஹிவளை உட்பட கொழும்பின் அனைத்துப் பாகங்களுக்கும் வந்து செய்து தரப்படும். Sasi. Electrical Service - 0779220271, 011 5723356.

---

உடனடி சேவை. கண்டி. கொழும்பு பிரதேசங்களில் நேரில் வந்து Computer Repair செய்து கொடுக்கப்படும். (Original - Windows XP) Hardware, Software, Formatting, Installation, ADSL Internet Configuration and Virus Card Installation. (Monthly Service Accepted) தொடர்பு முரளி - 077 3920739. 077 4412 699.




யாழ்ப்பாணம் - மானிப்பாய் வரை
டயலொக் 3G விஸ்தரிக்கப்பட்டுள்ளது.

- உள்நாட்டு மற்றும் வெளிநாட்டு வீடியோ அழைப்புகள்
- துரித இணைய வசதி
- வீடியோ Star Call
- www.dialog3g.com

இலங்கையின்
மிகப் பரந்த
மற்றும்
விசாலமான
3G அனுபவம்

Dialog 3G
3rd GENERATION

எதிர்காலம் இன்றே.

## கிளிநொச்சி....

(02 ஆம் பக்கத் தொடர்ச்சி)

அரசியல்வாதிகளால் விதைக்கப்பட்ட பேரினவாதம் என்ற நஞ்சு விதையால் அழிந்து கொண்டிருக்கும் நாட்டுக்கு, படைத்தலைமையில் இருந்து வந்துள்ள பேரினவாதக் கோஷம் உரமூட்டுவதாக அமையலாம். ஆனால் அது நாட்டை முழுமையாக அழிக்கத்தான் உதவும் என்று எதிர்வுகூறப்படுகின்றது.

இராணுவத்தலைமையின் போக்கு, இந்த நாட்டில் சிங்களப்படையும் தமிழ்ப் படையும் தனித்தனிப்படைகளாகக் கால் ஊன்றப் போகின்றமைக்கு கட்டியம்கூறுவதாக அமைந்துள்ளது.

***

வன்னியில் படையினர் தொடரும் விமானத் தாக்குதல்கள், ஷெல் தாக்குதல்கள், இராணுவ நடவடிக்கை காரணமாக மக்கள் பெரும் மனித அவலங்களைச் சந்திக்கின்றனர் என தகவல்கள் வெளியாகின்றன.

மக்கள் குடியிருப்புக்களை இலக்குவைத்து நடத்தப்படும் இத்தாக்குதல்கள் காரணமாக கட்டாய இடம்பெயர்வுக்கு உள்ளாகும் மக்கள் போக்கிடமின்றி மரநிழல்களுக்கு கீழும், பாடசாலைகள், தேவாலயங்களிலும் தஞ்சமடைகிறார்கள்.

அண்மையில், ஐ.நா.அதிகாரிகள் வெளியிட்ட தகவலில், 2லட்சம் மக்கள் இடம் பெயரும் அபாயநிலை தோன்றியுள்ளது என எச்சரிக்கப்பட்டிருந்தது.

இடம்பெயரும் மக்கள் இருப்பிடம், உணவு, சுகாதாரம், குடிதண்ணீர், மருத்துவம் போன்ற விடயங்களில் சிக்கல்களை எதிர் கொள்ளப் போகின்றார்கள் என அந்த அதிகாரிகள் முன்கூட்டியே அபாயஒலி எழுப்பியிருந்தார்கள்.

மக்களைப் பாதுகாக்கும் மனிதாபிமான நடவடிக்கை என்ற பெயரில் அரசு முன்னெடுக்கும் நடவடிக்கை, அந்தப் பிரதேச மக்களைப் பெரும் அவலங்களுக்குள் தள்ளியுள்ளது.

இதுவரை ஒரு லட்சத்துக்கு மேல் மக்கள் இடம்பெயர்ந்துவிட்டார்கள். அவர்களின் பிள்ளைகள் கல்வி பயிலும் பாடசாலைகள் செயலிழந்து விட்டன. திக்குத்தெரியாமால் அந்த மக்கள் அந்தரிக்கிறார்கள் என்று தினமும் செய்திகள் வந்து கொண்டிருக்கின்றன. மக்கள் சந்தித்து நிற்கும் அவலம் மேலும் மோசமடையக்கூடும் என எதிர்வுகூறப்படுகின்றது. மக்களின் அவலங்களை சர்வதேச சமூகம் பார்த்தும் பாராது இருக்கும் போக்கை மனிதநேய அமைப்புக்கள் கண்டிக்கின்றன.

சர்வதேசத்தாலும் கைவிடப்பட்ட தங்களுக்கு எப்போது நிம்மதி ஏற்படப் போகின்றது என்ற ஏக்கமே அந்த மக்களிடம் மிஞ்சி நிற்கின்றது. ✱

## படையினரின்....

(8 ஆம் பக்கத் தொடர்ச்சி)

கொண்டுவந்துவிடலாம் என்ற இன்னொரு திட்டத்துடன் இராணுவத்தின் 57 ஆவது டிவிஷன் படைகள் நகர்வுகளை மேற்கொண்டு வருகின்றன. துணுக்காய் மற்றும் மல்லாவி படையினர் வசம் வீழ்ந்தால் அது கிளிநொச்சியின் கேந்திரத்தன்மைக்கு பாரிய கேள்விக்குறியாக அமையும் என்பதில் உண்மையிருக்கத் தான் செய்கிறது.

அந்தவகையில், நாச்சிக்குடா, துணுக்காய், மல்லாவி ஆகிய இடங்களை படையினர் நெருங்கினால், அதுவே புலிகளின் வலிந்த தாக்குதலுக்கான தொடக்கப்புள்ளியாக அமையக்கூடிய சாத்தியக்கூறுகள் உள்ளன.

அதேவேளை, படையினர் இவ்வாறு தமது முக்கிய பிரதேசங்களை நெருங்குவதற்கு முன்னர், வன்னியின் மேற்கில் அரச படைகளின் செறிவைக் குறைக்கும் நோக்குடன் புலிகள் புதிய களமுனையைத் திறக்கக்கூடும் என்ற எதிர்பார்ப்புடன் ஏனைய பிரதேசங்களில் தமது படைகளை உஷார் நிலையில் வைத்திருப்பதில் படைத்தலைமைகள் மும்முரமாக உள்ளன.

ஆனால், புலிகள் இதுவரை மேற்கொண்டுவரும் பின்வாங்கல்கள் மற்றும் வலிந்த தாக்குதல்களை இயன்றவரை தவிர்ப் பது போன்ற களதந்திரோபாயங்கள், இறுதிப் போருக்கான ஆயத்தங்களாகத் தெரிகின்றனவே தவிர, இன்னொரு களமுனையைத் திறப்பதன் மூலம் ஒரு மினி யுத்தத்தை நடத்துவதற்கான முன்னேற்பாடாக தெரியவில்லை.

அவ்வாறு புலிகள் மேற்கொள்ளும் தாக்குதல்களின் முதற்கட்டம்தான் வெற்றியைத் தீர்மானிப்பதாக அமையும் என்பது களநிலை ஆரூடம்.

ஜெயசிக்குறு முறியடிப்புத் தாக்குதலை நோக்கினால், ஓட்டுசுட்டான் தாக்குதலும் கரிபட்ட முறிப்பு தாக்குதலும் ஏனைய இடங்களுடன் ஒப்பிடுகையில் பாரிய சவாலாக அமைந்தன. அவற்றை வெற்றிகரமாக நிறைவு செய்ததால் ஏனைய இடங்கள் இலகுவாக புலிகளின் கைகளில் விழ ஆரம்பித்துவிட்டன.

வவுனியா பக்கம் - அதாவது சிங்கள பிரதேசத்துடன் நிலத்தொடர்புடைய பகுதியிலிருந்து படைநடவடிக்கையை ஆரம்பித்த இராணு வத்தினருக்கு எப்போதும் ஒரு நம்பிக்கை உள்ளது. அதாவது, புலிகள் தாக்கினால், திரும்பி பின்நகர்வதற்கு இடமுள்ளது. ஆகவே, நம்பிக்கையாக தமது தளபதிகளின் கட்டளை களைக் கேட்டு அவர்கள் எவ்வளவு தூரமும் வன்னிக்குள் வருவார்கள்.

இதுதான் ஜெயசிக்குறு காலப்பகுதியிலும் நடைபெற்றது. ஆனால், குடாநாட்டில் அந்த சாத்தியம் இல்லை. தப்பியோடுவதானால் பலாலிதான் இலக்கு. ஆகவேதான், குடாநாட்டை பொறுத்தவரை படையினருக்கு தீராத பயம் எப்போதுமிருந்து வருகிறது. ஆகவே, வன்னிக் களமுனை இனிவரும் வாரங்களில் பாரிய திருப்பங்களை எதிர்பார்த்துக் காத்திருக்கிறது.

பிரசாரத்துக்கான போராக வன்னிக் களமுனையில் படையினர் காண்பிக்கும் திருவிளையாடல்கள் சார்க் மாநாட்டிற்கான யுத்தநிறுத்தம் முடிந்த கையோடு அம்பலமானால் கூட ஆச்சரியப்படுவதற்கில்லை. ✱

## எரிகிற வீட்டில்....

(7ஆம் பக்கத் தொடர்ச்சி)

எனவே, உயர் பாதுகாப்பு வலயம், பாதுகாப்பு நடவடிக்கைகள் என்பவற்றைக் காரணம் காட்டி, தமிழ் இளைஞர்களுக்கு வேலைவாய்ப்பு மறுக்கப்பட்டு, அவற்றைத் தென்பகுதி இளைஞர்களுக்கே வழங்கப்படக்கூடிய சாத்தியங்களும் உள்ளன.

தன் நாட்டு மீனவருக்காக எதையாவது செய்ததா டில்லி? மாற்றான் வீட்டில் வந்து அடாவடியாய் குந்தியிருக்கவும், அங்குள்ள வளங்களைச் சுரண்டவும் அடிக்கடி உயர்மட்டக் குழுக்களை அனுப்பி வர்த்தக ஒப்பந்தங்களைப் போடுகின்ற பாரததேசம், தன்னுடைய தமிழ்நாட்டு மீனவர் நலனுக்காய் இதுவரை ஒரு துரும்பைக் கூட அசைக்கவில்லை. கட்டுமீறிப்போய்க்கொண்டிருக்கின்ற இலங்கைக் கடற்படையினரின் நடவடிக்கைகளால் நாளாந்தம் தமிழக மீனவர்கள் உயிர், உடைமை இழப்புகளைச் சந்தித்து வருகின்றனர். மீனவர்களின் உரிமைக்காக தமிழகக் கட்சிகளெல்லாம் ஓரணியில் திரண்டு குரல்கொடுக்கின்றன. ஆனால், இதையெல்லாம் இந்திய மத்திய அரசு காதில்போட்டுக்கொள்ளவேயில்லை.

எண்ணெய் வளத்தை உறிஞ்சவும், சிமெந்து ஆலையை வளைத்துப் போடுவதற்கும் செய்கின்ற ராஜதந்திரப் பிரயத்தனங்களில் ஒரு பகுதியையாவது தமிழக மீனவர் பிரச்சினைக்காக இந்தியா செலவிட்டிருந்தால் இலங்கைக் கடற்படையினரின் அடாவடித்தனத்திற்கு முற்றுப்புள்ளி வீழ்ந்திருக்கும்.

ஆயினும், தன்னுடைய அரசியல், வர்த்தக நலனுக்காகத் தன்னுடைய மீனவர்களின் உயிர்ப்பிரச்சினை பற்றி பிரஸ்தாபிக்க மறுக்கின்றது பாரததேசம்.

இந்தப் பின்னணியில் இலங்கையில் நடைபெறவுள்ள சார்க் மாநாட்டின்போதும் இலங்கைக்கு இன்னமும் பொருளாதார, இராணுவ உதவிகளை இந்தியா, பாகிஸ்தான் போன்ற நாடுகள் செய்வதற்கு முன்வரலாம். அதற்குக் கைமாறாய் நாட்டின் வேறு சில பகுதிகளையும் கூறுபோட்டு அரசு விற்க முனையலாம். அதன்மூலம் போரைத் தீவிரப்படுத்தலாம். இப்படி நாட்டைக் கூறுகளாக விற்றால் பொருளாதாரம் இன்னும் அதலபாதாளத்துக்குள் வீழ்ந்துவிடும் நிலையே ஏற்படும். அதனை எந்தச் 'சிந்தனையாலும்' தடுக்க முடியாததாகவே இருக்கும்.

"என்ன விலை கொடுத்தேனும், போரில் பயங்கரவாதிகளை வெல்ல வேண்டும்"

என்று சிங்கள அதிகாரபீடம் அடிக்கடி கூறிவருவது, இப்படி நாட்டை கூறுபோட்டு விற்பனை செய்வதற்கான விலை பற்றித்தானோ?

# ராசி பலன்

**28-07-2008 முதல் 03-08-2008 வரை**

பொ.சந்திரலிங்கம்

### மேஷம்



**அச்சுவினி, பரணி, கார்த்திகை1.**

காரியசித்தியுண்டு. பணம் இருக்கும். உறவினர், அயலவர் விசுவாசமாக இருப்பர். பெற்றோர் நலம். நல்ல வீடு,வாகனம் அமையலாம். மாணவர்கள் கல்வியில் அதிக ஆர்வம் காட்டார். உடல் நலமுண்டு. பகை விலகும். திருமண வாய்ப்பு உண்டு. முதலீடுகளால் லாபம் குறையலாம். அதிஷ்டம் உண்டு. தெய்வீக ஆற்றல் உண்டு. தொழில்துறையில் முன்னேற்றம் குறையலாம். எதிர்பார்ப்புகள் நிறைவேறா. நண்பர்களால் பிரச்சினை உருவாகலாம்.

### ரிஷபம்



**கார்த்திகை2,3,4.ரோகிணி,மிருகசீரிடம் 1, 2**

காரிய சித்தியுண்டு. பிரயாண வாய்ப்புண்டு. பணப் பற்றாக்குறை நிலவும். உறவினர், அயலவர் உதவுவர். தாய் நலம். தந்தை நலமில்லை. நல்ல வீடு, வாகனம் அமையலாம். மாணவர்கள் கல்வியில் அதிக ஆர்வம் காட்டார். உடல் நலமுண்டு. பகை விலகும். திருமண வாய்ப்பு காலதாமதமாகலாம். முதலீடுகளால் லாபம் குறையலாம். அதிஷ்டம் இருக்காது. தெய்வீக நாட்டம் குறையலாம். தொழில்துறையில் முன்னேற்றம் குறையலாம். எதிர்பார்ப்புகள் நிறைவேறா.

### மிதுனம்



**மிருகசீரிடம் 3,4. திருவாதிரை, புனர்பூசம்1,2,3**

காரியத்தடை விலகும். பிரயாணம் அமையலாம். பணம் இருக்கும். உறவினர், அயலவர் உதவிசெய்வர்; உதவியை எதிர்பார்ப்பர். தாய் நலமில்லை. தந்தை நலம். வீடு, வாகனம் செலவை ஏற்படுத்தலாம். மாணவர்கள் கல்வியில் ஆர்வம் காட்டுவர். உடல் நலமுண்டு. பகை தூரவிலகும். திருமண வாய்ப்புண்டு. புதிய முதலீடுள் அமையலாம். அதிஷ்டம் உண்டு. தெய்வீக நாட்டம் உண்டு. தொழில்துறை முன்னேறும். எதிர்பார்ப்புகள் நிறைவேறும். நண்பர்கள் உதவுவர்.

### கடகம்



**புனர்பூசம்4, பூசம், ஆயிலியம்**

காரிய சித்தியுண்டு. பிரயாண வாய்ப்புண்டு. பணப்பற்றாக்குறை நிலவும். உறவினர், அயலவர் உதவுவர்; உதவியை எதிர்பார்ப்பர். தாய் நலம், தந்தை நலமில்லை. நல்ல வீடு, வாகனம் அமையலாம். மாணவர்கள் கல்வியில் அதிக ஆர்வம் காட்டார். உடல் நலம் பாதிக்கலாம். பகைவரால் தொல்லையுண்டு. திருமண வாய்ப்பு காலதாமதமாகலாம். முதலீடுகளால் லாபம் குறையலாம். அதிஷ்டம் இருக்காது. தெய்வீக நாட்டம் குறையலாம். தொழில்துறையில் முன்னேற்றம் குறையலாம்.

### சிம்மம்



**மகம், பூரம், உத்தரம்1**

காரியத்தடை இருக்கும். மனக்கவலை இருக்கும். பணப்பற்றாக்குறை நிலவும். உறவினர், அயலவர் விசுவாசமாக இருப்பர்.பெற்றோர் நலமில்லை. வீடு, வாகனம் செலவை ஏற்படுத்தலாம். மாணவர்கள் கல்வியில் ஆர்வம் காட்டுவர். உடல் நலமுண்டு. பகைவிலகும். திருமண வாய்ப்புண்டு. முதலீடுகளால் லாபம் அதிகரிக்கும். அதிஷ்டம் இருக்காது. தெய்வீக நாட்டம் குறையலாம்.தொழில்துறை முன்னேறும். எதிர்பார்ப்புகள் நிறைவேறா.

### கன்னி



**உத்தரம்2,3,4.அத்தம்,சித்திரை 1,2**

காரிய சித்தியுண்டு. பிரயாண வாய்ப்புண்டு. பணம் இருக்கும். உறவினர், அயலவர் விலகி இருப்பர். தாய் நலமில்லை. தந்தை நலம். வீடு, வாகனம் செலவை ஏற்படுத்தலாம். மாணவர்கள் கல்வியில் அதிக ஆர்வம் காட்டார். உடல் நலம் பாதிக்கலாம். பகைவரால் தொல்லையுண்டு. திருமண வாய்ப்பு காலதாமதமாகலாம். முதலீடுகளால் லாபம் குறையலாம். அதிஷ்டம் உண்டு. தெய்வீகநாட்டம் உண்டு. தொழில்துறை முன்னேறும். எதிர்பார்ப்புகள் நிறைவேறும்.

### துலாம்



**சித்திரை 3, 4. சுவாதி, விசாகம் 1, 2, 3.**

காரியத்தடை இருக்கும்.பிரயாண வாய்ப்புப் பாதிக்கலாம். பணம் இருக்கும். உறவினர், அயலவர் பகைகொள்ளக்கூடும். பெற்றோர் நலம். நல்ல வீடு, வாகனம் அமையலாம். மாணவர்கள் கல்வியில் ஆர்வம் காட்டுவர். உடல்நலம் பாதிக்கலாம். பகைவரால் தொல்லையுண்டு. திருமண வாய்ப்புண்டு. முதலீடுகளால் லாபம் குறையலாம். அதிஷ்டம் உண்டு. தெய்வீக எண்ணம் மேலோங்கும். தொழில்துறை முன்னேறும். எதிர்பார்ப்புகள் நிறைவேறும். நண்பர்கள் விசுவாசம் காட்டுவர்.

### விருச்சிகம்



**விசாகம்4,அனுசம்,கேட்டை**

காரியத்தடை இருக்கும். பணம் இருக்கும். உறவினர், அயலவர் உதவுவர்; உதவியை எதிர்பார்ப்பர்; பெற்றோர் நலமில்லை.வீடு, வாகனம் செலவை ஏற்படுத்தலாம். மாணவர்கள் கல்வியில் ஆர்வம் காட்டுவர். உடல்நலம் பாதிக்கலாம். பகைவரால் தொல்லையுண்டு. திருமண வாய்ப்புண்டு. முதலீடுகளால் லாபம் குறையலாம். அதிஷ்டம் இருக்காது. தெய்வீக நாட்டம் குறையலாம். தொழில்துறை முன்னேற்றம் குறையலாம். எதிர்பார்ப்புகள் நிறைவேறாது. மன அமைதி இருக்காது.

### தனுசு



**மூலம்,பூராடம்,உத்தராடம் 1.**

காரியத்தடை நீடிக்கும். பிரயாண வாய்ப்பு பாதிக்கலாம். பணப் பற்றாக் குறை நிலவும். உறவினர், அயலவர் விலகி இருப்பர். பெற்றோர் நலமில்லை. வீடு, வாகனம் செலவை ஏற்படுத்தலாம். மாணவர்கள் கல்வியில் அதிக ஆர்வம் காட்டார். உடல்நலம் உண்டு. பகைவிலகும். திருமண வாய்ப்பு உண்டு. முதலீடுகளால் லாபம் குறையலாம். அதிஷ்டம் இருக்காது. தெய்வீகநாட்டம் குறையலாம். தொழில்துறை முன்னேறும். எதிர்பார்ப்புகள் நிறைவேறும். மனஅமைதி இருக்காது.

### மகரம்



**உத்தராடம்2,3,4.திருவோணம்.அவிட்டம் 1,2**

காரியத்தடை இருக்கும். பிரயாண வாய்ப்பு பாதிக்கலாம். பணப்பற்றாக் குறை நிலவும். உறவினர், அயலவர் விலகி இருப்பர். பெற்றோர் நலமிலலை. வீடு, வாகனம் செலவை ஏற்படுத்தலாம். மாணவர்கள் கல்வியில் அதிக அக்கறைகாட்டார். உடல்நலம் பாதிக்கலாம். பகைவரால் தொல்லையுண்டு. திருமண வாய்ப்பு காலதாமதமாகலாம். முதலீடுகளால் லாபம் குறையலாம். அதிஷ்டம் இருக்காது. தெய்வீகநாட்டம் குறையலாம். தொழில்துறையில் முன்னேற்றம் குறையலாம். எதிர்பார்ப்புகள் நிறைவேறா.

### கும்பம்



**அவிட்டம்3,4.சதயம்,பூரட்டாதி 1,2,3**

காரியசித்தியுண்டு. பணம் இருக்கும். உறவினர், அயலவர் பகை கொள்ளக்கூடும். பெறறோர் நலமில்லை. வீடு, வாகனம் செலவை ஏற்படுத்தலாம். மாணவர்கள் கல்வியில் ஆர்வம் காட்டுவர். உடல் நலமுண்டு. பகை விலகும். திருமண வாய்ப்புண்டு. புதிய முதலீடுகள் அமையலாம்.அதிஷ்டம் இருக்காது. தெய்வீக நாட்டம் குறையலாம். தொழில்துறையில் முன்னேற்றம் குறையலாம். எதிர்பார்ப்புகள் நிறைவேறும். நண்பர்கள் விசுவாசமாக இருப்பர்.

### மீனம்



**பூரட்டாதி4,உத்தரட்டாதி,ரேவதி**

காரியத்தடை இருக்கும். பிரயாண வாய்ப்பு பாதிக்கலாம். பணம் இருக்கும். உறவினர், அயலவர் விசுவாசமாக இருப்பர். தாய் நலமில்லை. தந்தை நலம். வீடு, வாகனம் செலவை ஏற்படுத்தலாம். மாணவர்கள் கல்வியில் அதிக அக்கறை காட்டார். உடல் நலமுண்டு. பகை விலகும். திருமண வாய்ப்பு காலதாமதமாகலாம். புதிய முதலீடுகள் அமையலாம். அதிஷ்டம் உண்டு. தெய்வீகநாட்டம் மேலோங்கும். தொழில்துறையில் முன்னேற்றம் குறையலாம். எதிர்பார்ப்புகள் நிறைவேறும்.



# ஜூலைக் கலவரங்களின் கோரக்காட்சிகள்



இலங்கையில் ஆளும் சிங்கள வர்க்கங்களால் கடந்த 60 வருடங்களாக தமிழ் மக்கள் மீது இழைக்கப்பட்டு வரும் கொடூரங்களை எடுத்துக்காட்டும் புகைப்படக் கண்காட்சி ஒன்று பிரிட்டன் நாடாளுமன்ற வளாகத்தில் நடந்திருக்கின்றது.

1983இன் ஜூலைக் கலவரங்களை நினைவு கூரும் வகையில் பிரிட்டன் தமிழர் பேரவையால் ஏற்பாடு செய்யப்பட்டிருந்த இந்தப் புகைப்படக் கண்காட்சியில் இலங்கை சுதந்திரமடைந்தது முதல் இப்போது வரை தமிழர்கள் மீது இழைக்கப்பட்ட கொடூரங்கள் அட்டூழியங்கள் புகைப்படங்களாக காட்சிப்படுத்தப்பட்டன. குறிப்பாக 1958 ஆம் ஆண்டு தமிழர்கள் மீதான முதலாவது இனக்கலவரம் கட்டவிழ்த்துவிடப்பட்டதுமுதல் 1983 ஆம் ஆண்டின் ஜூலைக் கலவரம் வரையான கொடூரங்கள் தத்ரூபமாக பார்ப்போரை மெய்சிலிர்க்க வைக்கும் வகையில் - காட்சிப்படுத்தப்பட்டன.



பிரிட்டிஷ் எம்.பிக்களில் ஒருவரான ஜோன் றியன் அம்மையார் இந்தக் கண்காட்சியை திறந்துவைத்தார். பெரும்பாலான பிரிட்டிஷ் எம்பிக்கள் ஆர்வத்துடனும் ஆச்சரியத்துடனும் இந்தக் கண்காட்சியை பார்வையிட்டனர்.

இலங்கை இனப்பிரச்சினையின் யதார்த்த அடிப்படைகளை இதுவரை புரிந்துகொள்ளா பிரிட்டன் நாடாளுமன்ற உறுப்பினர்கள், இந்தப் புகைப்படக் கண்காட்சியைப் பார்த்த பிறகு ஈழத் தமிழர்கள் மீது கருணைகொண்டு, அவர்களது உண்மையான நிலைப்பாடு களை அங்கிருந்த கண்காட்சி ஏற்பாட்டாளர்களிடம் ஆர்வத்துடன் விசாரித்து அறிந்து கொண்டனர்.

இலங்கையைச் சேர்ந்த நாடாளுமன்ற உறுப்பினர்களான ஜெ.கஜேந்திரன் ஜெயானந்த மூர்த்தி, பத்மினி சிதம்பரநாதன் ஆகியோர் உட்பட பல பிரமுகர்களும் பொதுமக்களும் இக்கண்காட்சியைப் பார்வையிட்டனர்.





தங்கம் உள்ளே
பணம் வெளியே



அதிகூடிய முற்பணம் குறைந்த வட்டி

தங்கத்தின் விலை நாளுக்கு நாள் அதிகரித்துச் செல்கின்றது.
உடனடியாகவே அதன் நன்மையை நாம் உங்களுக்கு வழங்குகின்றோம்.

செலான்
தங்க நகை
அடகுச் சேவை

தங்கப்பவுணுக்கான முற்பணம்
24 கரட் ரூ. 18,250/-
22 கரட் ரூ. 16,600/-

0772 092837, 0773 815140

உங்களுக்கு அவசரமாக பணம் தேவைப்படும் போது மிகவும் விரைவான தீர்வு செலான் அடகுச் சேவை மட்டுமே!

செலான் வங்கி



HOTEL WESTEERN PVT LTD

உங்களுக்குத் தேவையான அனைத்து வசதிகளையும் ஒரே கூரையின் கீழ் பெற்றுக்கொள்ள நாடவேண்டிய ஒரே ஸ்தாபனம். ஒருமுறை விஜயம் செய்து பாருங்கள். வித்தியாசத்தை உணர்வீர்கள்.

No.35, Frankfurt Place, Bambalapitiya, Colombo -
T.P:+94 11 2507161, +94 11 2507163, +94 4518485
Fax:+94 11 4518481 E-mail:info@hotelwesteern.c
Website:www.hotelwesteern.com